விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
## Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 21 வெள்ளிக்கிழமை (07.11.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 323

# ஐ.நாவுக்கு ஒத்துழைப்போரை அடக்குகிறது இலங்கை அரசு!

## அமெரிக்கா பகிரங்க குற்றச்சாட்டு

(ஜெனிவா)

ஐ.நாவுக்கு ஒத்துழைப்பு வழங்குவோரை மௌனமாக்க இலங்கை முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அமெரிக்கா பகிரங்கமாக குற்றம் சுமத்தியுள்ளது.

அத்துடன் இலங்கையின் இந்த நடவடிக்கையானது ஐ.நாவின் மீதான தாக்குதல் என்பதனை உணர்ந்து கொள்ள வேண்டும் எனவும் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவுக்கான அமெரிக்கப் பிரதிநிதி கீத் ஹாப்பர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று முன்தினம் புதன்கிழமை டுவிட்டரில பதிவு செய்துள்ள குறிப்பு ஒன்றில், ஐ.நாவுக்கு ஒத்துழைப்பு வழங்குவோரை மௌனமாக்க முற்படுவதானது, ஐ.நா மீதான தாக்குதல் என்பதை இலங்கை புரிந்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளுக்கு சாட்சியங்களை வழங்கும் படிவங்களை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கிளிநொச்சி கிராஞ்சியைச் சேர்ந்த சின்னத்தப்பி கிருஸ்ணராசா (வயது 57) என்பவர் இரணைமாதா என்னும் இடத்தில் வைத்து பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

அத்துடன், வவுனியாவைச் சேரந்த ஆழ்வாப்பிள்ளை விஜயகுமார் என்பவரையும் பொலிஸார் தேடி வருகின்றனர்.

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித வுரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதேவேளை, ஐ.நா மனிதவுரி

20ஆம் பக்கம் பார்க்க....




## தகுதியை இழந்த மகிந்த நீதிமன்றை நாட முடியாது
### சட்டத்தில் இடமில்லை என்கிறது ஜே.வி.பி


(கொழும்பு)

ஜனாதிபதியின் 4 ஆண்டு பதவிக்காலம் முடிவடைந்த பின் தேர்தலை நடத்த முடியுமா, தற்போதைய ஜனாதிபதி அந்த தேர்தலில் போட்டியிட முடியுமா? ஆகிய இரண்டு விடயங்கள் தொடர்பில் உயர்நீதிமன்றத்திடம் கருத்தை கோர ஜனாதிபதி மகிந்தவுக்கு அரசியல் அமைப்புச் சட்டத்தில் இடமில்லை என ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை பெலவத்தையில்

02ஆம் பக்கம் பார்க்க....

## ‘கடற்படையினரை வெளியேற்றுங்கள்’
### கோத்தாவிடம் மன்னார் ஆயர் தெரிவிப்பு



(கொழும்பு)

மன்னாரில் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள முள்ளிக்குளம் பகுதியில் தமிழ் மக்களை மீள் குடியேற்றுவது தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் மன்னார் மறை மாவட்ட ஆயர் அதிவணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப்புக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் புதன்கிழமை கொழு ம்பில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் மன்னார் ஆயருடன் மன்னார் மறை மாவட்ட குருமுதல்வர் விக்டர் சூசை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண் டனர். இந்தச் சந்திப்பு தொடர்பில் மன்னார் ஆயர் கூறுகையில், மன்னாரில் கடற்படையினரின் ஆக்கிரமிப்பில் பல வருடங்களாக முள்ளிக்

20ஆம் பக்கம் பார்க்க...

## சீன போர்க் கப்பலினால் குந்தகம் ஏற்படாது

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தில் ஒரு கிழமையாக தரித்து நின்ற சீனாவின் நீர்மூழ்கிக் கப்பலும், போர்க் கப்பலும், நேற்றுமுன்தினம் புதன் கிழமை அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளன.

கொழும்புத் துறைமுகத்துக்கு கடந்த மாதம் 31ஆம் திகதி வந்த சீனக் கடற்படையின் சாங்செங் - 2 என்ற நீர்மூழ்கிக் கப்பலும், சாங் சிங்டாவோ என்ற போர்க்கப்பலும் இங்கு சீனாவுக்குச் சொந்தமான கொள்கலன் முனையத்தில் கடந்த ஆறு நாட்களாகத் தரித்திருந்தன.

இந்நிலையில், இவ்விரு கப்பல்களும் நேற்றுமுன்தினம் கொழும்புத் துறைமுகத்தை விட்டுப் புறப்

20ஆம் பக்கம் பார்க்க....

## தூக்குத் தண்டனை விவகாரம்
### 13 மாவட்ட மீனவர்கள் சாகும்வரை உண்ணாவிரதம்

(கொழும்பு)

இலங்கையில் ஐந்து இந்திய மீனவர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை எதிர்த்து மேல்முறையீடு செய்வதில் தாமதம் ஏற்படுவதை கண்டித்து 13 மாவட்ட மீனவர்கள் பலர் நேற்று முதல் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர்.

இராமேஸ்வரம் அருகே தங்கச்சிமடத்தை சேர்ந்த மீனவர்கள் எமர்சன், அகஸ்டஸ், வில்சன், பிரசாத், லாங்லெட் ஆகியோர் கடந்த 2011-ம் ஆண்டு நவம்பர் 28ம் திகதி கடலுக்கு மீன்பிடிக்க சென்றபோது

20ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு வருவோருக்கு தடை
### அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தொடர முடியும்!

(கொழும்பு)

வடக்குக்கு பயணம் செய்வது தொடர்பில் வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு இலங்கை பாதுகாப்பு அமைச்சு விதித்துள்ள கட்டுப்பாட்டுத் தடைக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்ய முடியும் என்று வழக்கறிஞர்களுக்கான கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

வடக்குக்கு செல்லுகின்ற வெளிநாட்டுப் பிரஜைகள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை பெற்றிருக்க வேண்டும் என்று இலங்கை அரசாங்கம் அண்மையில் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், அரசாங்கத்தின் இந்த உத்தரவு அரசியலமைப்புக்கு முரணானது என்று சட்டத்தரணிகளின் கூட்டமைப்புக் கூறியுள்ளது.

இது தொடர்பில் வழக்கறிஞர்களுக்கான கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் அரசியலமைப

20ஆம் பக்கம் பார்க்க....

## எமக்காக உயிர் துறந்தவர்கள் நினைவு கூரப்பட வேண்டியவர்கள்
### ரவிராஜ் நினைவு நிகழ்வில் சுமந்திரன் உரை

(யாழ்ப்பாணம்)

உலக சரித்திரத்திலேயே மிகவும் விசாலமான முறையில் ஆயுதப் போராட்டத்தினை தமிழர்கள்தான் நடத்தி சென்றவர்கள்.

அப் போராட்டத்தினை பல தசாப்த காலமாக திறம்பட நடத்திச் சென்று எங்களுக்காக உயிர் நீத்தவர்கள் நீங்கா நினைவிலுள்ளனர்.

என்றும் அவர்கள் நினைவு கூரப்பட வேண்டியவர்கள் அவர்களினை

02ஆம் பக்கம் பார்க்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்



## திருமதி சரஸ்வதி மார்க்கண்டு

யாழ்.இணுவில் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி மார்க்கண்டு கடந்த 05.11.2014 புதன்கிழமை அன்று அகால மரணம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல் :

சு.மார்க்கண்டு (கணவர்)

பிள்ளைகள்: மா.சிவஞானம் (வீதி அபிவிருத்தி திணைக்களம்)

மா.சிவப்பிரமம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்)

(8253)

## திருமதி நவமணி பத்மநாதன்



பருத்தித்துறை, புலோலி மத்தி, கந்த உடையார் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவமணி பத்மநாதன் 05.11.2014 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகாலிங்கம் சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் (நில அளவைத் திணைக்களம்), சிரோன்மணி, இராமசாமி (ஓய்வூதியர் வடமராட்சி கல்வி வலயம்) ஆகியோரின் சகோதரியும், ஜெயக்குமாரி (கொழும்பு), கமலகுமாரி, இராசேந்திரம் (டென்மார்க்), யோகேந்திரன் (டென்மார்க்), ஞானேந்திரன் (முன்னாள் அஞ்சல் அலுவலக ஊழியர்- பருத்தித்துறை), காலஞ்சென்ற சிவகுமாரி ஆகியோரின் தாயாரும் பாலசுப்பிரமணியம் (ஓய்வூதியர் R.D.A), ஆனந்தராணி (டென்மார்க்), சுஜாதா (டென்மார்க்), யமுனா ஆகியோரின் மாமியாரும் கஸ்தூரி (டென்மார்க்), வர்ணஜா (டென்மார்க்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.11.2014) காலை அவரது இல்லத்தில் நடை பெற்று 10 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கந்தஉடையார் ஒழுங்கை,
புலோலி மத்தி, பருத்தித்துறை.

(சி-8983)

தகவல் :
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## வேலாயுதர் சொர்ணலிங்கம்

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதர் சொர்ணலிங்கம் (ஓய்வு பெற்ற நில அளவையாளர், தலைவர் ஞானபாஸ்கரோதய சங்கம்) அவர்கள் நேற்று (06.11.2014) அன்று வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் தம்பாபிள்ளை - செல்லம்மாள் தம்பதியரின் பேரனும் காலஞ்சென்ற வேலாயுதர்-சிவபாக்கியம் தம்பதியரின் மகனும் இந்துமதியின் அன்புக் கணவரும் அமரர் நடராஜா மற்றும் இரத்தினேஸ்வரி தம்பதியரின் மருமகனும் Dr.சூரியகுமார் (UK), காலஞ்சென்ற சிவகுமாரி, இராஜசூரியர், சாந்தகுமாரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சுஜீதன், கார்த்திகா, சாய்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மரியதாசன் (திட்டமிடல் பணிப்பாளர் NRRP-C7 RDA யாழ்ப்பாணம்), Dr.சாந்தினி, கோமதி (UK), நளினி (UK), திவாகரன் (UK) ஆகியோரின் மைத்துனரும், Dr.காண்டீபன், Dr.பிரசாந்தன், Dr.காயத்திரி,கிறிசாந், பிரியங்கா, மிலெனி, கிறிசாந்தி, பிரீத்தா, நனிஸ்கா ஆகியோரின் அன்பு மாமனாரும் சோபிசாந், ஹம்சாயினி, சதுர்சன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2014) வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

151, ஜீ.பி.எஸ் வீதி, கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

(8252)

தகவல் : குடும்பத்தினர்
தொ.பே : 0212230128

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்காக...

கொச்சைப்படுத்த முடியாது என தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன், தற்போது எமது சூழ்நிலையைப் பொறுத்தவரையில் ஆயுதப் போராட்டத்திற்கு இடமில்லை. மென்தீவிரத்தின் மூலமே எமக்கான தீர்வினைப் பெற முடியும் என அவர் தெரவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான நடராஜா ரவிராஜின் 8 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் சட்டத்தரணியும் வட மாகாணசபை உறுப்பினருமான கே.சயந்தன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நினைவுப் பேருரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமரர் ரவிராஜினை சுட்டுக் கொன்றவர் சில நாட்களிலேயே யாரென இனங்காட்டப்பட்டிருந்த போதிலும் 8 வருடங்களாகியும் இன்றுவரை நீதிமன்ற தண்டனைக்குட்படுத்தப்படாத நிலையில் தற்போது வெளிநாடொன்றில் வசித்து வருகிறார்.

நாட்டில் யாருக்கு எதிராக குற்றமிழைக்கப்பட்டதோ அம்மக்களின் உரிமைக்காக ரவிராஜ் குரல் கொடுத்திருந்தார்.

சிங்கள மக்களிடையே தமிழர்களின் பிரச்சினைகளினை கொண்டு சென்று ஆதரவினை பெற்று சிங்கள மக்களினையும் எமக்காக குரல் கொடுக்க வைக்க முயன்றார்.

இவ்வாறு சிங்கள மக்களிடையே எமது பிரச்சினையை கொண்டு செல்லக் கூடியவர்களிற்கான இடம் இன்று வெற்றிடமாக தமிழ்த் தேசிய அரசியலில் காணப்படுகிறது.

தற்போது எமது சூழ்நிலையைப் பொறுத்தவரையில் ஆயுதப் போராட்டத்துடன் கூடிய வன்வலுவுக்கு இடமில்லை. அஹிம்சையுடன் கூடிய-மென்தீவிரத்திற்கே இடமுண்டு.

உலகம் போன்றும் தலைவர்களான நெல்சன் மண்டேலா, தலாய்லாமா, மகாத்மா காந்தி ஆகியோர் மென்தீவிரத்தினூடாகவே போராடி வெற்றி பெற்றனர்.

இன்றைய தமிழ் அரசியலில் இருக்கிறதனை இல்லாமல் செய்யும் முயற்சியில் எம்மில் பலர் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றர். இது எமது தலையில் நாமே மண்ணை அள்ளிப் போடுவது போன்றது.

மலையக மக்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என யார் என்றாலும் அம்மக்களிற்கு தீங்கு இழைக்கப்படும் போது அம்மக்களிற்கும் வேறுபாடின்றி நாம் குரல் கொடுத்தால் தான் சர்வதேசம் எம்மை உற்று நோக்கும்.

ஜனாதிபதி பேச்சுக்கு அழைக்கும் போது நாம் பேசவேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு உள்ளது. ஜனாதிபதி அழைக்கும் போது பேசா விட்டால் எம்மை தீவிரவாதிகள் கடும் போக்குவாதிகள் என உலகம் கூறிவிடும்.

அரசினைப் பொறுத்வரையில் உலகிற்கு காட்டுவதற்காகவே இப்பேச்சுவார்த்தை, அரசு காட்டும்விளையாட்டினைநாமும்காட்டுகின்றோம்.

சர்வதேசம் எம்மை நன்கு புரிந்து கொண்டுள்ளது. எமது கொள்கைகள் தொடர்பில் நன்றாகவே சர்வதேசம் அறிந்து வைத்துள்ளது.

மென்வலு மூலம் வருகின்ற மாற்றம் நிலையானதாக உண்மையாக இருக்கும். அதனால் தான் இரவோடு இர்வாக கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தம் இன்றுவரை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மென்வலு மூலம் பெரும்பான்மை மக்களினை எம்பக்கம் கொண்டுவர வேண்டும் இதற்கு எம் மக்கள் ஆதரவு வழங்க வேண்டும்என்றார்எம்.ஏ.சுமந்திரன்எம்.பி. (செ-4)

# தகுதியை...

உள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ஒருவருக்கு இப்படியான கருத்தை உயர்நீதிமன்றத்திடம் கோரும் அதிகாரம் அரசியலமைப்பில் அவருக்கு வழங்கப்படவில்லை. அரசியலமைப்புச் சட்டத்தின் 129 வது சரத்தின்படி இந்த கருத்து கோரப்பட்டுள்ளது.

பொதுவான முக்கியமான பிரச்சினைகள், சட்ட ரீதியான சம்பங்கள் பற்றிய பிரச்சினைகள் எழும்போது அது குறித்து உயர்நீதிமன்றத்தின் கருத்தை அறிந்து அதனை நிவர்த்தி செய்து கொள்ளலாம். எனினும் இதில் எந்த பொதுவான முக்கியத்துவமும் கிடையாது.

மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தகுதியற்றவராகியுள்ளார். அது மகிந்த ராஜபக்ஷவின் தனிப்பட்ட பிரச்சினை.

அவர் 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் திகதி இரண்டாம் தவணைக்காக மக்களினால தெரிவு செய்யப்பட்வுடன் மீண்டும் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடும் தகுதியை இழந்து விட்டார்.

18வது திருத்தச் சட்டத்திலும் மகிந்தவின் தகுதியிழப்பு நீக்கப்படவில்லை. தகுதியிழந்த மகிந்த ராஜபக்ஷ மீண்டும் போட்டியிட முடியுமா முடியாதா என்ற கேள்வியே எழுப்பட்டுள்ளது. இது குறித்து மகிந்தவுக்கு நீதிமன்றத்தின் கருத்தை கேட்டறிய முடியாது. அத்துடன் கருத்து கோரப்பட்டிருக்கும் அரசியலமைப்பின் சரத்தும் பிழையானது எனவும் அனுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# சோபித தேரர் நேற்று யாழில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்துக்கு வருகை தந்த ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் நேற்று யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கில் இடம்பெற்ற நிகழ்சியில் வைத்து நூறு பசு மாடுகளை யாழ்ப்பாணம் பொது மக்களுக்கு வழங்கியுள்ளார்.

யாழ்.மாவட்ட படைகளின் கட்டளைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் உதய பெரேரா மற்றும் படை அதிகாரிகள் உட்பட படையினரும் பொதுமக்களும் கலந்து கொண்டார்கள்.

வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் இந்த பசுமாடுகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (செ-11)

# பௌர்ணமி விழா

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம் நடத்தும் பௌர்ணமி விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு ஜெயச்சந்திரன் மண்டபத்தில் தலைவர் சி.ஜி.திருமாலழகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக முன்னாள் பிரபல உதைபந்தாட்ட வீரர் சி.ஜேம்ஸ் எடிங்ரன் பங்குபற்றுகின்றார். சமயமும் வாழ்வும் என்னும் தலைப்பில் சிறப்பு சொற்பொழிவினை யா/புற்றளை மகா வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் வழங்கவுள்ளார். (செ-11)

# கல்வி நிர்வாக சேவை 2013

(கொழும்பு)

இலங்கை கல்வி நிர்வாக சேவை 2013 மட்டுப் படுத்தப்பட்ட பரீட்சையில் ஒவ்வொரு பாடங்களும் 40 புள்ளிகளுக்கு மேலும் மொத்தம் 120 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து இதுவரைகல்வி நிர்வாக சேவை நியமனம் கிடைக்கப் பெறாதவர்கள் இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலினுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலதிக விபரங்களுக்கு 0773112541 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (செ-277)

# பொன்சேகாவின் நிவாரணப் பொருட்களை ஏற்க மறுப்பு



(கொழும்பு)

கொஸ்லந்த, மீரியபெத்த பிரதேசத்தில் மண்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்வையிடுவதற்காக முன்னாள் இராணுவ தளபதியும் ஜனநாயகக் கட்சியின் தலைவருமான சரத் பொன்சேகா, நேற்று வியாழக் கிழமை நிவாரணப் பொருட்க ளுடன் சென்று, அம்மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

இந்நிலையில், அவர் கொண்டுசென்ற நிவாரணப் பொருட்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்க முற்பட்ட போது, அதற்கு அங்கிருந்த அதிகாரிகள் இடமளிக்கவில்லை. மாற்றாக, அந்த நிவாரணங்கள் இம்மக்களுக்கு வேண்டாம், அவற்றை மீண்டும் எடுத்துச் செல்லுங்கள் என அவ்வதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதன்பின்னர், தான் கொண்டுசென்ற நிவாரணப் பொருட்களை பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள கணேசா வித்தியாலய நுழைவாயிலுக்கு அருகில் அடுக்கி வைத்துவிட்டு சரத் பொன்சேகா, கொழும்பு திரும்பியுள்ளார். (இ-5)

## ரணிலே ஜனாதிபதி வேட்பாளர்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிப்பதற்கு எமது கட்சி தீர்மானித்துள்ளது என்று ஐக்கிய தேசிய கட்சியின் பிரதி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய ரயில்வே சேவைகளின் 19ஆவது பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சி சார்பாக யார் ஜனாதிபதி வேட்பாளராக வரவேண்டும் என்பது தொடர்பாக விவாதிக்கவேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் நாம் ஏற்கனவே ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி வேட்பா ளராக போட்டியிட வேண்டும் என்று தீர்மானித்துள்ளோம். (இ)

## மார்பக சத்திரசிகிச்சை மேற்கொண்ட பெண் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில்

(கொழும்பு)

தனது மார்பகங்களை சிறிதாக்கிக் கொள்வதற்காக 50 ஆயிரம் ரூபாவைக் கொடுத்து சத்திர சிகிச்சையொன்றை மேற்கொண்ட பெண்ணொருவர், உயிருக்கு ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்காக வைத்தியரொருவர் 2 இலட்சம் ரூபாய் கேட்டதாகவும் அவரிடம் அவ்வளவு பணம் இல்லாமையினால் 50 ஆயிரம் ரூபாவுக்கு, குறித்த வைத்தியரின் களனியில் அமைந்துள்ள வீட்டிலேயே இந்த சத்திர சிகிச்சையை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சத்திர சிகிச்சையின் போது ஏற்பட்ட காயம் காரணமாக அப்பெண் பாதிக்கப்பட்ட நிலையிலேயே கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு சத்திர சிகிச்சை மேற்கொண்ட வைத்தியரின் வீட்டில், சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கான வசதிகள் உள்ளனவா என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பெரிய மார்பகங்களை சிறிதாக்குவதாக வெளியான விளம்பரமொன்றைப் பார்த்தே, 41 வயதான மேற்படி பெண், கடந்த ஒக்டோபர் 17ஆம் திகதி அவ்வைத்தியரை நாடி இந்த சத்திரசிகிச்சையை மேற்கொண்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். (இ)


உடன் தேவை

நல்லூரில் இயங்கும் அச்சகம் ஒன்றில் கணனி வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை.

தொடர்புகளுக்கு:-
0777165589

(8246)


## கடற்றொழிலாளர்கள் மாநாட்டிற்கு யாழிலிருந்து 200 பேர் பங்கேற்பு

கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் கொழும்பில் எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவுள்ள கடற்றொழில் சம்மேளனத்தின் தேசிய மாநாட்டில் யாழ்.மாவட்டம் சார்பாக 200 பேர் கலந்து கொள்ளவுள்ளதாக யாழ்.கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்கள பிரதிப் பணிப்பாளர் நடராசா கணேசமூர்த்தி தெரிவித்தார்.

இந்த மாநாடு வருடா வருடம் அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படுகின்றது. கிராமிய கடற்றொழிலாளர் சங்கத்தை சேர்ந்த மீனவ சங்க தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் அங்கத்தவர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

முன்னைய வருடங்களை விட இம்முறையே யாழ்.மாவட்டத்திலிருந்து அதிகளவானவர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர். மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளவர்கள் தொடர்பிலான பெயர் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் தற்போது முனனெடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## பன்றி நெல் களையையும் அழிக்க விரைவில் நடவடிக்கை எடுங்கள்

### விவசாயிகள் கோரிக்கை


கிளிநொச்சி குஞ்சுப்பரந்தன் வயல் நிலங்களில் பன்றி நெற் களையும் நெற்பயிர்களுடன் போட்டியிட்டு வளர்வதால் நெற்பயிர்களின் வளர்ச்சி பாதிக்கப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களிலும் விவசாயப் பகுதியினர் இதனை முழுமையாக அழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்த போதிலும் தொடர்ச்சியாக நெல் விதைக்கப்பட்ட வயல் நிலங்களில் இந்த பன்றி நெல் களையின் பெருக்கம் அதிகமாகவே காணப்படுகிறது.

பார்த்தீனியம் எனப்படும் களையை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது போன்று வட மாகாண விவசாய அமைச்சு இந்தப் பன்றி நெல் களையின் பெருக்கத்தை கட்டுப்படுத்தி விவ்சாயிகளின் நெற் பயிர் செய்கைக்கு உதவ வேண்டுமென இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் மட்டத்திலும் அமைச்சு மட்டத்திலும் இக் களையை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதே விவசாயிகளின் கோரிக்கையாகும். (அ-2-254)

## பழைய நீர்த்தாங்கியினை அகற்ற துரித நடவடிக்கை



மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள சுமார் 60 வருடங்கள் பழைமை வாய்ந்த நீர்த்தாங்கியை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மன்னார் நகர சபை முன்னெடுத்துள்ளதாக மன்னார் நகர சபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்துள்ளார்.

குறித்த நீர்த்தாங்கியை அகற்றுவது தொடர்பில் நேற்று முன்தினம் மாலை மன்னார் நகர சபையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு.

"எதிர்வரும் 11 ஆம் திகதி நீர்த்தாங்கியை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இந்நீர்த்தாங்கி யுத்த காலத்தில் கடுமையாக சேதமடைந்தது. மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் விளையாடுகின்ற சில விளையாட்டு வீரர்களுக்கு காயங்கள் ஏற்பட்ட சம்பவங்களும் உள்ளன.

இந்நிலையிலே மக்களின் கோரிக்கைக்கு அமைவாக உடனடியாக இந்த வேலைத்திட்டத்தை மன்னார் நகரசபை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையுடன் இணைந்து மேற கொண்டுள்ளது. இப்பணிக்காக போக்குவரத்து பாதைகளும் மாற்றப்பட்டுள்ளன. அதுதொடர்பில் மன்னார் நகர சபையினால் மக்களுக்கு அறிவிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## இராசி பலன்

7.11.2014
(ஐப்பசி 21, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை- 5.59 மணிக்கு
பிரதமை பின்னிரவு 3.34 மணிவரை
பரணி பின்னிரவு 4.06 மணிவரை
இராகுகாலம் 10.35-12.05 மணிவரை
சுபநேரம் 6.05-7.35 மணிவரை
கார்த்திகை விரதம்,
மூன்றாம் ஐப்பசி வெள்ளி

வளவன்

**மேடம்:** சிலர் மீது காரணம் இல்லாமல் கோபம் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டில் ஈடுபாடு காட்டுவீர்கள்.

**இடபம்:** சிந்தித்து செயற்படவேண்டிய நாள், சுப செலவுகள் அதிகரிக்கும், மனச்சஞ்சலங்கள் கூடும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்:** நண்பர்கள் மத்தியில் பாராட்டும் புகழும் அதிகரிக்கும், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், பயணத்தால் பலனுண்டு, தலைமைப் பொறுப்புக்கள் தேடி வரலாம்.

**சிம்மம்:** சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், 'திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும், ஆன்றோர் சந்திப்புண்டு.

**கன்னி:** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், செலவுகள் அதிகமாகும் வேலைச் சுமை கூடும், எடுத்த காரியங்கள் தாமதமாகலாம்.

**துலாம்:** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்:** பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், உடன்பிறப்புக்கள் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய முன்வரலாம், ஆரோக்கியமான நாள், முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**தனுசு:** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், மைத்துனர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், புத்தி சாதுரியமாக நடந்து காரியம் சாதிப்பீர்கள்.

**மகரம்:** பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கும்பம்:** மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், எதற்காகவும் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

**மீனம்:** வருங்கால நலன் கருதி சேமிக்க நினைப்பீர்கள், உங்களின் கருத்துக்களை பலரும் கேட்டு நடக்க முன்வரலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண மதுவரி திணைக்களத்துக்கு 29 பேர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்

மதுவரித் திணைக்களத்தின் வட மாகாண அலுவலகங்களில் கடமையாற்றுவதற்காக 29 புதிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் அரியாலை, புங்கன்குளம் சனசமூக நிலைய மைதானத்தில் வைத்து நேற்று வழங்கப்பட்டன.

மதுவரித் திணைக்களத்தின் 3 பெண் பாதுகாவலர், 18 ஆண் பாதுகாவலர் மற்றும் 8 மதுவரி பரிசோதகர்கள் ஆகியோருக்கான நியமனங்களே வழங்கப்பட்டன.

இவர்கள் தங்கள் பயிற்சிகளை முடித்து அணிவகுப்பு மரியாதையை மதுவரி திணைக்கள ஆணையாளர் வசந்த ஹப்பு ஆராச்சிக்கு செலுத்தி தங்கள் பதவிகளை பொறுப்பேற்றுக்கொண்டனர்.

அத்துடன், பயிற்சியின் போது சிறந்த திறன்களை வெளிப்படுத்திய அலுவலர்களிற்கான வெற்றிக்கேடயங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், மதுவரி திணைக்கள ஆணையாளர் வசந்த ஹப்புஆராய்ச்சி, மதுவரித் திணைக்கள மல்லவ குற்றப்பிரிவு ஆணையாளர் என்.விதானகே, பிரதி ஆணையாளர் வசந்த சமரகே, யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (இ-5)

பொலிஸாருக்கு புதிய சீருடை- செய்தி



நன்றி:-அததெரண

# யாழ்ப்பாண ஐஸ்கிறீம் உற்பத்தி மீதான நடவடிக்கைகள் மீது சந்தேகம் உள்ளது

யாழ்ப்பாண ஐஸ்கிறீம் உற்பத்தி நிறுவனங்கள் மீதான நடவடிக்கைகள் மீது எமக்கு சந்தேகம் ஏற்படுகின்றது எனவும் உற்பத்தியாளர்களின் கோரிக்கையில் நியாயமும், உற்பத்தி நிலையங்களின் சுகாதார நடைமுறைகளில் முறையான நேர்த்தியும் இருக்குமாக இருந்தால் கோரிக்கைகள் தொடர்பாக நிச்சயம் கவனம் செலுத்தபடும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் நேற்றைய தினம் ஐஸ்கிறீம் உற்பத்தி நிறுவன உரிமையாளர்களை அமைச்சர் தொலைபேசி வாயிலாக கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தா

யாழ்ப்பாணத்தில் ஐஸ்கிறீம் உற்பத்தி நிறுவனங்களை நடத்தி வரும் சுமார் 35 உரிமையாளர்கள் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள அமைச்சரின் அலுவலகத்தில் அமைச்சருடன் கலந்துரையாடினார்கள்.

அவர்கள், கடந்த ஒருமாத காலத்துக்கும் மேலாக பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் மற்றும் அவரது குழுவினரின் செயற்பாடுகள் காரணமாக தமது தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் உரிமையாளர்கள், ஊழியர்கள் என சுமார் 2500பேர் நேரடியாகவும் கொள்வனவு செய்து விநியோகம் செய்யும் சுமார் 15 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களும் தொழிலற்றுள்ளதாகவும் தெரிவித்தனர்.

சிறிய அளவிலான கைத் தொழில போல் பல வருடங்களாக ஐஸ்கிறீம் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுவருவதாகவும் முறையான பிரதேச சபை, மாநகர சபை மற்றும் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோரின் அனுமதியையும், சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டே தொழில் செய்து வந்துள்ளதாகவும், இதுவரை யாழ்.போதனா வைத்திய சாலையிலோ, பிரதேச வைத்தியசாலைகளிலோ ஐஸ்கிறீம் உண்டதால் நோயாளியாகி எவரும் மருத்துவம் பெற்றதாக நாம் அறிந்ததில்லை. எங்களது பிள்ளைகளும் இதையே சாப்பிடுகின்றார்கள். நாம் சுகாதாரத்துக்கு கேடாகவோ, முறையற்ற விதத்திலோ தொழில் செய்வதில்லை.

ஆனால் தற்போது எமது தொழில் நிறுவனங்களை பரிசோதிப்பவர்களாக வருகின்றவர்கள், யாழ்ப்பாண குடி தண்ணீரில் மலத்தொற்று உள்ளதாகவும் அதனால் வாந்திபேதி, வயிற்றோட்டம் ஆகிய நோய்களை உண்டு பண்ணக் கூடிய கிருமி உள்ளதாகவும் கூறுகின்றனர். அதனால் அந்த நீரைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் ஐஸ்கிறீமில் சுகாதாரக்கேடு இருப்பதாக கூறுகின்றனர். நாங்கள் தண்ணீரை சுட வைத்து பாவிப்பதாகவும், அல்லது உரியவாறு வடிகட்டிப் பாவிப்பதாகவும் கூறினால், தயாரிக்கும் இடம் சரியில்லை, சுகாதாரமான முறைமை இல்லை, குளிர்சாதனப் பெட்டி சரியில்லை, களஞ்சியப்படுத்தும் விதம் சரியில்லை, பாவிக்கும் மூலப்பொருட்களின் கரைசல்கள் சரியில்லை, ஊழியர்களுக்கு தங்குமிட வசதியில்லை, ஊழியர்களுக்கு மருத்துவ சான்றிதழ் வேண்டும் என்று எம்மை தொழிலைத் தொடர விடாமலிருக்க காரணங்களைத் தேடித்தேடி முன்வைக்கின்றார்கள். இவற்றைப்பார்க்கும்போது தென் இலங்கையிலிருந்து ஐஸ் கிறீம் விநியோக உரிமத்தை பெற்றுக் கொண்டிருப்போருக்காக இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றதோ என்ற சந்தேகம் எமக்கு ஏற்படுகின்றது.

நாம் சிறிய அளவிலேயே தொழில் செய்கின்றோம். அதற்குத் தேவையான நடைமுறைகளையே நடைமுறைப்படுத்துகின்றோம். எனப்பல விடயங்களை அறிக்கை மூலம் சுட்டிக்காட்டினாா .(இ-5)




வைத்திய கலாநிதி. இ.கௌரிபாலன்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பழைய மாணவன் (1962-1968)

நடத்தும்

இலவச யோகாசன அறிமுகமும் பயிற்சி வகுப்பும் தியானமும்-சமய சார்பற்றது

இடம்:- நெல்லை முருகன் திருமண மண்டபம்
காலம்:- 09.11.2014 ஞாயிற்றுக்கிழமை
நேரம்:- காலை 9.00-10.30 மணிவரை

இந்நிகழ்வின் மூலம்......

- ✦ யோகாசனம் பற்றிய பூரண அறிவைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- ✦ மன நிம்மதி, மனத்திருப்தி ஏற்படும்.
- ✦ ஞாபகசக்தியை அதிகரித்துக்கொள்ள முடியும்.
- ✦ உடல் வலிமையைப் பேணமுடியும்.
- ✦ ஆரோக்கியமானதும் ஒழுக்கமானதுமான வாழ்வை வாழமுடியும்.
- ✦ மாரடைப்பு ,இரத்த அழுத்தம்,இழுப்பு, சலரோகம் போன்ற நோய்களை குறைத்தல் அல்லது பூரணமாக நீக்குதல்.
- ✦ மாணவர்களுக்கு மிக உதவியாக இருக்கும்.

டாக்டர் இ.கௌரிபாலன் அவர்கள் இந்தியாவிலே 21 வாரங்களாக "ஈசா யோகா" பயிற்சியினை "சற்குரு" சுவாமிகளிடம் முறைப்படி பயிற்சி பெற்று கைதேர்ந்த ஆசானாக உள்ளார். தற்போது இங்கிலாந்தில் வசிக்கிறார்.

எனவே இவ் அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாது சிறியோர் முதல் பெரியோர் வரை இப்பயிற்சி நெறியில் கலந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

புறொஜெக்ரர் மூலம் விளக்கப்படங்கள் காண்பிக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படும்

"அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்"

தொடர்பு:-0719247919
rgbalan@gmail.com






## பரிசில் தினவிழா


(யாழ்ப்பாணம்)


யா/நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் வருடாந்த பரிசில் தின விழா நாளை காலை 9 மணிக்கு பாட சாலை முதல்வர் ந.தேவராஜா தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக இலங்கை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியிலாளர் தம்பிராசா வசந்தகுமார், கௌரவ விருந்தினராக வடமராட்சி வலயஆரம்பக்கல்விஆசிரியஆலோசகர் ரவீந்திரன் யசோதரன், சிறப்பு விருந்தினர்களாக தர்மலிங்கம் குடும்பத்தினரும் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி கீதா வசந்தகுமார் வழங்கி கௌரவிக்கவுள்ளார். (இ-5)

# வடக்கு மாகாண விவசாய அமைச்சின் மலர்க்கண்காட்சி நல்லூரில் ஆரம்பிப்பு







வடமாகாண விவசாய அமைச்சு மரநடுகை மாதத்தையொட்டி ஏற்பாடு செய்திருந்த மலர்க்கண்காட்சி நேற்று முன்தினம் புதன் கிழமை நல்லூர் சங்கிலியன் பூங்காவில் ஆரம்பமாகியது. வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனும் வடமாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவும் மலர் நாடாவை வெட்டிக் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தனர்.

வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் இருந்தும் அலங்காரத் தாவரங்களையும், பயன்தரு மரக் கன்றுகளையும் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் பிரபல்யமான பண்ணையாளர்கள் இக்கண்காட்சியில் தங்கள் உற்பத்திகளைக் காட்சிப்படுத்தியிருப்பதோடு விற்பனையும் செய்து வருகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் முதல்முதலாக நடைபெறும் மலர்க்கண்காட்சி என்பதால் ஆர்வத்தோடு ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டதோடு தாவரங்களை வாங்கிச் சென்றதையும் காணக்கூடியதாக இருந்தது.

இளம் வயதினர் மரநடுகையில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் நோக்கில் இக்கண்காட்சிக்கு வரும் பார்வையாளர்களில் 15 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு இலவசமாக மரக்கன்றுகள் விநியோகிக்கப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இதனால் பெருவாரியான பாடசாலை மாணவர்கள் வரிசையில் நின்று மரக்கன்றுகளை வாங்கிச் சென்றதையும் காணமுடிந்தது.

மலர்க்கண்காட்சியின் தொடக்க நிகழ்ச்சியில் வடமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் எதிர்க்கட்சி தலைவர் சி. தவராஜா, மாகாணசபை உறுப்பினர்கள் கே.சயந்தன், கே.என். விந்தன் கனகரத்தினம், அ. பரஞ்சோதி, பா. கஜதீபன், இ. ஆனல்ட், மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், பிரதி விவசாயப் பணிப்பாளர் கி. சிறீபாலசுந்தரம், உதவி விவசாயப் ப்ணிப்பாளர் அஞ்சனாதேவி ஸ்ரீரஞ்சன், மீன்பிடி அமைச்சின் செயலாளர் ஆர். வரதீஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

இம்மலர்க்கண்காட்சி எதிர் வரும் 09 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமைவரை தினமும் காலை 9 மணி முதல் இரவு 8 மணிவரை நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**சேர்.பொன்.இராமநாதன் நினைவுப்பேருரை**

**சோழர் காலத்து இடையர் சமூகம்: கோவில் கலாசாரத்தின் புறநிலை தொண்டர்கள்.**

**பேருரை வழங்குனர்:-** பேராசிரியர் வ.மகேஸ்வரன்
தலைவர், தமிழ்த்துறை,
பேராதனை பல்கலைக்கழகம்.

**இடம்:-** கைலாசபதி கலையரங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**திகதி:-** 12.11.2014

**நேரம்:-** பிற்பகல் 3.00 மணி

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-8978) பதிவாளர்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**சீமாட்டி லீலாவதி நினைவுப் பேருரை**

**வட இலங்கை பண்பாட்டுத்தளத்தின் உருவாக்கமும் உருவாக்கியவர்களும்-தொல்லியல் மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு விளக்கம்**

**பேருரை வழங்குனர்:-** பேராசிரியர் செல்லையா கிருஸ்ணராஜா
வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**இடம்:-** கைலாசபதி கலையரங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**திகதி:-** 13.11.2014

**நேரம்:-** பிற்பகல் 3.00 மணி

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-8978) பதிவாளர்

## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 18 3/4
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: வங்கி உதவி முகாமையாளர்/ FOLLOWING ENGINEERING
தொ.இ: B/3783

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 17 1/2 செவ் 12 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L (கனடா)
தொ.இ: B/3785

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 48 செவ் 7 இல்
உயரம்: 178cm
தகைமை/தொழில்:கணக்காளர் (சுவிஸ்)
தொ.இ: B/3787

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 37
உயரம்: 174cm
தகைமை/தொழில்: கனிய அளவையாளர்
தொ.இ: B/3789

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 4
கி.பா: 29
உயரம்: 5'4''
தகைமை/தொழில்:B.B.A
தொ.இ: G/3037

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 3ம்
கி.பா: 19
உயரம்: 5'
தகைமை/தொழில்:BSC
தொ.இ: G/3038

பிறப்பு:1983 RC
நட்சத்திரம்: திருவாதிரை 4
கி.பா: 19 செவ் 12 இல் சூரிசெவ்
உயரம்: 153cm
தகைமை/தொழில்: O/L சொந்த தொழில்(கொலண்ட் PR)
தொ.இ: G/3036

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 42 1/2 செவ் 8 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSC,IIT/ தனியார்
தொ.இ: G/3039

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# பிரச்சினைகளின் சுமையா?

## நம்பிக்கையீனமா? மனத்தளர்வா? வாழ்க்கையில் வெறுப்பா?

நீங்கள் யாராகவும் இருக்கலாம். உங்கள் மன உளைச்சல் உங்களுக்கு எவ்வளவோ வேதனையையும் விரக்தியையும் தரக்கூடும். மனத்தளர்வு; மன அழுத்தம்; மண வாழ்க்கைப் பிரச்சினைகள்; காதல் மற்றும் ஏனைய உறவுச் சிக்கல்கள்; ஆரோக்கியம், பாலியல் சார்ந்த பிரச்சினைகள்; கடன் பழு உட்பட உங்களை வருத்துவது எதுவாயினும் தயவு செய்து எம்முடன் ஒரு தரம் பேசுங்கள்.

### உங்களைப் பற்றி அக்கறைப்பட நாங்கள் இருக்கிறோம்.

உங்களை நீங்களாகவே ஏற்றுக் கொள்வோம். நாம் எவரையும் எடை போடுவதுமில்லை. தீர்ப்புக் கூறுவதுமில்லை. எவ்வளவு நேரம் வேண்டுமாயினும் எம்முடன் மனம் விட்டுப் பேசலாம். உணர்வு ரீதியான ஆதரவை நாம் உங்களுக்கு வழங்குவோம்.

(சி-8977)



**உங்களைப் பற்றிய தகவல்கள் யாவற்றையும் பரிபூரணமான இரகசியத்துடன் பேணுவோம்.**

உங்கள் பெயரைக் கூட எமக்கு நீங்கள் வெளியிட வேண்டிய அவசியம் கிடையாது. உங்கள் தொலைபேசி அழைப்புக்காக அல்லது நேரடி வருகைக்காகக் காத்திருக்கிறோம்.

**குறிப்பு: எம்மால் நிதி உதவி எதுவும் செய்தல் இயலாது. எமக்கு எந்த அரசியல், சமய சார்பும் இல்லை.**

எங்கள் நிலையம் வருடத்தின் எல்லா நாட்களிலும் காலை 9.00 முதல் பி.ப 1.00 வரை திறந்திருக்கும்.

### கை கொடுக்கும் நண்பர்கள்

**(Sri Lanka Sumithrayo Probationary Branch)**

**104, நான்காம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.**

**(021) 222 8117**

### தொண்டர்கள் தேவை

**நீங்கள் உங்கள் சமூகத்தின் மீது அக்கறை கொண்டவரா? பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டு வாழ்க்கையின் எல்லையை நோக்கி நகர்வோருக்கு உணர்வு ரீதியான ஆதரவை வழங்க நீங்கள் தயாரா? வாரத்தில் ஒருநாள் மட்டும் நான்கு மணித்தியாலங்கள் சம்பளம் இன்றிச் சேவையாற்ற வேண்டும். முறையான பயிற்சி வழங்கப்படும். உடனே தொடர்பு கொள்ளுங்கள்.**

08/10/2014 அன்று சிவபதமடைந்த தென் புலோலியூரைச் சேர்ந்த திரு.முத்துக்குமாரு பாலகிருஷ்ணனின் ஞாபகார்த்தமாக அவரது பிள்ளைகளால், பொதுநலன் கருதி இவ் விளம்பரம் பிரசுரிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தி உள்ளோம்

## வெங்கையா நாயுடு தெரிவிப்பு





கொழும்பு மேல் நீதிமன்றத்தால் தமிழக மீனவர்கள் ஐந்து பேருக்கு அண்மையில் விதிக்கப்பட்ட மரணதண்டனை தொடர்பிலான தமது நாட்டு மக்களின் உணர்வுகளை இலங்கையிடம் இந்தியா தெரியப்படுத்தியுள்ளது.

தென்கொரியத் தலைநகர் சியோலில் இடம்பெற்று வரும் ஆசிய பசுபிக் நாடுகளின் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைசசர்களின் கூட்டத்தில் கலந்து கொண்ட இந்தயாவின் நகர அபிவிருத்தி அமைச்சர் வெங்கையா நாயுடு வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்சவை சந்தித்த போதே இது தொடர்பில் தெரியப்படுத்தியுள்ளார்.

இவ்விரு அமைச்சர்களும் சந்தித்துப் பேசிய போது, தமிழக மீனவர்கள் விவகாரம் தொடர்பில் இந்திய அமைச்சர் வெங்கையா நாயுடு பேசியுள்ளதாக, இந்திய அரசாங்க செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது உள்நாட்டு விவகாரங்களில் தான் தலையிடவில்லை என்று குறிப்பிட்ட வெங்கையா நாயுடு, இவ்விடயம் தொடர்பிலான இந்திய மக்களின் உணர்வுகளைப் பரிமாறுவதாக தெரிவித்தார்.

இதனிடையே, மரணதண்டனை விதிக்கப்பட்ட தமிழக மீனவர்களை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா நேற்றுக்காலை வெலிக்கடைச் சிறைச்சாலையில் சந்தித்துப் பேசியுள்ளார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம்28ஆம் திகதி கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண் டிருந்த அகஸ்டஸ், எமர்சன், வில்சன், பிரசாத் மற்றும் லாங்நெட் ஆகிய இராமேஸ்வரம் மீனவர்களை கடற்படையினர் கைது செய்திருந்தனர்.

இவர்களுடன், இலங்கை மீனவர்கள் மூன்று பேர் மீது போதைப்பொருள் கடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டு கொழும்பு மேல் நீதிமன்றம் மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பகிரங்க விவாதத்திற்கு வாருங்கள் சிவஞானத்திற்கு தவராசா அழைப்பு

பகிரங்க விவாதத்திற்கு வருமாறு வடக்கு மாகாணசபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா அழைப்பு விடுத்துள்ளார்.

வடமாகாண சபை நிதி தொடர்பாக அறிவிலித்தனமான விமர்சனங்களை அரசாங்கம் மற்றும் மாகாண சபை எதிர்க்கட்சியினர் தொடர்ச்சியாக குற்றம் சாட்டி வருவதாக மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் நேற்று முன்தினம் பத்திரிகையாளர் சந்திப்பின் போது கூறியதற்கே வடக்கு மாகாண சபை எதிர்க் கட்சித் தலைவர் இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண சபை பதவியேறறு ஒரு வருட காலம் முடிவுற்ற நிலையில், இதுவரை மாகாண சபை மக்களுக்கு எதை செய்துள்ளது என்பது தொடர்பாக மாகாண சபையின் முதலமைச்சரோ, அமைச்சாகளோ அல்லது அவைத் தலைவரோ தொலைக்காட்சியின் முன்பு அல்லது மக்கள் அரங்கொன்றில் நேரடி விவாதத்துக்கு வருமாறு எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பத்திரிகையாளர்களை அழைதது ஒரு பக்கச்சார்பாக பிழையான கருத்துக்களை வெளியிடாமல் நேரடியாக மக்கள் மன்றின் முன் இது தொடர்பான விவாதத்திற்கு வருமாறு வடமாகாண முதலமைச்சரையும், அமைச்சர்களையும், அவைத் தலைவரையும் அழைப்பு விடுவதாக அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

உண்மையில் வட மாகாண சபையின் நிர்வாகத்திற்கு பொறுப்பானவர்கள் முதலமைச்சரும், அமைச்சர்களுமே. அவர்களே நிதிச் செலவீனம் தொடர்பான விடயங்களுக்கு பதில் அளிக்க வேண்டும். அவைத் தலைவர் சபை நடவடிக்கைகளுக்கே பொறுப்பானவர். இருந்தும் இவர்களில் ஒருவரை நேரடி வவாதத்திற்கு தான் மீண்டும் அழைப்பதாக அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 120 |
| தக்காளி | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 50 |
| கோவா | 120 | 80 |
| கரட் | 160 | 200 |
| பூசணி | 40 | 50 |
| புடோல் | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 80 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 |
| பாகற்காய் | 250 | 160 |
| வெண்டிக்காய் | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 120 | 60 |
| -பயற்றங்காய் | 200 | 140 |
| லீக்ஸ் | 200 | 200 |
| பீற்றூட் | 100 | 100 |
| கறிமிளகாய் | 200 | 160 |
| முருங்கைக்காய் | 100 | 120 |
| போஞ்சி | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 30 |
| தேசிக்காய் | 100 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35-40 |
| இராசவள்ளி | 200 | — |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 186

பிருந்தன்




ரத்தினசபாபதி பாலராஜா





பிறோன்சன் பிறோன்சன்




விக்கி கார்த்திக்




கிரி கிரிஷன்




செல்வன் சாது




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சர்வதேச சிறுவர் முதியோர் தின நிகழ்வு

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவின் சர்வதேச சிறுவர், முதியோர் தின விழா எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் பிரதேசசெயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையின் மருத்துவ கலாநிதி மா.ஜெயராஜா, வேல்ட் விசன்நிறுவனத்தின்கிளிநொச்சி கல்வித் திட்டப் பணிப்பாளர் எக்ஸ்அஞ்சலிற்றோ ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2-254)

# பன்னிரெண்டாம் வாய்க்கால் வீதி வழியாக மணல் ஏற்றி பயணிப்பதை நிறுத்துங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அடம்பன் சோலை (சிவநகர்) வயற்காணிகளுக்கு செல்லும் 12 ஆம் வாய்க்கால் வீதி வழியாக உழவு இயந்திரங்களில் தினமும் மணல் ஏற்றி பயணிப்பதால் அவ்வீதி சேதமடைந்து வருவதாக அப்பகுதி விவசாயிகளால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி புதுமுறிப்பு குளத்தின் கீழ் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் அடம்பன் சோலை வயற்காணிகளுக்கு செல்லும் குறித்த வீதியானது கடந்த 40 வருடங்களாக செப்பனிடும் பணி ஏதும் இடம்பெறாது பயணிக்க முடியாத நிலையில் இருந்தது.

கடந்த வருடம் கிளி நொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நிதியுதவியில் குறித்த வீதியைசெப்பனிடும்வேலைகள் கடந்த வருடம் நடைபெற்றது.

எனினும் இப்பகுதி நெற்செய்கையாளர்களின் நன்மை கருதி செப்பனிடப்பட்ட இவ் வீதியால் உழவு இயந்திரங்களில் மணல் ஏற்றி பயணிக்கும் வேலை இடம்பெற்று வருவதாக விவசாயிகளால் சுட்டிக் காட்டப்படுகிறது.

இதனால் இவ் வீதி திருத்தம் செய்யப்பட்டும் சேதமடையும் நிலை தோன்றியுள்ளது.

இந்த வீதியைப் பயன்படுத்தி மணல் ஏற்றுவதை தடுத்து நிறுத்துமாறு அப்பகுதி வாழ் விவசாயிகளால் சம்பந்தப்பட்ட கமக்கார அமைப்புக்களிடம் எடுத்துரைத்த போதிலும் இதுவரையில் எவ்விதமான நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.

எனவே இந்த விடயத்தில் கமநல சேவை நிலையம், விவசாய் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் உயர் அதிகாரிகள் கவனத்தில் எடுத்து மணல் ஏற்றி இவ் வீதி வழியாக பயணிக்கும் நடவடிக்கையினை கட்டுப்படுத்த வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-254)




## முத்துமாரி அம்மன் சிலை திருட்டு


பூநகரி வேரவில் ஈழவூர் குடியிருப்பில் அமைந்துள்ள தகரக் கொட்டகையிலான முத்து மாரி அம்மன் கோயிலினை அண்மையில் விசமிகள் சேதப்படுத்தியதுடன் அங்கு வைக்கப்பட்ட 1 1/2அடி உயரமான கருங்கல்லினாலான அம்மன் சிலையினையும் திருடிச் சென்றுள்ளனர்.

ஏற்கனவே இக் கோயில் கிணற்றினுள் வெட்டிய மாட்டின் தலையினையும் தோலினையும் வீசி விசமிகள் நாசப்படுத்தியதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் அப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும் கோவில் நிர்வாகத்தினரும் இணைந்து பூநகரி நாச்சிக்குடா பொலிஸ் நிலையத்தில் முறையிட்டனர்.

இதனையடுத்து பொலிசார் மேலதிக விசாரணை நடத்தி வருகின்றனர். (2-277)

# அசுத்த நீர் கிணற்றினுள் உட்செல்வதால் தாகத்திற்கு நீரை பருக முடியாதுள்ளது



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு பனிக்கன் குளம் கிராம சேவையாளர் பிரிவில் கடந்த 2012 ஆம் ஆண்டு ஏழு குடும்பங்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்யும் நோக்கில் அமைக்கப்பட்ட கிணற்றினுள் வளாக நீர் உட்செல்வதால் தாகத் திற்குநீரைபருகமுடியாதுஉள்ளதாக அம்மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த கிராம சேவையாளர் பிரிவில் அம்மன் கோவில் வீதியில் அமைக்கப்பட்ட இக் குடிநீர் கிணறானது ஜப்பானிய மக்களின் நன்கொடை உதவியினால் சர்வோதய சிரமதான சங்கத்தினர் நிர்மாணித்துள்ளனர்.

இக்கிணற்றின் உட்புற சீமெந்து பூச்சு வேலைகள் சீரான நிலையில் முடிக்கப்படாது மக்களின் பாவனைக்கு விடப்பட்டது.

அதாவது கிணற்றின் உட்புறத்தின் மேல்பகுதி சீமெந்து பூச்சு இடம்பெற்றும் அடிப்பகுதி பூச்சு வேலைகள் இடம் பெறாத நிலையிலும் பாவனைக்கு விடப்பட்டதாக அப்பகுதி மக்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

அண்மையில் ஏற்பட்ட வரட்சியையடுத்து இக்கிணற்றின் நீர் வற்றிய நிலையில் தற்போது பெய்து வரும் மழையினால் சீமெந்து பூச்சு இடம் பெறாத பகுதி வழியாக கிணற்று வளாகத்தின் அசுத்த நீர் உட்புகுந்து குடிநீரை மாசுபடுத்துவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட சங்கத்தினர் காலம் தாழ்த்தாது மிகுதி பூச்சு வேலையினை சீராக செய்து தருவதன் மூலம் தூய குடிநீரை பெற்றுக் கொள்ள முடியும் என அப்பகுதி மக்களால் கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (2-281)


## பொது நோக்கு மண்டபம் திறப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி திருவையாறு மேற்கு கிராம அலுவலகப் பிரிவுக்கான பொது நோக்கு மண்டபம் யு.என். ஹபிராட் நிறுவனத்தின் 28 இலட்சம் ரூபா நிதியுதவியில்கட்டப்பட்டு அண்மையில் மக்களின் பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட திருவையாறு மேற்கு பிரதேசத்தில் இப்பொது நோக்கு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2-272)

# இரணை இலுப்பைக் குளத்தில் நடைபெற்ற மக்களை நோக்கிய சேவை மருத்துவமுகாம்



(குருமன்காடு)

வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் பசத்தியலிங்கத்தின் பணிப்புரைக்கமைய மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதாரசேவைகள் பணிமனையினால் விசேட நடமாடும் மருத்துவ முகாம் நேற்று முன்தினம் மன்னார்இரணை இலுப்பைக் குளத்தில் நடைபெற்றது.

பல்துறைசார் வைத்திய நிபுணர்கள் கலந்து கொண்ட இம்மருத்துவ முகாமில் ஏராளமானோர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

வன்னியுத்தத்தையடுத்து மக்கள் முற்றாக வெறியேற்றப்பட்ட இந்தப்பிரதேசத்தில்2010 ஆம் ஆண்டிற்கு பின்னர் மக்கள் மீள்குடியேற்றப்பட்டனர்.

இப் பிரதேசத்தில் கிராமிய வைத்தியசாலை அமைந்துள்ள போதும் வைத்தியர்களின் வருகை குறைவு காரணமாக வாரத்தின் குறிப்பிட்ட நாட்களில் மட்டுமே மருத்துவ வசதி இம் மக்களுக்கு கிடைக்கப்பெற்று வந்தது.

இந் நிலையில் அண்மையில் இப் பிரதேச கிராமிய வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்ட சுகாதார அமைச்சரிடம் மக்கள் முறையிட்டதை தொடர்ந்து இம் மருத்துவ முகாம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இம் மருத்துவ முகாமை ஆரம்பித்து வைத்து கருத்து தெரிவித்த அமைச்சர்,

விசேட வைத்திய சேவைகளை பெற்றுக் கொள்ள முடியாத தூர இடங்களில் வாழுகின்ற மக்களுக்கு மேலதிக மருத்துவ சேவைகள் வழங்கும் நோக்குடன் பின்தங்கிய பிரதேசங்களில் இவ்வாறாக மருத்துவ முகாம்களை நடத்த தீர்மானித்துள்ளோம்.

குறிப்பாக மகப்பேறு சத்திரசிகிச்சை, என்புமுறிவு, கண் சிகிச்சை பல்மருத்துவம், காது, மூக்கு, தொண்டை, பொது மருத்துவம், குழந்தை நல மருத்துவ செய்கை அவயவம் பொருத்துதல் மற்றும் மருத்துவ ஆய்வு கூட சேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வாறான மருத்துவ முகாமொன்று இம்மாத இறுதியில் முல்லைத்தீவு மாவட்டம், மல்லாவி, துணுக்காய் பிரதேசங்களில் நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றார். (2-250)

# மரநடுகை மாதத்தையொட்டி மரநடுகை செயற்றிட்டமும் போட்டிகளும்

(மல்லாவி)

வடமாகாண கல்வியமைச்சின் 12 கல்வி வலயங்களின் கீழ் இயங்கும் அனைத்து பாடசாலைகளிலும் மற்றும் முன் பள்ளிகளிலும் வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 01-30 எனும் தலைப்பில் மரநடுகை செயற்றிட்டமும் மற்றும் வாசகங்கள் தயாரிக்கும் போட்டி நிகழ்வும் நடை பெறவுள்ளதாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் அனைத்து வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வலயக்கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

வடமாகாண மர நடுகை மாதம் கார்த்திகை 01-30 திட்டமானது சகல பாடசாலைகளிலும்மற்றும் முன்பள்ளிகள் உட்பட கல்வி அலுவலகங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இதன்பிரகாரம் சகல பாடசாலைகளுக்கும் மற்றும் முன் பள்ளிகளுக்கும் சுவரொட்டிகள் மற்றும் மேற்கோள் வாசகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றில் மேற்கோள் வாசகங்களை தினம் ஒவ்வொன்றாக இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளம்பரப் பலகைகளில்காட்சிப்படுத்தவேண்டும்.

அத்தோடு மரம் நடுகை மற்றும் சூழல் பாதுகாப்பு தொடர்பான வாசகங்களைத் தயாரிக்கும் போட்டிகள் பாடசாலை மட்டத்திலும் மற்றும் வலய மட்டத்திலும்நடைபெறவுள்ளன.

இதில் பிரிவு -1இல் தரம் 6 தொடக்கம் 8 வரையும் பிரிவு-2 இல் தரம் 9 தொடக்கம் 11 வரையும் பிரிவு -3இல் தரம் 12 தொடக்கம் 13 என 3 பிரிவுகளில் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக போட்டிகள் நடைபெற்று வலய மட்டத் தெரிவிற்காக ஒவ்வொரு பிரிவிலும் இருந்து 3 சிறந்த வாசகங்களைத் தெரிவு செய்து அனுப்பி வைக்க வேண்டும்.

இதன்போது வலயமட்டத்தில் ஒவ்வொரு பிரிவிலுமிருந்து மூன்று போட்டியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுஎதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் வடமாகாண கல்விஅமைச்சின் அபிவிருத்தி பிரிவிற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

பாடசாலைமட்டத்தில் மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட ஏனைய வாசகங்களையும் கல்வி அமைச்சிற்கு அனுப்பி வைக்கவேண்டும். மரம்நடுகை தொடர்பில் பயன்தரும் மரங்கள் மற்றும் நிழல் மரங்கள் நாட்டப்படலாம். அதன் பின்னர் மரங்கள் பராமரிக்கப்படவேண்டும்.

மர நடுகை தொடர்பான அறிக்கை மரங்களின் வகை, எண்ணிக்கை நடப்பட்ட இடம் என்பன தொடர்பான விபரங்களை வடமாகாண கல்வியமைச்சின் அபிவிருத்தி பிரிவிற்கு அனுப்பி வைக்குமாறு அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (2-15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குடும்ப தகவல் திரட்ட விரைவில் புதியதிட்டம்

**இலங்கையிலுள்ள சகல மக்களையும் அவர்களது குடும்பவாரியான விபரங்களை சேகரித்து களஞ்சியப் படுத்தும் புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாக இலங்கை ஆட்பதிவுத் திணைக்களம் நேற்று முன்தினம் புதன்கிழமை தெரிவித்துள்ளது. மீரியா பெத்தயில் ஏற்பட்ட மண் சரிவின் போது பாதிக்கப்பட்ட மக்கள் குறித்து கணிப்பீடு செய்வதில் எழுந்துள்ளபிரச்சினையை கருத்திற்கொண்டே இந்த புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஆர்.எம்.எஸ். சரத் குமார தெரிவித்தார்.**

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மையத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது, அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், "கடந்த வாரம் மீரியாபெத்தயில் இடம்பெற்ற மண்சரிவு அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் சரியான எண்ணிக்கையினை பெற்று கொளவதில் பாரிய சிரமங்கள் ஏற்பட்டதுடன் அதிக எண்ணிக்கையானவர்கள் பாதிக்கப்பட் டதான தகவல்களும் வெளியாகின.

எதிர்காலத்தில் இவ்வாறான சிரமங்களை தவிர்த்து கொள்வதற்காக நாம் இந்த புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த தீர்மானித்தோம. இந்த திட்டத்தின் பிரகாரம் ஒரு குடும்பத்திலுள்ள சகல அங்கத்தவர்களினதும் விபரங்கள் சேகரிக்கப்படுவதுடன் அவர்களது அடையாள அட்டை இலங்கங்கள் பதிவு செய்யப்படும் என்றார்.

15 வயதுக்கு குறைந்த சிறுவர்கள் இருக்கும் பட்சத்தில் அவர்களுடைய விபரங்களும் சேகரிக்கப்படுவதுடன் அவர்கள் 16 வயதை அடையும் சந்தர்ப்பத்தில் அடையாள அட்டையினை பெற்றுக் கொள்ளுமாறு நேரடியாக அறிவுறுத்தப்படுவர். இதனூடாக அடையாள அட்டையை பெற்றுக் கொள்வதில் ஏற்படும் சிரமங்கள் தவிர்க்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த வருடம் டிசெம்பர் மாதம் கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களில் 3.5 இலட்சம் பேரின் அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் மாத்திரமே எமக்கு கிடைத்துள்ளன. அதில், 2.5 இலட்சம் வரையான அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் இன்னும் 30 ஆயிரம் வரையான அடையாள அட்டைகளை வழங்குவதற்காக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-5)

## வீடமைப்பு நிர்மாணத் துறையினருக்கு மாலைதீவில் முதலீடு செய்ய சந்தர்ப்பம்



இலங்கையின் வீடமைப்பு நிர்மாணத்துறையின் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து திருப்தி தெரிவித்த மாலைதீவு வீடமைப்புத்துறை அமைச்சர் மொஹமட் முயிசு தமது நாட்டிலும் இவர்களுக்கு முதலீடுகளை மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும் தாம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் மாலைதீவின் வீடமைப்பு அமைச்சர் மொஹமட் முயிசு உறுதியளித்தார்.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவை வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச, மாலைதீவின் வீடமைப்பு அமைச்சர் மொஹமட் முயிசுவை சந்தித்துரையாடினார் .தென்கொரியாவின் சோல் நகரில் இந்த சந்திப்பு இடம் பெற்றது.

தென் கொரியாவின் சோல் நகரில் ஆரம்பமான ஐந்தாவது ஆசிய பசுபிக் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச் சர்களின் மாநாட்டின் போதே அமைச்சர் விமல் வீரவன்ச மாலைதீவு வீடமைப்பு அமைச்சரை சந்தித்தார்.

இலங்கையின் நிர்மாணத்துறை வரலாற்றிலேயே 22வீத வளர்ச்சியைக்கண்டுள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ச. இந்த சந்திப்பின் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச துறை மட்டுமன்றி தனியார்துறையினருக்கும் மாலைதீவில் நிர்மா ணத்துறை முதலீடுகளை மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்கு மாறு கோரிக்கை விடுத்தார். இதற்கு பதிலளிக்கும் போதே மாலைதீவு அமைச்சர் இந்த உறுதிமொழியை அளித்துள்ளார். (இ-5)

## 3 இலட்சம் மோசடி; சட்டத்தரணி கைது

போலி ஆவணங்கள் மூலம் காணி உறுதிப்பத்திரத்தை தயாரித்ததுடன் பெறுமதியற்ற காசோலை ஊடாக 3 இலட்சம் ரூபாவை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் நிக்கவரெட்டிய நீதிமன்றத்தில் கடமையாற்றும் சட்டத்தரணியை (வயது 65) நிக்கவரெட்டிய விசேட குற்றப் புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (இ-5)



ஜனாதிபதி சட்டத்தரணியும் ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜயதாஸ ராஜபக்ஷ வினால் எழுதப்பட்ட ஏழு புத்தகங்களின் வெளியீட்டு வைபவம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. சபாநாயகர் சமல் ராஜபக்ஷ மற்றும் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இந்த புத்தக வெளியீட்டு வைபவத்தில் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் நாடாளு மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

## மீனவ குழுக்களிடையே மோதல் நீர்கொழும்பில் நேற்று பதற்றம்

(கொழும்பு)

நீர்கொழும்பில் இரு மீனவக் குழுக் களுக் கிடையே நேற்று இடம்பெற்ற மோதலில் மீனவர்கள் இருவர் காயமடைந்ததையடுத்து அங்கு பதற்றமான நிலைமையொன்று ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

இதனையடுத்து மேலதிக பாதுகாப்புக்காக விசேட அதிரடிப்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்

இரு குழுக்களுக்கும் இடையிலான மோதலில் முச்சக்கரவண்டிகள் மூன்று, இன்னும் சில வாகனங்களுக்கும் மீன்பிடி படகொன்றுக்கும் தீ மூடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த மீனவர்கள் இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

பிற இடங்களிலிருந்து கொண்டு வரப்படும் மீன்கள் நீர்கொழும்பு கொட்டுவை மைதானம் அருகில் உள்ள மீன் விற்பனைச் சந்தையில் விற்பனை செய்யப்படுவதற்கும் அங்குள்ள கடற்கரையோரத்தில் கருவாட்டுத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளோருக்கும் அவற்றை விற்பனை செய்வதற்கும் எதிர்ப்புத் தெரிவித்து நீர்கொழும்பு கடற்கரைத் தெரு - குடாப்பாடு சிறு மீன்பிடித்துறையினர் நேற்று முன்தினம் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## 5 மில்லியன் ஒதுக்கீடு

கடந்த 1989 ஆம் ஆண்டிலிருந்து 1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எந்தவொரு ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்ற உறுப்பினர்க்கோ எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கோ அவர்களது முன்னேற்ற அபிவிருத்தி வேலைகளுக்கோ 10 ரூபா கூட ஒதுக்கவில்லை. ஆனால் தற்போதுள்ள அரசாங்கத்தின் கீழ் ஒவ்வொரு உறுப்பினர்களும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் முன்னேற்றம் அபிவிருத்தியின் பொருட்டு 5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளதாக பாராளுமன்ற விவகார அமைச்சர் சுமேதகா ஜி ஜெயசேனநேற்றுமுனதினம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டுக்குரிய வரவுசெலவுத்திட்ட விவாத நேரத்தின் போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செலவுகள்வகைப்பிரிவு விவாதத்தின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-5)

## மக்களுக்கான வீடுகளை நிர்மாணிக்க இராணுவத் தரப்பு தயாராக உள்ளதாம்

### பேச்சாளர் ருவான் தெரிவிப்பு

பதுளை மீரியாபெத்தபிரதேசத்தில ஏற்பட்ட மண்சரிவில் தமது வீடுகளை இழந்த 63 குடும்பங்களுக்கு புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கான இத்தை அடையாளம் காணும் பணி கள் நிறைவடைந்ததும், அவ் வீடுகளை நிர்மாணப்பதற்கு இராணுவத்தினர் தயாராக உள்ளனர் என்று பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மையப் பணிப்பாளரும் இராணுவ பேச் சாளருமான பிரிகேடியர் ருவான வணிகசூரிய தெரிவித்தார்.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மையத்தில்நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், மீரியாபெத்த பிரதேசத்தில் இடம்பெற்ற



மண்சரிவு அனர்த்தத்தில் வீடுகளை இழந்த 63 குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்கான உதவிகளை வழங்க இராணுவம் தயாராக உள்ளது. இதற்காக மண்சரிவு அபாயம் அற்ற பாதுகாப்பான இத்தை அடையாளம் காணும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பாதுகாப்பான இடங்கள் அடையாளம் காணப்பட்டதும் அரசாங்கத்தின் நிதி உதவியில் இராணுவத்தினரின் ஊடாக இந்த வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. இதற்காக முப்படைகளின் வீரர்களும் சிரமதான அடிப்படையில் வீடுகளை நிர்மாணிக்க தயாராக உள்ளனர் என்றார்.

அத்துடன், அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 500 இற்கும் அதிகமான மக்கள் கொஸ்லந்தை, பூணாகலை கணேசா வித்தியாலயத்திலும் சுப்பிரமணிய சுவாமி கோயிலிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தேவையான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

குறித்த பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் மீட்பு நடவடிக்கைகளின்போது மீட்கப்பட்ட நகைகள், ஆவணங்கள் உட்பட பெறுமதியான பொருட்கள் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக பாகிஸ்தான் அரசாங்கம் 100 மில்லியன் ரூபாய் பெறுமதியான நிவாரணப் பொருட்களை வழங்கியுள்ளது. அதற்காக பாகிஸ்தானுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம் என்று அவர மேலும்தெரிவித்தார். (இ-5)

## கொஸ்லந்தைக்கு பாகிஸ்தானின் 2ம் கட்ட உதவிகள் வந்தடைந்தன

(கொழும்பு)

கொஸ்லந்த பிரதேசத்தில் மண்சரிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படுவதற்கென பாகிஸ்தான் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட இரண்டாம் தொகுதி உதவிகள் இலங்கையை வந்தடைந்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் ருவான் வனிக சூரிய தெரிவித்தார்.

பாகிஸ்தான் வழங்கியுள்ள நிவாரணத்தின் பெறுமதி 10 கோடி ரூபாவையும் தாண்டியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இலங்கைக்கான பாகிஸ்தான் உயரஸ்தானிகர் சுஹைஸ்தீன் இநத நிவாரணப் பொருட்களை இராணுவ அதிகாரி அம்பேபொலவிடம் கையளித்துள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேள்ள அமெரிக்கா இலங்கைக்கு நிதியுதவி செய்ய முன்வந்தவேளை எந்தவொரு சர்வதேச நாட்டினதும் உதவிகள் எமக்கு தேவையில்லை என்று இலங்கை அரசாங்கம் முன்னர்அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.கட்சியிலுள்ள ஒரு சிலர் மூழ்கும் கப்பலில் ஏற முயற்சி

## ரவி எம்.பி தெரிவிப்பு



மூழ்கிக்கொண்டிருக்கும் கப்பலில் எவரும் ஏறமாட்டார்க்ள். ஆனால், எமது பக்கத்திலுள்ள சிலர் மூழ்கும் கப்பலில் ஏற முயற்சிக்கின்றனர். இவர்களது விபரங்களை விரைவில் வெளியிடுவோம் என ஐ.தே.கட்சி எம்.பி. ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டம் மீதான பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தொடர்பான குழுநிலை விவாதத்தை எதிர்க்கட்சி தரப்பில் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே ரவி கருணாநாயக்க எம்.பி இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கம் என்ற கப்பல் இனறு மூழ்கிக்கொண்டிருக்கின்றது. அவ்வாறான கப்பலில் எவரும் ஏற மாட்டார்கள்.

ஆனால், எமது பக்கத்தில் சில "கிறுக்கன்கள்" மூழ்கும் கப்பலில் ஏற முயற்சிக்கின்றனர்.

இவர்கள் தொடர்பாக தகவல்களை, உண்மைகளை எதிர்காலத்தில் வெளியிடுவோம். விரைவில் ஐ.தே. கட்சி ஆட்சி உருவாகும். நாட்டை, பொருளாதாரத்தை கட்டியெழுப்பக் கூடிய கட்சி ஐ.தே. கட்சியாகும். அதனை நாம் செய்து காட்டுவோம். அதற்கு ஐ.தே. கட்சி தயாராகவே உள்ளது.

ஆனால், தற்போது அரசு அனைத்தையும் அரசியல் மயமாக்கி கொண்டிருக்கின்றது. இதனால் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளது. ஆனால், அரசு பொய்யான சோடிக்கப்பட்ட தரவுகளை பொருளாதாரம் தொடர்பில் காட்டுகின்றது.

எதிர்வரும் 18 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்படவுள்ளது. இதனை இலக்காக வைத்து சமுர்த்தி கொடுப்பனவு ஊடாக ரூபா 2ஆயிரத்து 500 வழங்கப்பட வுள்ளது.

இவ்வாறு இலஞ்சம் வழங்கி தேர்தலை வெற்றி கொள்ள அரசு முயற்சிக்கின்றது.

அது ஒரு போதும் வெற்றி பெறப் போவதில்லை. இலஞ்சம் வழங்கி மக்களை ஏமாற்ற முடியாது. இன்று நாட்டில் வர்த்தக மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்கு இந்தியாவை விட சீனாவுக்கே அதிக வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன.

உள்ளூரில் உற்பத்திகளை அதிகரித்து ஏற்றுமதிகளை அதிகரித்து வெளிநாடுகளில் எமது உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்த திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஆனால், அரசிடம் அவ்வாறான எந்தத் திட்டமும் இல்லை. ஆனால், வெளிநாடுகளில் உள்ள தூதுவர்களை கன்னத்தில் அறையும் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது என்றார். (இ-5)

# அரசியலில் நிரந்தர நண்பரும் பகையாளிகளும் இல்லையாம்

## அமைச்சர் யாப்பா விளக்கம்

(கொழும்பு)

அரசியலில் நிரந்தர நண்பரும் இல்லை. நிரந்தர பகையாளியும் இல்லை என்று அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.



நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அரசாங்கத்தை தோற்கடிக்க வேண்டும் என்று முன்னிலையில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னிலை உறுப்பினர்கள் பலர் அரசாங்கத்துடன் இணையவுள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

இதன்போது ராஜபக்ஷ குடும்பத்தினரை கடுமையாக விமர்சித்துவரும் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவும் அரசாங்கத்துடன் இணையப் போகிறாரா? என்று செய்தியாளர்கள்வினவியபோது, அரசியலில் நிரந்தர நண்பரும இல்லை. பகைவரும் இல்லை எனறு அமைச்சர் சுட்டிக்காட்டினார். (இ-5)

# தகைமை வாய்ந்த அதிபர்கள் நியமனம்

2015 ஆம் ஆண்டிலிருந்து அனைத்து பாடசாலைகளுக்கும் தகைமை வாய்ந்த அதிபர்களை நியமிக்க திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது பற்றி அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், எந்தவொரு பாடசாலைகளிலும் அதிபர்கள் அரசியல் நோக்கத்தில் நியமனம் செய்யப்படவில்லை. அனைத்து நியமனங்களும் தகைமையின் அடிப்படையிலே வழங்கப்பட்டுள்ளது என்றார். (இ-5)

# கூட்டமைப்பு கடும் எதிர்ப்பு

வரவு செலவுத்திட்டத்தின் கீழான பாதுகாப்பு அமைச்சிற்கான நிதியொதுக்கீட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடுமையாக எதிர்த்துள்ளது.

வரவு செலவுத்திட்டத்தின் கீழான பாதுகாப்பு அமைச்சிற்கான நிதியொதுக்கீடு தொடர்பான வாசிப்பு நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த நிதியொதுக்கீட்டுக்கு கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தி இருந்தது.

பாதுகாப்பு அமைச்சுக்கான நிதியொதுக்கீடு தொடர்பான 7 மசோதாக்களில் 103 இலக்க மசோதா வாக்கெடுப்பு இன்றி நிறைவேறக் கூடாது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியது.

இதனையடுத்து இது தொடர்பான வாசிப்பின் முடிவில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதற்கு ஆதரவாக 115 வாககுகளும் எதிராக 12 வாக்குகளும் கிடைத்திருந்தன.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி ஆகிய வாக்களிப்பிலிருந்து தவிர்த்து கொண்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-5)

# தடைசெய்ய வேண்டும் த.தே.கூட்டமைப்பினை

## பிரதி அமைச்சர் கூறுகிறார்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தடை செய்ய வேண்டுமென தொழில் மற்றும் தொழில் உறவுகள் பிரதி அமைச்சர் சரத் வீரசேகர கோரியுள்ளார்.



தமிழீழ விடுதலைப் புலிப் பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டதன் பின்னர் அதனுடன் தொடர்புடைய அரசியல் கட்சிகளையும் தடை செய்திருக்க வேண்டும்.

எனினும் அரசாங்கம் அவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தடை செய்யவில்லை.

ஜனநாயகத்தை மதிக்கும் காரணத்தினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசாங்கம் தடை செய்யவில்லை.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனநாயகத்தை பிழையான வழியில் பயன்படுத்துகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கட்சி தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டு வருகின்றது.

வரவு செலவுத் திட்ட விவாதத்தில் பங்கேற்று நேற்று முன் தினம் உரை யாற்றிய போது சரத் குமார வீரசேகர இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## பலசாலி யார்?

மனிதனுக்கு எத்தனை வயது என்று கேட்டார் ஒருவன்.

"மூன்று இலட்சம்" என்றார் இன்னொருவர்.

கேட்டவருக்கு மயக்கம் வருவது போல் இருந்தது.

"என்ன சொல்லிறீங்க?" என்று கேட்டார் ஆச்சரியமாக!" நான் சரியாகத்தான் சொல்கிறேன். இந்த உலகத்தில் மனிதன் தோன்றி மூன்று இலட்சம் ஆண்டுகள் ஆகின் றன. ஆனாலும் கடந்த 6 ஆயிரம் ஆண்டுகளில் தான் மனித நாகரிகம் தோன்றியது."

"ஓ... அப்படியானால் மனிதனின் வயது மூன்று இலட்ச ஆண்டுகள். மனித நாகரிகத்தின் வயது ஆறாயிரம் ஆண்டுகள் அப்படித்தானே!"

"ஆமாம்! அது இருக்கட்டும் கடவுள் இந்த பூமியைப் படைத்தது சம்பந்தமாக ஒரு கதை உண்டு. தெரியுமா?"

"சொல்லுங்க... தெரிந்து கொள்கிறேன்"

கடவுள் ஒரு நாள் சாவகாசமாக உட்கார்ந்து இந்த பூமி உருண்டையை உருவாக்கினாராம். அது அப்படியும் இப்படி யும் அசைய ஆரம்பித்ததாம். அதிர்வு வேறு இருந்ததாம்.

அது அசையாமல் இருக்க வேண்டும். இதில் கனமான ஒரு பொருள் எதையாவது வைத்தால் தான் இது அசை யாமல் உறுதியாக நிற்கும். என்ன செய்யலாம்?

உடனே பெரிய பெரிய மலைகளை உருவாக்கி அவற்றை ஆங்காங்கே நிறுத்தினார். உடனே அது உறுதியாக நின்றது. இதைப் பார்த்து விட்டு சிலர் கடவுளிடம் வந்தார்களாம்?

"கடவுளே எங்களுக்கு ஒரு சந்தேகம்!" என்றார்களாம்.

"உங்களுக்கு என்ன சந்தேகம்?"

"மலைகளை விட பலமாக எதையாவது உருவாக்கியிருக்கிறீர்களா?"

"ஓ... கடினமான இரும்பை உருவாக்கியிருக்கிறேனே. இரும்பு மலையையே உடைக்கும்"

"இரும்பை விட பலம் பொருந்திய ஏதாவது உண்டா?"

நெருப்பை படைத்திருக்கிறேனே. இந்த நெருப்பு இரும்பையே உருக்கி விடும்.

"நெருப்பை விட சக்தி உள்ளது ஏதாவது உண்டா"

"உண்டு அது தான் நீர். தண்ணீர் நெருப்பை அணைத்து விடும்"

"நீரை விட ஆற்றல் மிக்கது ஏதாவது உண்டா"

எங்கும் நிறைந்திருக்கும் காற்று, நீரை விட ஆற்றல் மிக்கது. அது கடலையே கொந்தளிக்கச் செய்து விடும்"

"அதை விடவும் சக்தி வாய்ந்த எதையாவது படைத்திருக்கிறீர்களா?"

"படைத்திருக்கிறேன். எல்லாவற்றையும் விட பலசாலி யான மனிதன் ஒருவனை நான் படைத்திருக்கிறேன்"

"யார் அவன்?"

இடது கைக்குத் தெரியாமல் வலது கையால் எவன் தானம் செய்கிறானோ... அவன் தான் அது" கேட்டவர்கள் திகைத்துப் போனார்கள்.

"எல்லாவற்றையும் விட பலசாலி அவன்" என்று சொல்லி விட்டு கடவுள் மறைந்து விட்டாராம்.

இப்படி ஒரு கதையை பெரியவர்கள் சொல்வதுண்டு.

கலைவாணர் என்.எஸ்.கிருஸ்ணன் மிகவும் கஷ்டத்தில் இருந்தாராம்.

அந்த நேரம் பார்த்து ஒருத்தர் அவர் முன் பரிதாபமாக வந்து நின்றாராம். "அண்ணே! ஏதாவது உதவி செய் யுங்கள்" என்பது போல் இருந்தது அவரது முகம். அந்த நேரம் கலைவாணரின் கையில் பணம் எதுவும் இருக்க வில்லை. அங்கும் இங்கும் திரும்பிப் பார்த்தார். இடது பக்கத்தில் ஒரு வெள்ளிக்கிண்ணம் இருந்தது. உடனே அதை எடுத்து வந்தவரிடம் கொடுத்து "எடுத்துக் கொண்டு போ" என்றார்.

வந்தவர் "அண்ணே... கொடுக்கிறதை வலது கையால் கொடுங்க" என்றார்.

அதற்கு கலைவாணர்.

"இடது கையில் இருந்து இந்தக் கிண்ணம் வலது கைக்கு மாறி வருவதற்குள் மனசு மாறினாலும் மாறி விடும். அதற்குள் வாங்கிக் கொள்... இந்தா!" என்றாராம்.

கடவுள் குறிப்பிட்ட அந்த பலசாலியான மனிதர் யார் என்று கேட்டால் அதற்கு உதாரணம் கலைவாணர்.

ஆனால் இந்தக் காலத்தில் மனிதர்களுடைய அபிப்பிராயம் எல்லாம் வேறு மாதிரி இருக்கிறது. இந்தக் காலத்தில் ஒரு பெரியவரைப் பார்த்து "உலகத்தில் மிகவும் உறுதியான மனிதன் யார்?" என்று கேட்டார்களாம். இதற்கு அவர் சொன்ன பதில்.

ஒரு தட்டு நிறைய வறுத்த நிலக்கடலையைக் கொண்டு வந்து வையுங்கள்.

ஒரு கடலையை எடுத்து உடைத்து வாயில் போட்டு விட்டு... அடுத்த கடலையை எவன் தொடாமல் இருக்கிறானோ அவன் தான் அது" என்றாராம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







...வளைந்து நெளிந்து பறவை பறந்த திசையில் இருவரும் போனார்கள்.

அந்த நீள வால் குருவி, இறுதியாக ஒரு வீட்டின் மீது அமர்ந்தது.

இருவருக்கும் ஆச்சர்யம். அந்த வீட்டுச் சுவர்கள், ரொட்டியாலும் சாக்லேட்டுகளாலும் இருந்தன.

சர்க்கரைக் கட்டிகளாலான ஜன்னல்கள். இருவருக்கும் மிகுந்த பசி. ஓடிவந்த களைப்பு. இது நமக்காகவே கட்டப்பட்ட வீடு போல தெரிகிறது.

நீ, ஜன்னலைப் பிய்த்துச் சாப்பிடு. நான் கூரையைப் பிய்த்துச் சாப்பிடுகிறேன என்றான் எரிக். இருவரும் ரசித்து ருசித்துச் சாப்பிடத்துவங்கினர்.

அப்போது, கதவைத் திறந்துகொண்டு வந்த வயதான கிழவி ஒருத்தி, யார் அது? என்றாள்.

இருவரும் நடுங்கினர். அந்தக் கிழவியோ, உங்களுக்குப் பசிக்கிறதா? உள்ளே வாருங்கள்.

இதைவிட சுவையான உணவு தருகிறேன என்றாள். இருவரும் உள்ளே சென்றார்கள்.

அங்கிருந்த சாப்பாட்டு மேஜையில் கோழிக குழம்பும் மீனும் இருந்தன.

அவர்கள், இதுவரை இப்படியான உணவைப் பார்த்ததேயிலலை.

கிழவி அன்போடு, உங்களுக்கு விருப்பமானதை வயிறாறச் சாப்பிடுங்கள் என்று உபசரித்தாள்.

அப்பிள்கள், திராட்சை எடுத்து வந்தாள்.

குடிக்க சூடான பால் வைத்தாள்.

இருவரும் திருப்தியாகச் சாப்பிட்டு முடித்ததும் அடுத்த அறைக்கு அழைத்துச்சென்றாள்.

அங்கிருந்த கட்டில்களைக் காட்டி, நன்றாகத் தூங்குங்கள். உங்களை வீட்டில் சேர்ப்பது பற்றி நாளை பேசிக்கொள்வோம் என்று சொல்லிவிட்டுச் சென்றாள்.

இருவரும் சொர்க்கத்தில் இருப்பதாக எண்ணினர்.

ஆபத்தை அறியாமல் நிம்மதியாகத் தூங்கினர்.

அடுத்த நாள், இருவரும் சந்தோஷமாக எழுந்தனர்.

காலைச் சிற்றுண்டி என்னவாக இருக்கும்?' என்று கிரேட்டல் எண்ணினாள்.

வீட்டுக்குப் போகும்போது, ஒரு வாரத்துக்கு வேண்டிய உணவைக்கொண்டு போனால சித்தி நம்மைத் துன்புறுத்த மாட்டார் என நினைத்தான் எரிக். அவர்களின் சந்தோஷத்துக்கு அப்போதே ஒரு முற்றுப் புள்ளி விழுந்தது.

நேற்றைய விருந்தின் மயக்கம் இன்னும் தீரவில்லையா? இன்றிலிருந்து நீங்கள் எனக்கு அடிமைகள்.

கிரேட்டல் சமைக்க வேண்டும். கிணற்றில்தண்ணீரஎடுத்து, துணி துவைக்க வேண்டும்.

விறகு வெட்டிக்கொண்டு வருவது, வீட்டைச் சுத்தம் செய்வது, தோட்டத்தில் தண்ணீர் பாய்ச்சுவது ஆகியவை எரிக்கின் வேலை என்றாள் கிழவி.

கிழவியின் சுயரூபம் அப்போதுதான் தெரிந்தது. அவள் ஒரு சூனியக்காரி. எரிக்கையும் கிரேட்டலையும் கவர்வதற்காகவே ரொட்டிவடிவில் வீடைமாற்றியிருந்தாள. இப்போது, அது சாதாரண வீடாகக் காட்சி அளித்தது.

அப்படியானால், நாங்கள் எங்கள் வீட்டுக்குப் போகவே முடியாதா? என்று பரிதாபமாகக் கேட்டாள் கிரேடடல்.

வீடா? இனிமேல் இதுதான் வீடு என்று சொல்லி கிழவி பயங்கரமாகச் சிரித்தாள்.

வேலை செய்த நேரம் போக, மற்ற நேரத்தில் எரிக்கை ஓர் அறையில் போட்டுப் பூட்டினாள்.

கிரேட்டலை தன் கண்காணிப்பில வைத்திருந்தாள்.

இதிலிருந்து எபபடி மீள்வது என்று தெரியாமல்இருவரும வருந்தினர். ஒருநாள் காலையில், கிரேட்டலை அழைத்தாள் கிழவி. இன்றைக்கு என் மந்திர தேவதைக்கு விருந்து படைக்கும் நாள்.

ஆடு, பன்றி, கோழிகள் சமைக்க வேண்டும். குழி அடுப்பில் மரக்கட்டைகளைப் போட்டு தீ மூட்டு. தீ கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியதும் ஆட்டையும் பன்றியையும் தணலில் வாட்ட வேண்டும். சுறுசுறுப்பாக வேலைகள் ஆகட்டும் என்றாள் அதிகாரமாக.

எரிக் விறகு வெட்டிக்கொடுக்க, அதை எடுத்து வந்து ஆள் உயரக் குழி அடுப்பில் போட்டாள் கிரேட்டல். கிழவி, ஒரு எண்ணெய்த் துணியில் தீ வைத்து அடுப்பில் வீசினாள்.

விறகுக் கட்டைகளை இன்னும் கொண்டு வந்து உள்ளே போடு.

அடுப்பு மேல்ஏறி, தீநன்றாக எரியத்தொடங்கி விட்டதா என்று பார் என்றாள்.

எனக்கு அடுப்பு மேல் ஏறத் தெரியாதே என்றாள் கிரேட்டல்.

உனக்குத் தின்னத்தான் தெரியும். விலகு, நானே பார்க்கிறேன் என்று நாற்காலியைப்போட்டு அடுப்பின் மேல் ஏறினாள் கிழவி.



அப்போதுதான் அந்த எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது. எட்டிப்பார்த்த கிழவி, நிலை தடுமாறி தீக் குழிக்குள் விழுந்துவிட்டாள்.

கிழவியின் அலறல் கேட்டு, எரிக் ஓடிவந்தான். நிலைமையை உணர்ந்தவன், குழி அடுப்பின் இரும்பு மூடியை மூடினான். இனி, நாம் வீட்டுக்குப் போய்விடலாம்.

சாப்பிடுவதற்கு ஏதாவது எடுத்துப்போவோம் என்று ரொட்டி, பழங்களை பையில் எடுத்துக் கொண்டனர்.

எரிக், கிழவியின் அறைக்குள் சென்று பார்த்தான். அங்கே பல பெட்டிகள் இருந்தன.

ஒவ்வொன்றிலும் விலை மதிப்பில்லா முத்து, பவளம், வைரம், தங்க நகைகள் இருந்தன.

அங்கிருந்த பைகளில் கொஞ்சம் கொஞ்சம் நிரப்பிக்கொண்டான்.

அங்கிருந்து கிளம்பிய அண்ணனும் தங்கையும் அலைந்து திரிந்து வீட்டுக்கு வந்து சேர்ந்தனர். விறகுவெட்டி, தன் பிள்ளைகளைக் கட்டிப்பிடித்துக் கொண்டான். என் செல்லங்களே, உங்களை எங்கெல்லாம் தேடினேன் என்று ஆனந்தக் கண்ணீர்விட்டான்.

அப்பா, சித்தி எங்கே?என்று எரிக் கேட்டான். அவள் உங்கள் இருவரையும் காட்டில் விட்டு வட்டு வரும்வழியில்புலி தாக்கி இறந்து போனாள. நீங்கள் எப்படியும் திரும்பிவருவீர்கள் என்று நினைத்தேன். என் நம்பிக்கை வீண் போக வில்லை என்றான். இருவரும்பைகளில்கொண்டு வந்ததைக் கீழே கொட்டினார்கள். அன்றிலிருந்து துன்பம், துயரங்களிலிருந்து விடுபட்டு. சந்தோஷமாக வாழ்ந்தனர். *(முற்றும்)*

## 11.2014 07 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1492 - உலகின் மிகப் பழமையான விண்கல் மோதல் பிரான்சில் இடம்பெற்றது.
- 1502 - கொலம்பஸ் ஹொண்டூராஸ் கரையை அடைந்தார்.
- 1665 - உலகின் பழமையானதும் இப்போதும் வெளிவரும் த லண்டன் கசெட் (The London Gazette) முதலாவது இதழ் வெளியானது.
- 1893 - கொலராடோ மாநிலத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- 1910 - உலகின் முதலாவது விமானத் தபால் பொதிச் சேவை ரைட் சகோதரர்களால் ஒகையோவில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1917 -'அக்டோபர் புரட்சி: விளாடிமிர் லெனின் தலைமையில் கம்யூனிசப் புரட்சியாளர்கள் ரஷ்யாவின் இடைக்கால அரசாங்கத்தைக் கவிழ்த்தனர்.
- 1917 - முதலாம் உலகப் போர்: பிரித்தானியப் படைகள் ஓட்டோமான் பேரரசிடமிருந்து காசாப் பகுதியைக் கைப்பற்றின.
- 1931 - மா சே துங் சீன சோவியத் குடியரசை அக்டோபர் புரட்சியின நினைவு நாளில் அறிவித்தார்.
- 1991 - மேஜிக் ஜான்சன் தாம் எச்.ஐ.வி. நுண்மத்தை பெற்றுள்ளதாக அறிவித்து என். பி. ஏ.-இலிருந்து வெளியேறினார்.

பிறப்புகள்

- 1728- ஜேம்ஸ் குக், ஆங்கிலேய நாடுகாண் பயணி, கடற்படை அலுவலர் (இ. 1779)
- 1858 - பிபின்சந்திர பால், இந்திய செயல்திறனாளர் (இ. 1932)
- 1867 - மேரி க்யூரி போலந்து மற்றும் பிரஞ்சு வேதியியல் அறிஞர், நோபல் பரிசு பெற்றவர், (இ. 1934)
- 1879 - லியோன் ட்ரொட்ஸ்கி, ரஷ்யப் புரட்சியாளர், (இ. 1940)
- 1888 - சி. வி. இராமன், இந்திய இயற்பியலாளர், நோபல பரிசு பெற்றவர், (இ. 1970)
- 1913 - அல்பேர்ட் காம்யு - நோபல் பரிசு பெற்ற பிரஞ்சு எழுத்தாளர், (இ. 1960)
- 1929 - எரிக் காண்டல், நோபல் பரிசு பெற்ற ஆத்திரிய மருத்துவர
- 1954 - கமல்ஹாசன், தமிழ் நடிகர்.
- 1959 - சினிவாசு, பாடகர்
- 1969 - நந்திதாதாஸ், இந்திய நடிகர்.
- 1975 - வெங்கட் பிரபு, இந்தியத் திரைப்பட இயக்குநர்
- 1980 - கார்த்திக், பாடகர்
- 1981 - அனுஷ்கா ரெட்டி, இந்திய நடிகை

இறப்புகள்

- 1913 - ஆல்ஃவிரடு அரசல் வாலேசு, ஆங்கில உயிரியலாளர் (பி. 1823)
- 1947 - கோ. நடேசையர், இலங்கையின் மலையகப் பத்திரிகையாளர் (பி. 1887)
- 1951 - என். சி. வசந்தகோகிலம், கர்நாடக இசைக் கலைஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்

117

## அம்பயரின்தவறான தீர்ப்பு!

...இந்திய ரசிகர்களுக்கோ மாரடைப்பு வராத குறையாக இதயத் துடிப்பு எகிறிக் கொண்டிருந்தது. ஆனால், இந்தியர்களின் துரதிர்ஷ்டம் அவர் 94 ரன்கள் இருக்கும்போது ரானா வீசிய பந்தை அடிக்க கமால் பிடிக்க அவுட் என்று அம்பயர் ஸ்டீவ் பக்னர் முடிவெடுத்தார். ஆனால், தொலைக்காட்சி மறு ஒளிபரப்பில் அவர் தரையில் பந்து விழுந்த பிறகே பிடித்தார். ஆகவே, சச்சின் அவுட் இல்லை என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது. ஆனால், அம்பயர் கொடுத்தது கொடுத்ததுதான். இத்தனைக்கும் அந்த அம்பயர் புதிய அம்பயர் இல்லை. பழுத்த அனுபவம் மிக்கவர். தனது நூறாவது அம்பயரிங் சாதனை செய்த அவர் யாருமே மறக்க முடியாத அளவிற்கு மாபெரும் தவறு செய்து விட்டார் என்றே அனைவரும் கருதினர். பத்திரிகைகளும் அவ்வாறே எழுதின. அம்பயரின் தவறான தீர்ப்பினால் களத்தை விட்டு சச்சின் வெளியேறினார். உலக சாதனைக்கு ஆறே ரன்கள் பாக்கி என்ற நிலையில் அந்தச் சாதனையைச் செய்ய முடியாமல் போனது சச்சினுக்கு மட்டுமில்லை நமக்கும் பேரிழப்புதான். இந்தப் போட்டி டிராவில் முடிந்தது.

> உலக சாதனைக்கு ஆறே ரன்கள் பாக்கி என்ற நிலையில் அந்தச் சாதனையைச் செய்ய முடியாமல் போனது சச்சினுக்கு மட்டுமில்லை, நமக்கும் பேரிழப்புத்தான்.



கொல்கத்தாவில் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் இந்தியா வென்றது. சச்சின் இரண்டு இன்னிங்சிலும் தலா 52 ரன்கள் எடுத்தார். பெங்களூரில் நடந்த மூன்றாவது போட்டியில் இந்தியா தோல்வி அடைந்தது. சச்சின் எடுத்த ரன்கள் 41 மற்றும் 16. ஆக மூன்று டெஸ்ட் போட்டிகளில் ஒன்றில் டிரா, ஒன்றில் வெற்றி, ஒன்றில் தோல்வி என்று தொடர் சமன் செய்யப்பட்டது.

டெஸ்ட் போட்டிகளுக்குப் பிறகு ஆறு ஒருநாள் போட்டிகள் துவங்கின. கொச்சி மற்றும் விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற முதல் இரண்டு ஒருநாள் போட்டிகளில் மட்டுமே இந்தியா வெற்றி பெற்றது. சச்சின் எடுத்த ரன்கள் 4 மற்றும் 2 ஜாம் ஷெட்பூரில் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் போட்டியில் இந்தியா தோல்வி. சச்சின் எடுத்தது 6 ரன்கள். அகமதாபாத்தில் நடைபெற்ற நான்காவது ஒருநாள் போட்டியிலும் இந்தியாவுக்கும் தோல்விதான். ஆனால், சச்சின் இங்கு சதம் அடித்து தோல்வி நிலையிலும் ரசிகர்களை மகிழ்வித்தார். அவர் எடுத்த 123 ரன்களுடன் தனது 38 ஆவது ஒருநாள் சதத்தை எட்டினார்.

அடுத்து நடைபெற்ற கான்பூர் ஒருநாள் போட்டியிலும் இந்தியா தோல்வி அடைந்தது. சச்சின் 1 ரன்னில் அநியாயமாக ஆட்டம் இழந்தார். இந்தியா இரண்டில் ஜெயிக்க பாகிஸ்தான் மூன்றில் ஜெயித்து முன்னணியில் இருந்தது. ஆக, ஆறாவதும் இறுதியுமான டெல்லி ஒருநாள் போட்டி இந்திய அணிக்கு மிக மிக முக்கியமானது. இதில் வெற்றி பெற்றால் டெஸ்ட் போட்டி போலவே ஒருநாள் போட்டிகளையும் சமன் செய்யலாம். இல்லாவிட்டால் பாகிஸ்தான் 4-2 என்ற கணக்கில் ஒருநாள் தொடரை கைப்பற்றும். எனவே, எல்லோர் நம்பிக்கையும் சச்சின் மீதுதான் இருந்தது. டெல்லி போட்டியில் இன்னொரு முக்கிய விசேஷம் என்னவென்றால் பாகிஸ்தான் அதிபர் முஷாரஃப் இறுதி போட்டியைக் காண இந்தியா வர ஒப்புக் கொண்டிருந்தார். ஒப்புக்கொண்ட படியே வந்து கிரிக்கெட் போட்டியை ரசித்தார்.

கே. ரமேஷ் (தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## கவலைகள் இன்றி வாழ்தல்!

..நாம் எப்பொழுதும் நிறைய கவலைகளுடன் இருக்கிறோம். கவலைகளே இல்லையென்றாலும், நமக்குக் கவலைகளே இல்லையே என்று கவலைப்பட ஆரம்பித்து விடுகிறோம்! பாதுகாப்பற்று உணரத் தொடங்கி கவலைப்படுவதற்கான ஒரு காரணத்தைக் கண்டு பிடித்துவிடுகிறோம்! நான் சொல்கிறேன்... இது உண்மை! சில வயதான ஓய்வு பெற்ற மனிதர்கள் என்னிடம் வந்து, ஸ்வாமிஜி, எங்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. எங்கள் குழந்தைகளுக்குத் திருமணமாகி அவர்களும் சொந்த வீடுகளுடன் வாழ்க்கையில் ஒரு நல்ல நிலைமையில் இருக்கிறார்கள். அவர்கள் எங்களிடம் எதையும் கேட்பதில்லை; என்ன செய்வதென்று தெரியவில்லை; நினைப்பதற்கும் எதுவுமில்லை. இனிமேலும் வாழ்வதில் அர்த்தமேயில்லை ஸ்வாமிஜி. நாங்கள் நிம்மதியாக சாக விரும்புகிறோம், என்று சொல்கிறார்கள்.

கவலைகளே இல்லாததனால் அவர்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை! அவர்களும் அவர்களுக்குத் தெரிந்த வழிகளிலெல்லாம் முயற்சி செய்து ஏதாவது மூளைக்கு வேலை கொடுத்து வைக்கலாம் என்றுதான் பார்க்கிறார்கள்; ஆனால், ஒன்றும் வருவதில்லை! இது அவர்களுக்குப் புதிதாக இருக்கிறது. ஏனெனில், இதுவரை அவர்கள் ஏதோ ஒரு கவலையுடனேயோ, எண்ணத்துடனேயோ இருந்திருக்கிறார்கள்.



கவலையென்றால் என்ன என்று வரையறுப்பதற்கு முன்னால் நமது கலாச்சாரம் பொருளாதார நிலைமை வயது முதலியவை என்னவாக இருந்தாலும் நம் அனைவருக்கும் பொதுவான ஒரு விடயம் உண்டு- அதுதான் கவலை என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இப்பொழுது நான் உங்களை நீங்கள் ஏன் கவலைப் படுகிறீர்கள் என்று கேட்டால் நீங்கள் பல காரணங்களைப் பட்டியலிடுவீர்கள். நீங்கள் எப்பொழுதும் கவலைக்குக் காரணம் வெளிவிடயங்கள்தான் என்று நினைக்கிறீர்கள். நீங்கள் எப்பொழுதும் வெளியுலகத்தையும் உங்களைச் சுற்றியுள்ள மக்களையுமே உங்கள் கவலைக்குக் காரணம் என்று குற்றம் சாட்டுகிறீர்கள். எண்ண்ிப் பாருங்கள். கவலைக்குக் காரணம் வெளியில் இருந்தால் யாராவது அவைகளை வெற்றிகொண்டு

### ஆன்மீகம் 67

கவலைகளிலிருந்து விடுதலையடைந்திருக்க மாட்டாரா? சரிதானே? ஆனால், அப்படித்தான் இருக்கிறதா? நீங்கள் சந்திக்கும் எவருக்கும் ஏதோ ஒரு கவலையிருக்கிறது. அவர்கள் ஏழையோ அல்லது பணக்காரரோ, கல்யாணம் ஆனவரோ அல்லது ஆகாதவரோ, குழந்தைகள் இருக்கிறதோ அல்லது இல்லாமல் இருக்கிறதோ, வேலை செய்பவரோ அல்லது சொந்தமாகத் தொழில் செய்பவரோ- யாராக இருப்பினும் அனைவருக்கும் கவலைகள் இருப்பதாகவேபடுகிறது. இதற்குக் காரணம் வெளியிலிருப்பதாக நாம் நினைத்தாலும் உண்மையில் நமக்குள்ளேதான் ஆழமாகப் பொதிந்து கிடக்கிறது. (தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவு செலவுத் திட்டம்-2015

...1,000 உள்நாட்டு மீன் பண்ணை கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 200 மில்லியனையும் வளர்ப்பு மீன் ஏற்றுமதியினை விரிவாக்குவதறகு ரூபா 50 மில்லியனையும் ஒதுகீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

உடவளவை, தம்புல்லை, இங்கினியாகலை மற்றும் பொலனறுவை போன்ற இடங்களில் காணப்படும் தேசிய நீரியல் வளங்கள் அதிகார சபையின் மீன் வளர்ப்பு நிலையங்கள் சிறிய, நடுத்தர தொழில முயற்சியாளர்களுக்கு உதவும் வகையில் மேலும் விரிவாக்கப்படும்.

குளிரூட்டப்பட்ட அறைகளை புனரமைத்தல், நியாயமான விலைகளில் வழங்கலினை மேம்படுத்துவதற்காக சந்தைப்படுத்தல் நிலையங்களை உருவாக்குதல் என்பவற்றிற்காக ரூபா 1,500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

சந்தைப்படுத்தல் வசதிகளை விரிவாக்குவதற்கான உபகரணங்கள் மீதான இறக்குமதித் தீர்வைகள் குறைக்கப்படும்.

### மீனவ சமூகத்தின் சமூக பொருளாதார மேம்பாடு

மனவ சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கு தேவையான விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான வாழ்க்கைத்தர மேம்பாடு என்பன அவசியமாகும்.

எனவே, முன்பள்ளிக்கூடங்கள, ஆரம்ப பாடசாலைகளுக்கு செல்லுகின்ற சிறுவர்கள், பெண்கள் மற்றும் வயோதிபர்களுக்கான வாழ்வாதார வாய்ப்புகள், இளைஞர்களுக்கான திறன்விருத்தி மற்றும் மீனவ சமூகத்தின் வீடமைப்பு தேவைப்பாடுகளினை மேம்படுத்தல்என்பவற்றிற்கான 3 வருட விசேட திட்டமொன்றினை செயற்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

மாகாண சபைகளுடன் இணைந்து செயலாற்றுவதற்காக 2015 இலிருந்து ஒவ்வொரு வருடமும் கடற்றொழில் அமைச்சுக்காக ரூபா 750 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு கைத்தொழில்கள்

கௌரவ சபாநாயகர் அவர்களே, உள்நாட்டு பால் உற்பத்தி உள்நாட்டு நுகர்வு தேவைகளில் 40 சதவீதமாக அதிகரித்துள்ளது. அரசாங்கத்துறை மற்றும் தனியார் துறை பாற்பண்ணைகள் அதேபோன்று சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகள் இத்துறையில் அவற்றினது முதலீட்டினை கணிசமானளவு அதிகரித்துளன.

சில உள்நாட்டு நிறுவனங்கள் திரவ பால் உற்பத்தியினையும் ஏனைய பாற்பொருள் உற்பத்திகளையும் அதிகரித்துள்ளன. மில்கோ நிறுவனத்தின் உற்பத்தி ஆற்றலினை இரட்டிப்பாக விரிவாக்குவதற்கும் சிறிய மற்றும் நடுத்தர பாற்பண்ணைகள் அதேபோன்று அரசாங்க பண்ணைகளை ஊக்குவிப்பதற்கு உயர்தர கறவைப் பசுக்கள் 20,000 இனை இறக்குமதி செய்வதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பாற் புண்ணைகள், சேகரிப்பு நிலையங்கள் மற்றும் உபகரணங்களை அதிகரித்தல், விலங்குணவு உற்பத்தியினை அதிகரித்தல் என்பவற்றிற்கு சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் குறைந்த வட்டி விகிதத்தில் விசேட கடன் திட்டமொன்று செயற்படுத்தப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட பால் மாவிற்கான செஸ் வரி கிலோ ரூபா 150 ஆகவும் பட்டர், யோக்கட் மற்றும் பால் பொருள் உற்பத்திகளின் இறக்குமதி மீதான அதிகூடிய செஸ் வரி இக்கைத்தொழிலுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் தொடர்ந்தும் பேணப்பட்டது.

உள்நாட்டு உற்பத்திகளினை பிரசித்தப்படுத்தும் வகையில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பால்மா கிலோ 100 ரூபாவினாலும் யோக்கட் ஒன்று 3 ரூபாவினாலும் குறைப்பதற்கும் உள்ளூர் பாலுற்பத்தியினை அதிகரிப்பதற்கு லீற்றர் ரூபா 60 ஆக திரவப் பாலுக்கான உத்தரவாத விலையினை அதிகரிப்பதற்கும் நான் முனமொழிகின்றேன்.

மாகாண மட்டத்தில் கால்நடைப் பண்ணைகளை ஊக்குவிப்பதற்கும் தரமான விலங்குணவு உற்பத்தியினை அதிகரிப்பதற்கும் சிறிய பண்ணையாளர்களுக்கு உதவியளிப்பதற்கு மாகாண சபைகளுக்கான ஒதுக்கீட்டினை அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

வெளிக்கள அலுவலர்கள் அதே போன்று சிறிய மற்றும் நடுத்தர பாற் பண்ணையாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அதிகரிப்பதற்காக மஹாபெரித்தென்ன, தல்பொக்குண, கேகுந்துர, கரந்தகொலல, சிப்பிக்குளம், வவுனியா, வன்னிகம, கொட்டதெனியாவ, உடுகொட, உப்புவெளி மற்றும் வீரவில ஆகிய இடங்களில் காணப்படும் பயிற்சி நிலையங்களின் கொள்ளளவினை விரிவாக்குவதற்கும் ரூபா 700 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

சில வருடங்களுக்கு முன்னர் காணப்பட்ட உற்பத்திப் பற்றாக்குறையினை நீக்கும் வகையில் கோழி இறைச்சி உற்பத்தி 155,000 மெற்றிக் தொன்னாக அதிகரித்தது.

கடந்த 5 வருடங்களினைவிட ஆளுக்குரிய நுகர்வு ஏறக்குறைய இரட்டிப்பாக 7.5 கிலோ கிராம்களாக காணப்பட்டது. இத்தொழிற்துறையானது ஏற்றுமதி சந்தையிலும் கால் பதித்துள்ளது.

சிறிய கோழிப பண்ணையாளர்களுக்கு உதவும் வகையில் சோள உற்பத்தியினை கிலோ ஒன்றுக்கு ரூபா 40 இற்கு வழங்குவதனை அறிமுகம் செய்வதுடன் கோழி இறைச்சி மற்றும் முட்டைகளின் ஏற்றுமதிக்காக ஊக்குவிப்பு உதவு தொகைகளை வழங்குவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

கோழி வளர்ப்பு தொடர்பான விலங்கு வைத்திய சேவைகளை நவீன வசதிகளுடனும் உபகரணங்களுடனும் உறுதிப்படுத்துவதற்காக ரூபா 200 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

விரிவாக்கற் பணிகளை மேற்கொள்வதற்காக 2015 இல் விலங்கு வளர்ப்புத் துறையில் 500 தொழில்நுட்ப உதவியாளர்களை சேர்த்துக் கொள்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### சுகாதார சேவைகள்

கௌரவ சபாநாயகர் அவர்களே, சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சில மாவட்டங்களில் அதிகரித்துள்ளது.

சுகாதார அமைச்சரின் தலைமையில் ஒருங்கிணைந்த நிகழ்ச்சித் திட்டமொன்று செயற்படுத்தப்பட்டுள்ளது.

மருத்துவர்கள், மருந்துப் பொருடகள் மற்றும் உபகரணங்களுடன் சறுநீரக சுகாதார பராமரிப்பு சேவையினை வழங்குவதற்கான வசதிகள் துரிதப்படுத்தப்பட்ட அடிப்படையில் விரிவாக்கப்பட்டன.

சிறுநீரக நோய்களுக்கெதிராக தடுப்பு நடவடிக்கைகள் வடமத்திய மாகாணத்திலுள்ள கிராமங்களுக்கு நீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதிகளை வழங்கியதன் மூலம் மேற்கொள்ளப்பட்டதுடன் சுதேச மருத்துவ சிகிச்சை வசதிகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

சிறுநீரக நோயினால் கடுமையாக பாதிக்கப்பட்டவர்களுக்கான மாதாந்த கொடுப்பனவாக 3,000 ரூபாவினை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

அதிகளவிலான சிறுநீரக நோயாளர்களை பராமரிக்கும் வகையில் மாளிகாவத்தையிலுள்ள சிறுநீரக வைத்தியசாலையின் வசதிகளை விரிவாக்குவதற்கும் அநுராதபுரம் மற்றும் ஹம்மாந்தோட்டை வைத்தியசாலைகளில் சிறுநீரக நோயாளர்களுக்கான வசதிகளை வழங்குவதற்கும் ரூபா 750 மில்லியனை நான் ஒதுக்கீடு செய்துள்ளேன்.

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை அதிக எண்ணிக்கையிலான உள்ளக மற்றும் வெளி நோயாளர்களை பராமரிக்கும் வகையில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.


யாழ்ப்பாணம், கண்டி, பதுளை, அநுராதபுரம் மற்றும் காலி வைத்தியசாலைகளில் கதிரியக்க அயடீன சிகிச்சைப் பிரிவுகள் விரிவாக்கப்படவுள்ளன.

பெண்களுக்கான புற்றுநோய் தடுப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 700 மில்லியனை ஒதுக்கீடு செய்ய முன்மொழிகின்றேன்.

கடந்த வருட வரவு செலவுத்திட்ட முன்மொழிவிற்கு அமைவாக பாரிசவாதம் தொடர்பான மருத்துவ பராமரிப்பினை முகாமை செய்வதற்கு தேசிய பாரிசவாத நிலையமொன்றினை உருவாக்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நவீன மருத்துவ வசதிகளுடன் அநுராதபுரம், இரத்தினபுரி, பதுளை, அம்பாறை, மாத்தறை மற்றும் குருநாகல் வைத்தியசாலைகளில் விசேட பாரிசவாத நிலையங்களை உருவாக்குவதற்கு ரூபா 300 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

தாய் பராமரிப்பிற்கு விசேட கவனம செலுத்த வேண்டுமென்ற வகையில் தாய் பராமரிப்புக்கான சிறந்த மையங்களாக கறாப்பிட்டிய, கொழும்பு, கண்டி, அநுராதபுரம் தாய் பராமரிப்பு வைத்தியசாலைகளை உருவாக்குவதற்கும் தாய், சேய் பராமரிபபு விசேட நிலையங்களாக பதுளை மற்றும் பெலியத்தை வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வதற்குமாக ரூபா 1,500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.



அடுத்த 10 வருடங்களுக்கு எமது நாட்டின் சிறுவர் பராமரிப்பு தேவையினை நிறைவேற்றுவதற்கும் சிறுவர் பராமரிப்பு தொடர்பான மருத்துவ ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்குமான வசதிகளைக் கொண்ட சிறந்த நிலையங்களாக இரண்டு தேசிய சிறுவர் வைத்தியசாலைகளையும் நவீனமயப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவு மற்றும் ஏனைய துணை வசதிகளையும் விரிவுபடுத்தும் வகையில் வெளி நோயாளர் பராமரிப்பு ஆற்றல் 2017 இல் நிறைவு செய்யப்படும்.

நடமாடும் மருத்துவ சிகிச்சைகளின் மூலம் அனைத்து பிரஜைகளினதும் துரிதப்படுத்தப்பட்ட மருத்துவ பரிசோதனைகளை செயற்படுத்துவதற்கும் நோய் தடுப்பு பராமரிப்பினை உறுதிப்படுத்துவதற்கான பரிசோதனை தொடர்பான வசதிகளை விரிவாக்குவதற்கும் ரூபா 500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

அத்தகைய சிகிச்சைகளை ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் ஏற்பாடு செய்வதற்காக அனைத்து விகாரைகளினதும் ஒத்துழைப்பினை நான் எதிர்பார்க்கின்றேன்.

திடீரென நோய்வாய்ப்பட்டவர்களை வைத்தியசாலைகளுக்கு பாதுகாப்பாக எடுத்துச் செல்வதற்காக அவசர பராமரிப்பு சேவைகளை வழங்குவதற்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மூலம் பிரதான வைத்தியசாலைகளில் நடமாடும் அம்பியுலன்ஸ் சேவையினை ஆரம்பிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### சுதேச மருத்துவத்துறை

ஆயுர்வேத வைத்தியசாலைகளை புனரமைத்தல் மற்றும் சுதேச மருத்துவ ஆராய்ச்சியினை முன்னேற்றுவதற்காக ரூபா 500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழகின்றேன்.

அரசாங்க ஆயுர்வேத வைத்தியசாலைகளில் பணியாற்றுகின்ற சுதேச மருத்துவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவாக 5,000 ரூபாவினை வழங்குவதற்கு முன்மொழிகின்றேன்.

சுதேச மருத்துவ தொழில்புரிநர்கள் தமது மருந்தகங்களை மேம்படுத்துவதற்கும் சுதேச மருத்துவத் துறையினை விருத்தி செய்வதற்குமாக் 6 சதவீத வட்டியில் 500,000 ரூபா வரை கடன்திட்டமொன்றினை செயற்படுத்துவதற்கும் முனமொழிகின்றேன்.

### முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி

கௌரவ சபாநாயகர் அவர்களே, சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி என்பவற்றிற்கு விசேட முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டியுள்ளது.

சிறுவர் அபிவிருத்தி உபகரணங்கள் மற்றும் முன்பள்ளி பாடசாலைகளுக்கான பொருட்களுடன் அனைத்து முன்பள்ளிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

அத்தகைய பாட சாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கான ஏதேனும் அவசர செலவினங்களுக்காக ரூபா 10,000 கடன் வசதியுடன் மாதாந்த கொடுப்பனவாக 2,500 ரூபாவினை வழங்குவதற்கும் நான் முன்மொழிகின்றேன். சிறுவர் அபிவிருத்தி மற்றும் முன்பள்ளிக்கூட கல்வி தொடர்பான பயிற்சி வசதிகளும் அவர்களுக்கு வழங்கப்படும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லை தாண்டும் இந்திய மீனவர்; இலங்கை அரசின் புதிய அஸ்திரம்

இனிமேல் இராமேஸ்வரம் கடல் பகுதியில் மீன் பிடித்தால், இதுதான் தண்டனை' எனச் சொல்லாமல் சொல்லியிருக்கிறது இலங்கை அரசு. வழக்கமாக தமிழகத்தைச் சேர்ந்த இந்திய மீனவர்கள் மீது இலங்கை இராணுவம் கைது, சித்திரவதை, படகு பறிமுதல், மீன்பிடிப் பொருட்கள் சூறை... என்றுதான் தாக்குதல் தொடுக்கும். இப்போது ஐந்து மீனவர்களுக்கு போதைப்பொருள் கடத்தல் வழக்கில் தூக்குத் தண்டனை விதித்திருக்கிறது இலங்கை நீதிமன்றம். தண்டனை விதிக்கப்பட்ட எட்டு பேரில், பிரசாத், எமர்சன், வில்சன், லாங் லெட், அகஸ்டஸ் ஆகிய ஐவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த


வில்சன் குடும்பம்


மீனவர்கள். மற்றவர்கள் இலங்கைத் தமிழர்கள். தூக்கு எனத் தீர்ப்பு வந்ததும், துயரம் சூழ்ந்த தீவாகிவிட்டது இராமேஸ்வரம்!

**அப்பாவிகளைத் தாக்கிய இடி!**

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ஐவரில் ஒருவர், பிரசாத். ஸ்கெனிட்டாவுக்கும் பிரசாத்துக்கும் 2009ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. பிரசாத் இலங்கைக் கடற்படையால் பிடிபட்டபோது ஸ்கெனி ட்டா, 45 நாள் கர்ப்பம் . தன் கணவரிடம் குழந்தையைக் காட்ட வேண் டும் என ஆசையுடன் காத்திருந்த ஸ்கெனிட்டாவுக்கு இந்தத் தீர்ப்பு பேரதிர்ச்சி.

இராமேஸ்வரம் தங்கச்சி மடத்தைச் சேர்ந்த கிளாட்வின் என்பவர் படகில் 2011ஆம் ஆண்டு நவம்பர் 28ஆம் திகதி மீன்பிடிக்க அஞ்சு பேரும் கடலுக்குப் போனாங்க. அதில் என் கணவர் பிரசாத்தும் ஒருவர. அரசாங்கத்திடம் டோக கன் பெற்று முறையான அடையாள அட்டையுடன் தான் மீன் பிடிக்கப் போனாங்க். அன்னைக்கு 700 படகுகள் வரை கடலுக்கு பாடெடுக்கப் போயிருந்துச்சு. அவங்களை எல்லாம் வளைச்சுப் பிடிச்ச இலங்கை இராணுவம் எல்லா படகுகளிலும் மீன்கள், இறால்களைக் கொள்ளையடிச்சுட்டு துரத்தி விட்டாங்க. ஒவ்வொருத்தரா திரும்பி வர்றப்போ, எங்க வீட்டுக்காரர் படகும் திரும்பி வந்துரும்னு காத்திருந்தோம். ஆனா, வரவே இல்லை. விசாரிச்சா அந்தப் படகில் இருந்த அஞ்சு பேரை மட்டும், பிடிச்சுக் கொண்டுபோயிட்டதா சொனனாங்க. திங்கட்கிழமை கைதுபண்ணினவங்களை, இரண்டு நாட்கள் காவலில் வெச்சிருந்து புதன்கிழமை தான் கோர்ட்ல ஆஜர்படுத்தினாங்க. அப்போதான் அவங்க மேல போதைப் பொருள் கடத்தினதா கேஸ் போட்டிருக்காங்கனு சொன்னாங்க. எங்களுக்கு என்ன பண்றதுனே தெரியலை. உடனே நாங்க அரசாங்க அதிகாரிகளிடம்தான் ஓடினோம். நீங்களேகூட எங்க அஞ்சு குடும்பங்களையும் விசாரிச்சுக்கங்க. நாங்க நிரபராதினு தெரிஞ்சா மட்டும் எங்க ளுக்கு உதவுங்கனு கேட்டோம்.

தமிழக அரசின் உளவுத் துறை எங்க வீட்டுக்காரங்களோட மொபைல் போன்ல் இருந்து கடந்த ஒரு வருட த்தில் யார் யாருக்கு எல்லாம் பேசியிருக்காங்க, என்னவெல்லாம் தகவல் பரிமாற்றங்கள் நடந்திருக்குனு



விசா ரிச்சுட்டு, உங்க ஆளுங்க எந்தத் தப்பும் செய்யலைனு சொன்னாங்க. என் கணவர் கைதுசெய்யப்பட்டு எட்டு மாதம் இந்த விசாரணை நடந்துச்சு. அப்புறம்தான் ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரெண்டு இலட்ச ரூபாய் இழப்பீடும், தினம் 250 ரூபாய் பணமும் தமிழக அரசு கொடுத்தது. எங்க வழக்குகளை இந்த நிமிஷம் வரை நடத்துவது தம்ழக அரசுதான். ஆனா, தமிழக அரசு விசாரிச்சு தெரிஞ்சுக்கிட்ட உண்மையை, மததிய அரசு காதுலயே வாஙகிக்கலை. மத்திய அரசு கவனத்துக்கு நாங்க பலமுறை இந்த விடயத்தைக் கொண்டு போயும், அது பத்தி எந்த அக்கறையும் அவங்க காட்டலை. ஆரம்பத்தில் இருந்தே இந்தியத் தூதரகம் தன் எதிர்ப்பைப் பதிவு செய்தி ருந்தால், இப்படி ஒரு தீர்ப்பு வந்திருக்காது. கடைசியில் நாங்கதான் ஏமாந்து நிக்கி றோம்!

பிடிபட்ட படகை ஓட்டிச் சென்றவர் எமர்சன். அவருடைய மனைவி லாவண்யாவால் தீர்ப்பின் அதிர்ச்சியை இன்னமும் ஜீரணிததுக் கொள்ள முடியவில்லை.


எங்க வீட்ல ஆணும் பொண்ணுமா மொத்தம் 9 பேர். எல்லோரும் ஒரே வீட்ல கூட்டுக் குடும்பமா இருந்தோம். அவரை ஏதேதோ கொடுமைப் படுத்துனதா சொன்னாங்க. ஆனா, கடைசில உயிரோட அனுப்பிருவாங்கங்கிற நம்பிக்கைல இருந்தோம். அதுக்கும் இப்போ சிக்கல். அரசாங்கம் எங்களுக்கு நல்ல வழி காமிக்கணும் என அழுது புலம்பும் லாவண்யாவை, அவரது இரண்டு குழந்தைகளும் வெறித்து நோக்கின்றனர். தூக்குத் தண்டனை பெற்றிருக்கும் வில்சனுக்கு ஏழு சகோதரிகள். காவியா, சுபிக்ஷா, ஜோகன்ஸ் என மூன்று குழந்தைகள். அவர் ஒருத்தரோட வருமானத்தில்தான் மொத்தக் குடும்பமும் நடந்துச்சு. கைது பண்ண ப்போ சீக்கிரம் அவரை விட்ரு வாங்கனுதான் காத்துட்டு இருந்தோம். ஒவ்வொரு முறை அங்கே இருந்து விடுதலையாகி வர்ற வங்ககிட்ட, எம் புருஷனைப் பார்த்தீங்களா... நல்லா இருக்காரானு விசாரிப்பேன். ஆனா, பதிலே இருக்காது. தீர்ப்பு சொல்றப்போ, நிச்சயம் விடுதலை பண்ணிருவாங்கனு நம்பி குடும்பத்தோடு டி.வி முன்னாடி தவம் கிடந்தோம். ஆனா, திடுக்னு தூக்குத் தண்டனைனு சொல்லிட்டாங்க.

ஜான் பிரிட்டோவின்


லாங்லெட்டின் தாய்
பிரசாத் குடும்பம்


ஒரே ஒரு மகன் லாங்லெட். நாமக்கல் பள்ளி ஒன்றின் பத்தாம் வகுப்பு மாணவன். ஜான் பிரிட்டோவுக்கு உடல் நலம் சரியில்லாத நாள் அன்று விடுமுறையில் ஊருக்கு வந்திருக்கிறான் லாங்லெட். அப்பாவுக்குப் பதிலாக தான் கடலுக்குச் சென்றால் அன்றைய வருமானம் குடும்பத்துக்கு உதவுமே என பாடெடுக்கச் சென்றிருக்கிறான். அன்று சென்றவன்தான்... இன்று இலங்கை அரசாங்கத்தால் தூக்கு மேடைக்குத் தள் ளப்பட்டிருக்கிறான். ஒரே மகனை இலங்கை அரசின் கோரப்பிடியில் இருந்து எப்படி மீட்பது எனத் தெரியாமல், பித்துப்பிடித்து அலைகி றார்கள் ஜான் பிரிட்டோவும் அவரது மனைவியும்.

தமிழகப் பிரதிநிதி அருளானந்தம் இப்போது மேல் முறையீட்டு நடவடிக்கைகளுக்காக கொழும்பில் இருக்கிறார். அவரைத் தொடர்புகொண்டு பேசினேன்...


எமர்சன் குடும்பம்

நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த நம் மீனவர்களைச் சுற்றிவளைத்த இலங்கைக் கடற்படை, அவர்கள் பிடித்துவைத்திருந்த மீன்களை எடுத்துக்கொண்டு நால்வரை தங்கள் படகில் ஏற்றிக்கொண்டு, எமர்சனை படகை ஓட்டிக் கொண்டு தங்களைப் பின் தொடருமாறு துப்பாக்கி முனையில் மிரட்டி அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அவர்களை நெடுந்தீவு கடற்கரை முகாமுக்குக் கொண்டு சென்றனர். மறுநாள் காலை காங்கேசன்துறை பொலிஸிடம் இவர்களை ஒப்படைத்த போது, அங்கு ஏற்கனவே இலங்கைத் தமிழ் மீனவர்கள் கமல் கிறிஸ்டியன், கில்சன், துசாந்தன் ஆகிய மூவர் இருநதுள்ளனர். தமிழக மீனவர்கள் தாங்கள் கொண்டுவந்த 999. 4 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை, இலங்கை மீனவர்களிடம் கொடுத்ததாக போதைத் தடுப்புப் பிரிவின் கீழ் வழக்கு பதிந்தனர். நம் மீனவர் தரப்பு நியாயத்தை அழுத்தமாக எடுத்துச் சொல்லலாம். அப்போது அவர்கள் விடுதலை ஆவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது! என்கிறார் அருளானந்தம்.

இராணுவம் போதைப் பொருளை வைக்கும், பொலிஸ் கைது செய்யும்' என்பது இலங்கையில் வாடிக்கையான ஒன்று. 2009ஆம் ஆண்டு க்குப் பிறகு உள்நாட்டு யுத்தத்தை முடித்துவிட்ட இலங்கை அரசுக்கு, பெரும் தலைவலியாக இருப்பது இராமேஸ்வரம் மீனவர்கள் தான். இனி எப்போதும் ஈழத்தில் தமிழர்கள் அரசியல் ரீதியாகப் பலம்பெறாமல் இருக்க, புவியியல்ரீதியாக இராமேஸ்வரம் கடல் பகுதியை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நினைக்கிறது இலங்கை அரசாங்கம். அதனாலேயே தீவுப் பகுதி மீனவர்களோடு, ஒரு மறைமுக யுத்தத்தைத் தொடங்கியிருக்கிறது இலங்கை இராணுவம். அந்த யுத்தத்தின் ஆரம்ப சமிக்ஞைதான், இந்தத் தூக்குத் தண்டனை!


அகஸ்டஸ் குடும்பம்

**ஆனந்த விகடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெ. விமான தாக்குதல்; அல்கொய்தா தளபதி பலி!

அரபு நாடான ஏமன் நாட்டின், மத்திய பகுதியில், தீவிரவாதிகளை குறி வைத்து அமெரிக்காவின் ஆளில்லா விமானம் நேற்று முன்தினம் குண்டு வீச்சு நடத்தியது.

இந்த வான் தாக்குதலில் உயிரிழந்தவர்களில் முக்கியமானவர், அரேபிய தீபகற்ப பகுதியில் அல்கொய்தா தீவிரவாத இயக்கத்தின் தளபதியாக திகழ்ந்த ஷாக்கி அல் பதானி ஆவார். இவருக்கு, ஏமன் தலைநகர் சானாவில் 2012ஆம் ஆண்டு நடந்த தற்கொலை படை தாக்குதலிலும், அதன்பின்னர் அங்கு அமெரிக்க தூதரகத்தில் நடந்த தாக்குதலிலும், 100இற்கும் மேற்பட்ட படை வீரர்கள் கொல்லப்பட்டதில் முக்கிய பங்கு உண்டு என கருதி, சர்வதேச பயங்கரவாதியாக அறிவித்து அமெரிக்கா தேடி வந்தது.

அவரது தலைக்கு அமெரிக்கா ஒரு இலட்சம் டொலர் விலையும் வைத்தது. இந்த நிலையில்தான் அவர் அமெரிக்க தாக்குதலில் பலியாகி உள்ளார்.

இன்னொரு முக்கிய நபர், அன்சார் அல்ஷரியா என்ற உள்ளூர் தீவிரவாத அமைப்பின் தலைவராக விளங்கிய நாபில் அல் தஹாப் ஆவார். நேற்று முன்தினம் ஒரே நாளில் மத்திய ஏமனில் பல்வேறு பகுதிகளில் அமெரிக்காவின் ஆளில்லா விமானம் நடத்திய குண்டு வீச்சில் மொத்தம் 10இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் பலியாகி உள்ளதாக தகவல்கள் கூறுகின்றன. (இ-5)

## ஜெருசலேமில் முக்கிய புனித ஸ்தலத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள்-பொலிஸார் மோதல்



ஜெருசலேமிலுள்ள முக்கிய புனித ஸ்தலமொன்றில் பாலஸ்தீன ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இஸ்ரேலிய பொலிஸாருக்குமிடையே நேற்று முன்தினம் உக்கிர மோதல்




இடம்பெற்றுள்ளது.

அல் அக்ஸா பள்ளிவாசலை உள்ளடக்கிய மேற்படி ஆலய மலை என அழைக்கப்படும் புனித ஸ்தலமானது கடந்த வாரம் தற்காலிகமாக மூடப்பட்டது.

இதன்போது, ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

கடந்த வாரம் முக்கிய வலதுசாரி யூத செயற்பாட்டாளர் மீதான துப்பாக்கிச் சூட்டையடுத்து மேற்படி பிராந்தியத்தில் பதற்றநிலை அதிகரித்துள்ளது.

இந்த துப்பாக்கிச்சூட்டில் யூத செயற்பாட்டாளரான ரப்பி யெஹூடா கிளிக் படுகாயமடைந்தார்.

புனித ஸ்தலத்திலான யூதர்களின் வழிபாட்டு உரிமைகளுக்காக பிரசாரம் செய்வதில் ரப்பி முக்கிய வகிபாகம் வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மேற்படி புனித ஸ்தலத்திற்கு விஜயம் செய்யத் திட்டமிட்டுள்ளதாக யூதக் குழுக்கள் அறிவித்ததையடுத்தே அந்த ஸ்தலத்தில் புதிதாக மோதல்கள் இடம்பெற்றுள்ளன.


இந்த மோதல்களில் 20 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். (இ-5)

# பயங்கரம்

## 18 பேர் உடல் கருகிப் பலி; பலர் படுகாயம்!

(கெய்ரோ)

**பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற வாகனம் ஒன்று லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 18 மாணவர்கள் உடல் கருகிப்பலியான பயங்கர விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் எகிப்தில் கெய்ரோ நகரில் இடம் பெற்றுள்ளது. இந்த கோர விபத்துச் சம்பவத்தால் அந்நாட்டு மக்கள் பெரும் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர். இதேவேளை இந்த விபத்தில் சிக்கிய மேலும் பலர் உயிரிழக்கக்கூடிய அபாயம் காணப்படுவதாகவும் சுமார் 18 பேர் படுகாயங்களுடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.**





இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கெய்ரோ நகரத்தில் இருந்து 160 கிலோமீற்றர் வடக்கே உள்ள தம ன்ஹூர் எனும் இடத்தில் நேற்று முன்தினம் பாடசாலை வாகனம் ஒன்று டேங்கர் லொறியுடன் மோதியது. அப் போது வாகனங்கள் தீப்பற்றி எரிந் ததால், பலர் உடல் கருகிப் பலியாகினர். இதனால் இறந்தவர்களில் எத்தனை பேர் பாடசாலைக் குழந்தைகள் என்பது உடனடியாகத் தெரியவில்லை.

மொத்தம் 18 பேர் உயிரிழந்ததாகத் தகவல் தெரிய வந்துள்ளது. இந்த விபத்தில் மேலும் 18 பேர் படுகாயமடைந்தனர். சமீபத்தில் பெய்த கனமழையால் பாடசாலை வாகனம் சறுக்கி நிலை தடுமாறியது அதனால் விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று மாகாண ஆளுநர் முஸ்தபா ஹதூத் விளக்கம் அளித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இதேபோன்றதொரு சம்பவத்தில் 11 மாணவிகள் உயிரிழந்தனர்.

எகிப்தில் சாலை விதிகள் அவ்வளவு கடுமையாகப் பின்பற்றப்படுவதில்லை.

இதனால் எகிப்தில் ஓர் ஆண்டில் சுமார் 12ஆயிரம் இறப்புகள் விபத்துகளால் ஏற்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஒபாமாவுக்கு பெரும் பின்னடைவு

அமெரிக்க நாடாளுமன்ற மற்றும் செனட் உறுப்பினர்களுக்கான தேர்தலில், அந்நாட்டின் குடியரசுக் கட்சி வெற்றி பெற்றுள்ளது. இதனால் ஜனாதிபதி ஒபாமாவின் ஜனநாயகக் கட்சி ஆட்சிக்கு கடுமையான நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்த தேர்தலில் செனட் உறுப்பினர்களை ஜனநாயகக் கட்சி இழந்ததைத் தொடர்ந்து, அடுத்த இரண்டு ஆண்டு கால ஆட்சியில் ஜனாதிபதி ஒபாமா பெரும்பான்மையின்றி ஆட்சி நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் அனைத்து திட்டங்களை அமுல்படுத்துவதற்கு அவர் இனி எதிர்க்கட்சி செனட் உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெற வேண்டி இருக்கும். கடந்த 8 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இந்த தேர்தலில் எதிர்க்கட்சியான குடியரசுக்கட்சி பெரும்பானமை பலம் பெற்றுள்ளது.

இந்த மாற்றத்துக்கு ஜனாதிபதி ஒபாமாவின் அரசியல் மற்றும் வெளியுறவு கொள்கைகளே காரணமாக கருதப்படுகிறது.

அமெரிக்க நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் அவை, செனட் அவைக்கு (மூன்றில் ஒரு பகுதி மட்டும்) கடந்த செவ்வாய்க்கிழமை தேர்தல் நடைபெற்றது. இத்துடன் 38 மாகாணங்களுக்கான ஆளுநர் பதவிகள், 46 மாகாண சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகளுக்கான தேர்தலும் நடைபெற்றது.

இந்த தேர்தலுக்கான வாக்கு நிலவரம் நேற்று முன்தினம் காலை வெளியானது. செனட அவையில் எதிர்க்கட்சியான குடியரசுக் கட்சியின் 45 உறுப்பினர்கள் என்ற எண்ணிக்கை 52 ஆக உயர்ந்துள்ளது. அதேபோல, ஒபாமாவின் ஜனநாயகக் கட்சியின் பலம், இருந்த 53 உறுப்பினர்களிலிருந்து 43 ஆகக் குறைந்து பின்னடைவை சந்தித்துள்ளது.

இதன் மூலம் அமெரிக்க செனட் அவையில் குடியரசுக் கட்சிபெரும்பான்மை பலம்பெற்றுள்ளது. மேலும், பிரதிநிதிகள் அவையில் குடியரசுக் கட்சியின் பலம் 225 என்ற எண்ணிக்கையிலிருந்து 235 ஆக அதிகரித்துள்ளது. ஒபாமாவின் ஜனநாயக கட்சி 8 இடங்கள் குறையப் பெற்று 157 இடங்களாக உள்ளது.

### அமெரிக்க வாழ் இந்திய பெண் வெற்றி

தெற்கு கரோலினா ஆளுநர் நிக்கி ஹாலே தொடர்ந்து இரண்டாவது முறையாக வெற்றி கண்டுள்ளார். இந்திய வம்சாவளி பெண் இரண்டாவது முறையாக வெற்றி கண்டுள்ளது அமெரிக்க வாழ் இந்தியர்களிடையே உற்சாகத்தை ஏற்படுத்தி உள்ளது. இதுபோல கலிபோர்னியா அட்டர்னி ஜெனரல் பதவிக்கு கமலா ஹாரிஸ் (வயது-50) இரண்டாவது முறையாக தேரந்தெடுக்கப்பட்டுள்ளார். (இ-5)

## தீவிரவாதிகளின் புகலிடமாக பாகிஸ்தானே திகழ்கின்றது

### பென்டகன் அறிக்கைக்கு பாக். கண்டனம்

தீவிரவாதிகளின் புகலிடமாக பாகிஸ்தான் விளங்குவதாகவும் வலிமை மிக்க இந்திய இராணுவத்திற்கு எதிராக பாகிஸ்தான் தீவிரவாதிகளை பினாமிகளாக பயன்படுத்துகிறது என அமெரிக்காவன்பெனடகன்பகிரங்கமாக குற்றம் சாட்டியது.

இந்த நிலையில், பென்டகன் அறிக்கைக்கு கண்டனம் தெரிவித்துள்ள பாகிஸ்தான், அமெரிக்காவின் அறிகையில் ஆதாரமற்ற குற்றச் சாட்டுக்கள் மற்றும் தேவையற்ற கருத்துக்கள் இருப்பதாக குற்றம்சாட்டியுள்ளது.

அமெரிக்க இராணுவ தலை மையகம் பென்டகன், அறிக்கை ஒன்றை அளித்துள்ளது. அந்த அறிக்கையில் பாகிஸ்தானில் இயங்கி வருகிற தீவிரவாதிகள் இந்தியா, ஆப்கானிஸ்தானில் தாக்குதல் நடத்துவதில் தொடர்ந்து கவனம் செலுத்துகின்றனர். இது ஆப்கானுக்கு கேடாகவும், பிராந்திய ஸ்திரத் தன்மைக்கு தீங்காகவும் அமைகிறது. ஆப்கானிஸ்தானில் செல்வாக்கை இழந்த நிலையில், தீவிரவாதிகளை அங்கு பாகிஸ்தான் மறைமுகமாகப் பயன்படுத்துகிறது. இதே போன்று வலுவான இந்திய இராணுவத்தை எதிர் கொள்வதற்கு தீவிரவாதிகளை பினாமிகளாக பயன்படுத்துகிறது என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் கட்டுப்பாடுகள் சட்ட விரோதமானவை

## சட்டத்தரணிகள் அமைப்பு சுட்டிக்காட்டு

வெளிநாட்டு கடவுச்சீட்டுகளை வைத்திருப்பவர்கள் வடபகுதிக்கு செல்வதற்கு அரசாங்கம் விதித்துள்ள கட்டுப்பாடுகள் சட்டவிரோதமானவை, அரசமைப்பிற்கு எதிரானவை என இலங்கையின் மூத்த சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

பிரபல சட்டத்தரணிகள் ஏ.ஜே வெலியமுன மற்றும் லால் விஜய நாயக்க ஆகியோரை உள்ளடக்கிய சட்டத்தரணிகள் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையிலேயே இது குறித்து சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் உச்ச நீதிமன்றம் வழங்கிய பல தீர்ப்புகளின் படி நடமாடுவதற்கான சுதந்திரத்தை கட்டுப்படுத்துவதை பாராளுமன்ற சட்டம் மூலமாகவோ அல்லது அவசரகால சட்டம்மூலமாகவோ மாத்திரமே செய்யமுடியும் என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

தற்போது வடபகுதிக்கான போககுவரத்து கட்டுப்பாடுகளை விதிக்கும் சட்டங்களோ அல்லது அவசரகாலச்சட்டமோ இல்லாததால் பாதுகாப்பு அமைச்சிற்கோ அல்லது வேறு எந்த தரப்பிற்கோ இவ்வாறான கட்டுப்பாடுகளை விதிக்கும் அதிகாரம்கிடையாது என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அரசாங்கமோ அல்லது பாதுகாப்பு அமைச்சோ ஏன் வடபகுதிக்கு மாத்திரம் இவ்வாறான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன என்பதை தெளிவுபடுத்தவில்லை,

தேர்தல் காலத்தில் இவ்வாறான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமை அரசாங்கத்தின் உள்நோக்கம் குறித்த சந்தேகங்களை எழுப்புகின்றது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# சீனாவின் நீர்மூழ்கிக்கப்பல் குறித்து இலங்கை அரசிற்கு அச்சம் இல்லை

இலங்கைக்கு சீனாவின் நீர்மூழ்கிக்கப்பல் வந்து செல்கின்றமை அச்சுறுத்தல் நிலையை ஏற்படுத்தவில்லை என்று இலங்கை தெரிவித்துள்ளது.

சீனாவின் நீர்மூழ்கிக்கப்பல் ஆபிரிக்காவில் இருந்து திரும்பும் போதே இலங்கைக்கு வந்துள்ளது.

எனவே அது அச்சநிலைக்கான காரணத்தை உண்டாக்கவில்லை என்று அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

இந்தியாவில் இடம்பெற்ற மாநாடு ஒன்றில் பங்கேற்றுள்ள அவர், செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீனாவின் உதவியுடன் பாரிய எரிபொருள் குதம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் இலங்கையில் மரண தண்டனை பெற்ற ஐந்து தமிழக மீனவர்களின் பிரச்சினை சுமுகமாக தீர்க்கப்படும் என்றும் அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பல வருட காலமாக மரணதண்டனை நிறைவேற்றப்படுவதில்லை.

எனவே மரணதண்டனை தீர்ப்பளிக்கப்பட்டுள்ள ஐந்து மீனவர்களின் பிரச்சினையை இரண்டு நாடுகளும் உரிய வகையில் தீர்த்துக் கொள்ளலாம் என்று அவர் தெரிவித்துள்ளார். (இ-5)



பதுளை ,மீரியபெத்த மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென யாழ். வணிகர் கழகத்தினால் யாழ்ப்பாண வர்த்தகர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட ஒரு தொகை உடுபுடைவைகள் மற்றும் உலர் உணவுப் பொதி கள் நேற்று முன்தினம் வடமாகாண விவசாய அமை ச்சர் பொ.ஐங்கரநேசனிடம் நேரடியாக கையளிக் கப்பட்டது.இந்நிகழ்வில் யாழ். வணிகர் கழகத்தின் தலைவர் இ.ஜெயசேகரன், செயலாளர் இ.ஜன க்குமார் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர் கேசவன் ஆகியோர் வணிகர் கழகம் சார்பாக பங்கு பற்றினர்.

# தமிழக மீனவர்களை விடுவிக்ககோரி ரயில் மறியலில் ஈடுபட்ட 41பேர் கைது

இலங்கையில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ள 5 தமிழக மீனவர்களை விடுவிக்கக்கோரி தமிழர் ஒற்றுமை கூட்டமைப்பு சார்பில் திருச்சியில் ரயில் மறியல் செய்ய முயன்ற 41 பேர் கைது செய்யப்பட்டனர்.

விடுதலை சிறுத்தைகள், புதிய தமிழகம், தந்தை பெரியார் தி.க, பெரியார் பாசறை, தமிழ் தேசிய பேரா யம், ஆதி தமிழர் பேரவை உட்பட 16 அமைப்புகள் சார்பில் நடந்த இந்த போராட்டத்துக்கு தந்தை பெரியார் தி.க. மாநகர் மாவட்டத் தலைவர் சரவணன் தலைமை வகித்தார். ஜங்ஷன் நுழைவு வாயிலிலிருந்து மறியல் செய்ய சென்ற அவர்களை முன்பதிவு மையம் அருகில் கண்டோன்மென்ட் இன்ஸ்பெக்டர் உமாசங்கர் மற்றும் பொலிசார் தடுத்து நிறுத்தினர். அதையும் தாண்டி அவர்கள் ரயில் நிலையத்துக்குள் நுழைய முயன்றனர். இதில் 3 பெண்கள் உட்பட 41 பேரை பொலிசார் கைது செய்து, கருமண்டபத்தில் உள்ள திருமண மண்டபத்துக்கு கொண்டு சென்றனர்.

இதுகுறித்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறுகையில், இனப்படுகொலை நடந்த இலங்கையில் கடந்த 45 ஆண்டுகளாக தூக்குத் தண்டனை என்ற முறை நடைமுறையில் இல்லை. தற்போது தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது திட்டமிட்டே தமிழர்களை கொலை செய்யும் நோக்கம். இதில் மோடி அரசு தலையிட்டு தமிழர்களை மீட்க வேண்டும். இல்லையெனில் போராட்டம் தீவிரமாகும் என்றனர். (இ-5)

# தூக்குத் தண்டனையை எதிர்த்து சென்னையில் சீமான் போராட்டம்



இராமேஸ்வரம் தங்கச்சி மடத்தை சேர்ந்த 5 மீனவர்களுக்கு இலங்கையில் அண்மையில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது.

போதை பொருள் கடத்தியதாக குற்றம் சாட்டி கொழும்பு மேல் நீதிமன்றம் மீனவர்களுக்கு இந்த தண்டனையை விதித்துள்ளது. இதற்கு தமிழக அரசியல் கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

மீனவர்களுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை இரத்து செய்ய வலியுறுத்தியும், இலங்கை அரசை கண்டித்தும், நாம் தமிழர் கட்சி சார்பில் சென்னையில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஆர்ப்பாட்டத்துக்கு தலைமை தாங்கினார்.

இதில் ஏராளமான நாம் தமிழர் கட்சி நிர்வாகிகளும், தொண்டர்களும் கலந்து கொண்டனர். (இ-5)

# புலம்பெயர் தமிழர்களுடனும் இணக்கம் ஏற்படுத்த முயற்சி

(கொழும்பு)

தேர்தலில் தோற்று விடுவோம் என்ற கடும் அச்சத்தில் ராஜபக்ஷவினர் இருப்பதாக ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் மாத்தறையில் நடைபெற்ற கூட் டம் ஒன்றில் அவர் இதனை கூறியுள்ளார்.

தேர்தலில் தோல்வியடைந்து விடுவோம் என்ற அச்சத்தில் இருக்கும் அரசாங்கம் புலம்பெயர் தமிழர் களுடன் ஒரு இணக்கத்திற்கு வரும் கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

புலம்பெயர் தமிழர்களின் ஆதரவை பெற அரசாங்கம் பாகிஸ்தான் முன்னாள் அமைச்சர் ஒருவர் ஊடாக கொடுக்கல் வாங்கல்களை ஆரம்பித்துள்ளது.

புலம்பெயர் தமிழர்களுக்கு பணத்தை கொடுத்து, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு மக்கள் வாக்களிப்பதை தடுப்பதற்காகவே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமது நன்மைக்காக எந்த தரப்பாக இருந்தாலும் அவர்களுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்தக் கூடிய அணிதான் இந்த ராஜபக்ஷவினர் எனவும் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். (இ)

# ஜனாதிபதி மகிந்தவை தோற்கடித்து சு.கட்சியை பாதுகாக்க வேண்டுமாம்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாட்சி தோற்கடிக்கப்பட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பாதுகாக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தக்கருத்தை நேற்று முன்தினம் வெளியிட்டார்.

ரயில்வே ஊழியர்களின் நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர், ஐக்கிய தேசியக் கட்சியை பொறுத்தவரை ராஜபக்ஷ அரசாங்கமே தோற்கடிக்கப்பட வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தோற்கடிக்கப்படக்கூடாது. அது ஜனநாயகத்தை பாதுகாக்கும் கட்சியாக திகழ வேண்டும் என்று ரணில் குறிப்பிட்டார்.

வழமையாக கட்சி ஒன்று நாட்டில் இரண்டு தவணைகளுக்கு மேல் ஆட்சி செய்யக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார். (இ-5)

# யாஷிடி சிறுமிகளை விலைபேசி விற்கும் ஐ.எஸ்.தீவிரவாதிகள் வீடியோ வெளியீடு

ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகள் சில பகுதிகளை கைப்பற்றி வைத்துள்ளனர். அங்குள்ள சின்சார் மலை பகுதியில் யாஷிடி என்ற பழங்குடி மதத்தினர் வசித்து வந்தனர்.

இந்த மலை பகுதியை ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றினார்கள். அங்கு வசித்து வந்த யாஷிடி மக்களை முஸ்லிம் மதத்துக்கு மாறும்படி கட்டாயப்படுத்தினார்கள். மதம் மாற மறுத்தவர்களை அவர்கள் கொலை செய்தனர். தற்போது 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட யாஷிடியினர் பெண்கள் மற்றும் சிறுமிகளை ஐ.எஸ். தீவிரவாதிகள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். அவர்களில் பெண்களை தீவிரவாதிகள் சிலர் திருமணம் செய்திருக்கிறார்கள். மேலும் சிறுமிகளை அவர்கள் விலைபேசி விற்கும் சம்பவங்களும் நடக்கின்றன.

இது தொடர்பான வீடியோ ஒன்று தற்போது வெளியாகி உள்ளது. அதில் தீவிரவாதிகள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள யாஷிடி சிறுமிகளை விலைபேசி விற்பது சம்பந்தமாக பேசும் காட்சி இடம் பெற்றுள்ளது. அதில் நீல நிற கண்கள் உடைய அழகான சிறுமிகளை அதிக விலைக்கு பேரம் பேசும் காட்சிகளும் இடம்பெற்றுள்ளன.

40 முதல் 50 வயதுள்ள ஒரு (Yazidi அல்லது கிறிஸ்துவர்) பெண் 50,000 டொலர் உள்ளது.

30 முதல் 40 வயதுள்ள ஒரு (Yazidi அல்லது கிறிஸ்துவர்) பெண் 75,000 டொலர்கள் உள்ளது.

20 முதல் 30 வயதுள்ள ஒரு (Yazidi அல்லது கிறிஸ்தவர்)பெண் 100,000டொலர் உள்ளது.

10 முதல் 20 வயதுள்ள ஒரு ( Yazidi அல்லது கிறிஸ்துவர்) பெண 150,000 டொலர்கள் ஆகும்.


1 முதல் 9 வயதுள்ள குழந்தையின் விலை ஒரு ( Yazidi அல்லது கிறிஸ்துவர்) 200,000 டொலர்கள் உள்ளன. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஜினி அரசியலில் நுழைய கூடாதாம்

## இளங்கோவன்





தமிழக மக்களால் மரியாதைக் குரிய இடத்தில் வைக்கப்பட்டி ருக்கும் நடிகர் ரஜினிகாந்த் அரசி யலில் என்றுமே நுழையக் கூடாது எனபதே எனது விருப்பம் என்று தமி ழக காங்கிரஸ் தலைவர் ஈ.வி. கே. எஸ்.இளங்கோவன் தெரிவித்தார்.

பி.டி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு அவர் அளித்த சிறப்புப் பேட்டியில், நடிகர் ரஜினிகாந்த் அரசியலுக்கு வரக் கூடாது. இது எனது தனிப்பட்ட கருத்துதான். அவருக்கு அனைத்து அரசியல் கட்சியிலும் ரசிகர்கள் இருக்கிறார்கள்.

மேலும், தமிழக மக்கள் மத்தி யில் மிகுந்த மரியாதை பெற்று ள்ளார். மறைந்த ஜி.கே மூப்பனார் வழியில் வந்த தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கு 1996-ஆம் ஆண்டு ஆதரவு தெரிவித்தார். அதுபோல அவர் தன்னை ஒரு சிறிய வட்டத்துக்குள் சுருக்கிக் கொள்ளக் கூடாது.

ரஜினிகாந்த் மட்டுமல்ல, மத சார் பின்மையோடு இருக்கும் அனை த்து மக்களையும் நான் காங்கிரஸ் கட்சியில் இணைவதற்காக அழை ப்பு விடுக்கிறேன் என்றார்.

1996 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகிய மறைந்த ஜி.கே. மூப்பனார் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியை ஆரம்பித்தார். அதே ஆண்டு அதிமுக தலைமை யிலான அரசை குறைகூறிய நடிகர் ரஜினிகாந்த், அப்போது திமுக வுக்கும் அந்தக் கட்சி தலைமையில் கூட்டணியாக இணைந்த தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கும் ஆதரவு தெரிவித்தார்.

மேலும், ஜெயலலிதா முதல் வராக தேர்வு செய்யப்பட்டால், தமிழகத்தை அந்த ஆண்டவனா லும் காப்பாற்ற முடியாது என்று அவர் கூறினார்.

அப்போது முதலே நடிகர் ரஜினி காந்த் எந்த அரசியல் கட்சிக்கு ஆதரவு அளிப்பார் என்ற எதிர் பார்ப்பு ஒவ்வொரு தேர்தலிலும் இருந்து வருவது குறிப்பிடத்தக் கது. (இ-5)




# சகாயம் குழுவின் விசாரணையினை தமிழக அரசு விரிவுபடுத்த வேண்டும்

## ராமதாஸ் வலியுறுத்தல்

கனிம வள முறைகேடுகள் குறித்து ஆய்வைத்தொடங்க இருக் கும் சகாயம் குழுவின் விசாரணை வரம்பை தமிழக அரசு விரிவுப டுத்த வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் ராம தாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சகாயம் குழு மதுரை மாவட்ட த்தைத் தவிர வேறு எங்கும் விசா ரணை நடத்தக் கூடாது என்று தமிழக அரசு முட்டுக்கட்டை போடு வதாக செய்திகள் வெளியாகினறன.

ஒருபுறம் விசாரணைக்குழு தலைவராக சகாயத்தை அமர் த்திய தமிழக அரசு, மறுபுறம் தற்போது வகித்து வரும் அறிவியல் நகர துணைத் தலைவர் பதவியில் இருந்து விடுவிக்க மறுப்பதேன் என கேள்வி எழுப்பியுள்ளார். இயற்கை வளங்களைக் கொள்ளை யடிப்பவர்களுக்குச் சாதகமான அரசின் இந்த நடவடிக்கையை கண்டிப்ப தாக ராமதாஸ் தெரிவித்தார்.

உயர்நீதிமன்ற ஆணைப்படி, தமிழகம் முழுவதும் விசாரணை நடத்த அனுமதி அளிக்காதது ஏன் என நிலவியல் மற்றும் சுரங்க த்துறை ஆணையரிடம் சகாயம் கேட்டதாகவும், அதற்கு சரியான பதில் அளிக்காததுடன், விசாரணை வரம்பை மாற்றியமைக்கவும் சுரங் கத்துறை ஆணையர் மறுத்து விட்டதாகவும் கூறப்படுவதாக ராம தாஸ் தெரிவித்தார்.


எனவே, தமிழகம் முழுவதும் ஆய்வு நடத்துவதற்கு வசதியாக சகாயம் குழுவின் விசாரணை வரம்பை விரிவுபடுத்த வேண்டும் என தமிழக அரசுக்கு ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார். (இ-5)

# செல்வாக்கு மிக்க தலைவர்களில் பிரதமர் மோடிக்கு 15ஆவது இடம்

உலகின் செல்வாக்கு மிக்க தலைவர்கள் பட்டியலில் பிரதமர் மோடி 15 ஆவது இடத்தை பிடித் துள்ளார்.

அமெரிக்காவிலிருந்து வெளி யாகும் போர்ப்ஸ் பத்திரிகை ஒவ் வொரு வருடமும் உலக அளவில் புகழ்பெற்றவர்களை தேர்ந்தெடு த்து, அவர்களின் செல்வாக்கு மற்றும் புகழ் இன்னும் சில விதிக ளின் அடிப்படையில் வரிசைப் படுத்தி பட்டியலை வெளியிட்டு வருகிறது. இந்த வருடம் இதற்காக உலகம் முழுவதிலும் இருந்து 72 தலைவர்கள் பல்வேறு பிரிவுகளின் கீழ் தேர்வு செய்யப்பட்டனர்.

இந்த பட்டியலில் ரஷ்ய ஜனா திபதி முதலிட த்திலும், அமெரிக்க ஜனா திபதி ஒபாமா இரண்டாவது இடத் திலும் உள்ளனர். சீன ஜனாதிபதி ஷின் ஜின்பிங் 3ஆவது



இடம், போப் பிரான்சிஸ் 4ஆவது இடம், ஜேர்மன் பிரதமர் ஏஞ்சலா மெர்கல் 5ஆவது இடமும், இங் கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் 10 ஆவது இடத்தையும் பிடித் துள்ளனர்.


இந்த பட்டியலில் நமது இந்திய பிரதமர் மோடி 15 ஆவது இடத்தில் உள்ளார். இதே போல இந்தி யாவை சேர்ந்த அனில் அம்பானி 36ஆவது இடத்திலும் , ஆர்சிலர் மிட்டல் நிறுவனத்தின் தலைமை நிர்வாகியான லட்சுமி மிட்டல் 57ஆவது இடத்திலும், மைக்ரோ சொப்ட் நிறுவனத்தில் பணியமர்த் தப்பட்டுள்ள இந்தியர் சத்யநா தெல்லா 64ஆவது இடத்தையும் பெற்றுள்ளனர்.

இந்த ஆண்டு போர்ப்ஸ் பத் திரிகை வெளியிட்டுள்ள பட்டியலில் இந்திய பிரதமர் மோடி மற்றும் எகிப்து ஜனாதிபதி அப்தெல் அசிஸி உட்பட 12 பேர் புதியதாக சேர்க் கப்பட்டுள்ளனர்.

மோடி குஜராத் மாநிலத்தை முன்னேற்றிய விதத்தை போர்ப்ஸ் பத்திரிகை பாராட்டியுள்ளது.

மேலும் கடந்தாண்டு இதே பட்டியலில் செல்வாக்கு பெற்ற தலைவர்கள் வரிசையில் காங் கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கு 21ஆவது இடம் வழங்கப்பட்டிருந் தது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஒசாமா பின்லேடனை சுட்டுக்கொன்ற அமெரிக்க வீரனின் படம் வெளியீடு



உலகையே நடுங்க வைத்துக் கொண்டிருந்த ஒசாமா பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்டதில் ஏகப்பட்ட மர்மங்கள் இன்னும் விலகாமல் உள்ளன. கடந்த 2001 இல் அமெரி க்காவில், நியூயோர்க் நகரில் இரட்டை கோபுர உலக வர்த்தக மைய கட்டடம் மீது விமானம் மூலம் மோதி தாக்குதல் நடத்தப் பட்டது. இதில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். இந்த கொடூர தாக்குதல்களுக்கு காரணமாக விளங்கிய அல்கொயதா தீவிரவாத அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடனை அமெரிக்கா பாகிஸ்தானில் உள்ள அபோதாபா த்தில் 2011 மே மாதம் சுட்டுகொ ன்றது.

40 நிமிடத்தில் அமெரிக்க சீல் சிறப்பு கடற்படையினர், தங்கள் காரியத்தை கச்சிதமாக முடித் தனர்.பின்லேடனை கொல்ல அமெ ரிக்கா அனுப்பிய அதிரடிப்படை கடற்படையை சேர்ந்த சீல் 6 என்ற பிரிவை சேர்ந்தது. ஐந்து ஹெலி கொப்டர்களில் 79 பேர் அபோதாபாத் தாக்குதலில் ஈடுபடுத்தப்பட்டனர்.

பின்லேடனை பார்த்த கணமே, யார் முதலில் சுடுவது என்று நினை க்காமல், அங்கு நுழைந்த மூன்று வீரர்களில் ஒருவர் டுமீல் என்று சுட, அடுத்த நொடிகளில் 5 குண் டுகள் பாய்ந்தன. நெற்றி, மார்பு பகுதியை குண்டுகள் துளைத்தபடி, பின்லேடன் இரத்த வெள்ளத்தில் சரிந்து உயிரிழந்தார்.

சீல் 6 அதிரடிப்படையில் பணி யாற்றிய ராப் ஓ நீல், 38 என்பவர் தற்போது வெளிச்சத்திற்கு வந்து உள்ளார். பின்லேடனை முதலில் பார்த்து சுட்ட நபர்களில் இவரும் ஒருவர். இவர் மிகவும் அருகில் இருந்து பின்லேடனை தலையில் 3 முறை சுட்டுள்ளார். பின்லேடனை சுட்டு கொன்ற பிறகு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, ராப் ஓ நீலுக்கு தனிப்பட்ட முறையில் வாழ்த்து தெரிவித்தார். ராப் ஓ நீல் 400 க்கும் மேற்பட்ட போர் நடவடிக்கைகளில் கலந்து கொண்டு உள்ளார்.. 16 வருடங்களாக சீல் படையின் உறுப்பினராக உள்ளார். ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தான் போர் பகுதிகளிலும் இவர் பணியாற்றி உள்ளார்.இந்த படையின் புகழ் பெற்ற உறுப்பினர்களில் இவரும் ஒருவர். ஆனால் தற்போது இந்த அதிரடி வேட்டை குறித்து பொது இடங்களில் பேசுவது கிடை யாது. (இ-5)

# தற்கொலை செய்த ஹோட்டல் ஊழியருக்கு 3 கோடி இழப்பீடு வழங்குவதற்கு உத்தரவு

(டோக்கியோ)

ஜப்பான் நாட்டில் அதிக வேலை ப்பளுவால் பாதிப்படைந்த உணவு விடுதி ஊழியர் ஒருவர் தற்கொலை செய்துகொண்டார். அந்த வழக்கில் அவரின் உறவினர்களுக்கு 5 இலட்சம் அமெரிக்க டொலர்கள் (சுமார் ரூ.3 கோடி) இழப்பீடு வழங்க அந்நாட்டு நீதிமன்றம் அந்த உணவு விடுதிக்கு உத்தரவிட்டுள்ளது.

டோக்கியோ நகரத்தில் சன் சேலஞ்ச் எனும் பெயரில் உணவு விடுதி ஒன்று செயற்பட்டு வரு கிறது. இதில் பணியாற்றும் ஊழி யர்களில் ஒருவர் மாதத்துக்கு 200 மணி நேரங்களுக்கு மேல் ஓவர் டைம் ஆக பணியாற்ற கட்டாயப்ப டுத்தப்பட்டார். மேலும் அவரை தகாத வார்த்தைகளால் அவரது உயரதிகாரிகள் திட்டியுள்ளனர்.

இதன் காரணமாக மன அழுத் தத்துக்கு உள்ளாகி, அந்த ஊழியர் ஏழு மாதங்களுக்கு முன்பு தற் கொலை செய்துகொண்டார். அந்த ஊழியரின் அடையாளம் வெளி யிடப்படவில்லை. இதுதொடர்பான விசாரணையில், 24 வயதே ஆன அந்த ஊழியர் 2007ஆம் ஆண்டில் இருந்து பணியாற்றி வந்ததா கவும், கடந்த 2009ஆம் ஆண்டு அவர் உணவு விடுதியின் மேலா ளராக நியமிக்கப்பட்டார் எனவும் தெரியவந்துள்ளது.

இந்த வழக்கை விசாரித்த டோக்கியோ நீதிமன்றம் அந்த ஊழியரின் குடும்பத்துக்கு ரூ.3 கோடி இழப்பீடு வழங்க உத்தர விட்டுள்ளது. ஜப்பானில் உள்ள நிறுவனங்கள் தங்கள் ஊழியர் களை நீண்ட நேரம் பணியாற்றக் கட்டாயப்படுத்துவதும், ஓவர்டைம் பணிகளுக்கு ஊதியம் தராமல் இருப்பதும் தொடர்ந்து விமர்சன த்துக்கு உள்ளாகி வருகின்றன.

இதைத்தொடர்ந்து அதிக வேலை ப்பளுவால் இறப்பு எனும் பொருள் தரும் கரோஷி எனும் ஜப்பானிய வார்த்தை கடந்த சில ஆண்டு களுக்கு முன்பு உலக அகராதி களில் இடம்பிடித்தது குறிப்பிடத்தக் கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் தவறுகளை நாமே உணர்ந்து கொள்வதை விட உயர்ந்த மனத்துணிவு வேறு கிடையாது

- ஸ்ரீ அன்னை

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டமளிப்புவிழாவின் போது...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 30 ஆவது பட்டமளிப்பு விழா எதிர்வரும் 10 ஆம் 11 ஆம் திகதிகளில் மிகவும் கோலாகலமாக நடைபெறவுள்ளது.

கல்விச் சிறப்பினை எடுத்துக் காட்டுகின்ற ஒரு பெரும் விழாவாகப் பட்டமளிப்பு விழா நடைபெறுவதை கண்டு உணர முடியும்.

பட்டமளிப்பு விழா நடைபெறும் போது பல்கலைக் கழகத்தில் கற்கை நெறியைத் தொடர்ந்து கொண்டிருக்கும் மாணவர்கள் **கப் கலெக்சன்** என்ற பெயரில் தொப்பிகளை ஏந்தியவாறு பிச்சாடன மூர்த்திகளாக வலம் வருவர்.

காசு சேர்ப்பதற்காக அவர்கள் சுற்றி வளைத்து நடத்தும் தொந்தரவைப் பார்க்கும் போது பல்கலையில் இதுவும் ஒன்றோ! என்று எண்ணத் தோன்றும்.

பட்டமளிப்புப் பெற்றவர்கள் கனிஷ்ட மாணவர்களின் சுற்றி வளைப்பில் திணறியடித்து, கொண்டு வந்த காசுகளை தொப்பிக்குள் போட்டு விட்டு ஒருவாறு விடுதலை பெறுவர்.

இவ்வாறு விடுதலை பெற்றவர்களை இன்னொரு அணி சுற்றிவளைக்கும். இப்படியாக பட்டமளிப்பு நடந்து முடியும் வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகம் முழுவதிலும் தொப்பிப் பாத்திரங்களோடு திரிகின்ற மாணவர்களைப் பார்த்து; மாணவர்களே! நீங்கள் சேர்க்கின்ற இந்தப் பணம் பதுளையில் நடந்த மண்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவா? அல்லது வன்னிப் போரில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி செய்யவா? அல்லது உங்களோடு இருக்கின்ற, நிதி வளம் குறைந்த மாணவர்களுக்கு உதவுவதற்காகவா? என்று கேட்டால் எதற்குமே இல்லை என்பது விடையாக இருக்கும்.

அப்படியானால், இது ஏன் என்றால் எங்களுக்கு முன்பிருந்தவர்கள் கடைப்பிடித்ததை நாம் கைவிட்டால் பண்பாட்டை மீறிய குற்றத்திற்கு ஆளாவோம் என்று நீங்கள் நிச்சயம் பதிலளிப்பீர்கள்.

எனவே பட்டமளிப்பு விழாவில் நடைபெறும் கப் கலெக்சன் என்ற மரபுவழிப் பண்பாட்டை நீங்கள் கைவிடப்போவதில்லை. ஆனால் நீங்கள் கப் கலெக்சனால் சேர்க்கின்ற நிதியை, வெளியில் சொல்ல முடியாத கஷ்டங்களின் மத்தியில்; உங்களோடு இருந்து கற்கின்ற உங்கள் சக மாணவர்களுக்கு உதவுவதற்குப் பயன்படுத்தலாம் அல்லவா?

அன்புக்குரிய பல்கலைக்கழக மாணவர்களே! நீங்கள் இந்த நாட்டிற்கு, எங்கள் இனத்திற்கு, எங்கள் சமூகத்திற்கு முன்மாதிரியானவர்கள்.

வருத்தப்படாத வாலிபர் சங்கம் என்ற பெயரில் இளைஞர்கள் ஒன்று கூடி உதவி செய்ய நினைத்தார்கள் எனில், நீங்கள் **யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டமளிப்பில் பெற்ற நிதி** என்றவாறு உங்கள் கப் கலெக்சனை பயன்படுத்தலாம் அல்லவா? அவ்வாறு பயன்படுத்தினால் உங்களை மற்றவர்கள் வாழ்த்துவர். நாங்கள் தோற்ற இனம் அல்ல என்று மார்தட்டுவர். ஏகப்பட்ட நிதி உங்களிடம் வந்து சேரும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களாகிய உங்களை எங்கள் பிள்ளைகளாக நினைப்பவர்கள் நாங்கள். நீங்கள் எத்தகைய குழப்பங்களைச் செய்தாலும் எங்கள் பிள்ளைகள் என்ற அன்பின் மிகுதியால் அவற்றைப் பொருட்படுத்தாமல், எங்களுக்குள் தாங்கிக் கொள்கின்ற பெரும் மனம் படைத்தவர்கள் தமிழ் மக்கள் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆகையால் அன்புக்குரிய யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களே! 2014 ஆம் ஆண்டில் நடைபெறும் 30 ஆவது பட்டமளிப்பு விழாவில் நீங்கள் சேர்க்கும் பணம் உங்கள் பல்கலைக்கழக தோழர்களின் கஷ்டத்தைப் போக்க உதவட்டும். இந்தப் பேருதவிக்கு நாங்கள் நிதி கொடுத்தோம் என்று பட்டம் பெற்வர்களும் அவர்களைப் பெற்றவர்களும் பூரணதிருப்தி அடையட்டும்.

30 ஆவது பட்டமளிப்பு விழாவில் நாங்கள் சேர்த்த ........ரூபாய் தொகைப் பணம் ஏழை மாணவர்களின் கல்விக்கு பகிர்ந்தளிக்கப்படும் என்ற செய்தியை உங்களிடமிருந்து ஆவலோடு எதிர்பார்க்கின்றோம்.

# வடக்கு மாகாண பெண்கள் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனர்

## அமைச்சர் சுமேதா தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு வாழ் பெண்கள் இன்று மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருவதாக நாடாளுமன்ற விவகார அமைச்சர் சுமேதா ஜயசேன தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் இன்று விவசாய பூமிகளாக மாற்றமடைந்துள்ளன.

குறித்த பிரதேசங்களில் போர் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதனால் அந்தப் பிரதேச பெண்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருகின்றனர்.

நிலக்கண்ணி வெடிகள் பற்றிய அச்சம் கிடையாது. பிள்ளைகள் அச்சமின்றி பாடசாலைக்கு செல்லக் கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் பன்முகப் படுத்தப்பட்ட நிதியின் ஊடாக தலா ஐம்பது இலட்ச ரூபாயினை வழங்கி வருகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துடன் இணைந்து செயறபட்டால் இதனை விடவும் அதிகளவு பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வரவு செலவுத்திட்ட விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் நேற்று முன்தினம் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். (இ-5)

## புகையிரத பாதையை மக்கள் அவதானமின்றிக் கடக்கின்றனர்

### பெரும் ஆபத்து ஏற்படும் என எச்சரிக்கை

கிளிநொச்சி கனகபுரம் வீதியில் அமைந்துள்ள புகையிரதக் கடவையில் சிக்னல் போடப்பட்டு புகையிரத கடவை மூடப்படும் சமயங்களிலும் அக்கடவை ஊடாக பொதுமக்கள் பயணிக்கின்றனர். இதனால் பாரிய விபத்து இடம் பெற்று உயிரிழப்புக்களும் ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. குறித்த புகையிரத நிலையம் கிளிநொச்சி பேருந்து நிலையம், பொதுச்சந்தை ஆகியவற்றிற்கு அருகாமையில் அமைக்கப் பட்டுள்ளது.

இப்பகுதியில் நாளாந்தம் பொது மக்களின் நடமாட்டம் அதிகமாக காணப்படுகின்றது. இந்நிலையில் இப்புகையிரத கடவையில் இருந்து 400 மீற்றர் தூரத் தில் கிளிநொச்சி புகையிரத நிலையம் உள்ளது.

இக்கடவையில்புகையிரதப் பணியாளர்கள் நாளாந்தம் கடமையில் இருந்தும் பொது மக்கள் சிலர் புகையிரதம் வருகின்ற போது நடந்தும் சைக்கிளிலும் மோட்டார் சைக்கிளிலும் இக்கடவையை கடந்து செல்கின்றனர் .இக்கடவை மூடப்பட்டிருந்த சமயம் 5ஆம் திகதி மதியம் 12.30 மணிக்கு கிளிநொச்சியிலி ருந்து கொழும்புக்கு பயணிப்பதற்கு ஆயத்த நிலையில், பொது மக்களில் சிலர் நடந்தும் தமது வாகனங்களிலும் கடவையை கடக்க முற்பட்ட வேளை போக்குவரத்து பொலிசார் அவ்விடத்துக்கு வருகை தந்து அவர்களை கடுமையாக எச்சரித்ததுடன் குற்றப் பணமும் அறவிட்டனர்

அத்துடன் சைக்கிள் சில்லுகளின் காற்றும் பொலிஸாரால் திறந்து விடப்பட்டது.

எனவே இக்கடவையில் போக்குவரத்துப்பொலிஸார் நாளாந்தம் கடமையில் இருந்தால் புகையிரத கடவை மூடப்படும் வேளையில் அவ்வழியாக பயணிப்பவர்களை கட்டுப்படுத்த முடியும்

அத்துடன் விபத்து மற்றும் உயிரிழப்பு க்களில் இருந்து மக்களை பாதுகாக்க முடியும். எனவே மக்களின் நலனை கருத்தில் கொண்ட போக்குவரத்து பொலிசார் குறித்த புகையிரத கடவையை கண்காணிக்க வேண்டுமென சமூக ஆர்வலர்கள் கேட்டுக் கொள்கின்றனர். (அ-2-271)

## தடைசெய்யப்பட்ட தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு எதிராக நடவடிக்கை

தடைசெய்யப்பட்ட இழுவை படகுகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டு வரும் மீனவர்களுக்கு எதிராக மிக விரைவில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள பிரதிப்பணிப்பாளர் நடராசா கணேசமூர்த்தி தெரிவித்தார்.

தடை செய்யப்பட்ட இழுவை படகுகளை பயன்படுத்தி பருத்தித்துறை மீனவர்கள் சிலர் கடந்த ஒரு வார காலமாக மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாக வல்வெட்டித்துறை மீனவர்கள் விசனம் தெரிவித்தனர்.

இது தொடர்பாக கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள பிரதிப் பணிப்பாள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் கடந்த வாரத்தில் பயிற்சிக்காக கம்பஹா சென்றதால் இது தொ்டர்பாக உடனடியாக நடவ்டிக்கை மேற்கொள்ள முடியவில்லை.

தற்போது அவர்கள் பயிற்சி முடிந்து திரும்பியுள்ளனர். ஆகையால் இழுவைப் படகு மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் இனிவரும் நாட்களில் மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார்

யாழ் மாவட்டத்தில் தற்போது 180 வரையான இழுவைப் படகுகள் இருக்கின்றன. அவற்றில் பருத்தித்துறை மீனவர்களிடம் 21 இழுவைப் படகுகள் உள்ளன. இவற்றில், 8 இழுவை படகுகளின் உரிமையாளர்களே கடந்த ஒரு வாரகாலமாக சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாக பிரதிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார் (இ-5)

## 5 பொலிஸார் கைது

(கொழும்பு)

காலி,எல்பிட்டிய அகலிய பொலிஸ் காவலரணில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஒருவர் காணாமல் போனதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினர் ஐவரை கைது செய்துள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் கைதான நபர் ஒரு வருடத்துக்கு முன்னர் காணாமல் போயுள்ளார்.

சம்பவம் தொடர்பில் அகலிய பொலிஸ் காவலரணில் கடமையாற்றிய பொறுப்பதிகாரி உள்ளிட்ட ஐவரையே இரகசிய பொலிஸார் கைது செய்துள்ளனர். (இ)

**அமைதியின் சொற்கள்**

உயிர் என்ற காற்றில் உடல் என்ற விமானத்தில் பறவுங்கள். *பிரேம் ராவத்*

**இஸ்லாம் ஆன்மீக சிந்தனை**

**அன்பளிப்பு கொடுங்கள்**

★ ஒருவரைப் பார்த்து ஒருவர் பொறாமை கொள்ள வேண்டாம்.

★ வெட்கம் நன்மைகளை இழுத்து வரும். உனக்கு வெட்கம் இல்லையாயின் உனது இஷ்டம் போல நடந்து கொள்.

★ இறைவன் ஒரு மனிதனை அழித்துவிட நாடுவானேயானால் அவனிடமிருந்து வெட்கத்தைப் பறித்து விடுகிறான்.

★ நண்பர்களை ஓரளவு விரும்புங்கள். ஒருநாள் அவர்கள் விரோதிகளாக கூடும். விரோதிகளை அதிகமாக வெறுக்காதீர்கள். ஒரு நாள் அவர்கள் தோழராகக் கூடும்.

★ உங்களுக்குள் அன்பளிப்புகளை பரிமாறிக் கொள்ளுங்கள். அன்பளிப்புகளை கொடுப்பது மனதிலுள்ள பொறாமைகளை அழித்து விடுகின்றது.

★ கெட்டவர்களுடன் தோழமை கொள்ளாதே. அவர்களுடன் தோழமை கொண்டால் அவர்களின் கணக்கில் உன்னையும் சேர்த்துக் கொள்ளப்படும்.

★ எவர் தம் சகோதரரிடம் ஒரு வருடம் பேசாமல் இருக்கின்றாரோ, அவர் அந்த சகோதரரை கொலை செய்ததற்கு ஒப்பாகும்.

**வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2014**

"ஒரு மரம் பட்டுப்போகுமாக இருந்தால் பட்ட அந்த மரத்துக்குப் பதிலாக அவ்விடத்தில் இன்னொரு மரத்தை நாட்டுங்கள்"

*-கரலோஸ் இலினேயஸ் (தாவர வகைப்பாட்டியலாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேசைப்பந்தாட்ட அபிவிருத்தி சீன அரசாங்கம் ஒத்துழைப்பு



இலங்கையில் நாடு பூராக வும் மேசைப்பந்து விளையாட்டினை அபிவிருத்தி செய்ய சீன அரசாங்கம் முன் வந்துள்ளது. இதன் முதற்கட்டமாக 25 மாவட்டங்களிலுமுள்ள பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக 250 இலட்சம் ரூபா பெறுமதியான 150 மேசைப் பந்து மேசைகள் சீன அரசினால் அன்பளிப்பாக வழங்கப் பட்டுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ சீன அரசிடம் விடுத்த வேண்டு கோளையடுத்து இவை வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் விளையாட்டு உபகரணங்கள், பயிற்றுவிப்பாளர்கள் உள்நாட்டு மற்றும வெளிநாட்டு பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன. அத்துடன் இவ்விளையாட்டுக்குத்தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களையும் வழங்க சீன அரசு முன்வந்துள்ளது.

இது தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு கடந்த 2ஆம் திகதி கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் இலங்கை மேசைப்பந்து சங்கத்தின் தலைவரும் பிரதியமைச்சருமான லஸந்த அழகிய வண்ணவும் சீன அரசாங்கத்தின் பிரதிநிதியும் கைச்சாத்திட்டனர்.

இலங்கை மேசைப்பந்து சங்கத்தின் ஏற்பாட்டில்கடந்த 2 ஆம் திகதி கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடத்தப்பட்ட 68 ஆவதுதேசிய மேசைப்பந்து விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளின்போது சீன அரசாங்கத்தின் தூதுவர் வூ.ஜியன்கோ பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் இவற்றை வழங்கி வைத்தார்.

அத்துடன்கனிஷ்ட மேசைப் பந்து போட்டிகளில் வெற்றியீட்டிய மற்றும் அண்மையில் தென் கொரியாவில் நடைபெற்ற பரா ஒலிம்பிக் மற்றும் பாகிஸ்தானில் நடைபெற்ற பொது நலவாய விளையாட்டுப்போட்டிகளில் கலந்து கொண்டு இலங்கைக்கு புகழைத் தேடித்தந்த வீரர்கள் அமைச்சரால் இங்கு பதக்கம் அணிவிக்கப்பட்டு கௌரவிக் கப்பட்டனர்.

இந்நிகழ்வில் இலங்கை மேசைப்பந்து சங்கத்தின்பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கனக ஹேரத் மற்றும் விளை யாட்டுப்பிரிவின் பணிப்பாளர் நாயகம் ரன்ஜித் ஜயகொடி உட்பட பலர் கலந்து கொண்டனர். (க)

# ஐ.சி.சி. மக்கள் விருது புவனேஷ்வகுமார் தெரிவு



இந்திய அணியின் வேகப பந்து வீச்சாளர் புவனேஷ்வ குமாருக்கு ஐசிசி மக்கள் தெரிவு விருது வழங்கப்பட்டுள்ளது. இந நிலையில், மக்கள் தெரிவு விருதினை பெற்றுக் கொள்ளும் நான்காவது வீர ராக புவனேஷ்வ குமார் பதிவாகியுள்ளார்.

இதற்கு முன்னர் 2010 ஆம் ஆண்டு முதன்முறை யாக இந்த விருதினை சச்சின் டெண்டுல்கர் பெற்றுக் கொண்ட அதேவேளை, 2011, 2012ஆம் ஆண்டுகளில் குமார் சங்கக்கார இரண்டு தடவைகள் இவ்விரு தினை பெற்றுக்கொண்டார்.

கடந்த வருடம் மஹேந் திர சிங் கோனி இங்க விருதினை பெற்றுக்கொண்டார், அந்த வகையில் இவ்விரு தினை பெற்றுக்கொள்ளும் மூன்றாவது இந்திய வீரராக புவனேஷ்வ குமார் வரலாற்றில் இடம் பிடித்துள்ளார். (க)

விளையாட்டுச் செய்திகள்

# ஐ.சி.சி.டெஸ்ட் அணித் தலைவராக அஞ்சலோ மத்யூஸ் நியமனம்



சர்வதேச கிரிக்கெட் பேரவை டெஸ்ட் மற்றும் ஒருநாள் அணி விபரங்களை சர்வதேச கிரிக்கெட் பேரவை நேற்று அறிவித்துள்ளது.

அதற்கமைய இலங்கை அணித் தலைவர் அஞ்சலோ மத்யூஸ் டெஸ்ட் அணியின் தலைவராக பெயரிடப்பட்டுள்ளார்.

டெஸ்ட் அணியில் இலங்கை அணியைச் சேர்ந்த குமார் சங்கக்கார மற்றும் ரங்கன ஹேரத் ஆகியோரும் இடம்பிடித்துள்ள அதேவேளை, ஒரு நாள் அணியில் அஜந்த மெண்டிஸ் மாத்திரமே இடம் பிடித்துள்ளார்.


டெஸ்ட் அணி விபரம் வருமாறு,

அஞ்சலோ மெத்யூஸ் (அணித்தலைவர்), டேவிட் வோர்னர், கேன் வில்லியம்சன், குமார் சங்கக்கார, ஏ பி டி வில்லியர்ஸ், ஜோ ரூட், மிச்சல் ஜோன்சன், ஸ்டுவர்ட் ப்ரோட், டேல் ஸ்டெய்ன், ரங்கன ஹேரத், டிம் சௌதி, ரொஸ் டெய்லர்

**ஒரு நாள் அணி விபரம்,**

மொஹமட் ஹபீஸ், குவான்டன் டி கொக், விராட் கோஹ்லி, ஜோர்ஜ் பெய்லி, ஏ பி டி வில்லியர்ஸ், மஹேந்திரசிங் தோனி, (அணித்தலைவர்) டுவைன் பிராவோ, டேல் ஸ்டெய்ன், மொஹமட் ஷமி, அஜந்த மென்டிஸ், ரோஹித் ஷர்மா (க)

# சதுரங்க சுற்றுப்போட்டி முடிபுகள்



(குடத்தனை)

வடமராட்சி கல்வி வலயத்தின் தனிநபர் சதுரங்க சுற்றுப்போட்டி யா/ஹாட்லிக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

இப்போட்டியில் முதல்மூன்று இடங்களைப் பெற்றுக் கொண்டவர்கள் விபரம் வருமாறு,

**பெண்கள் பிரிவு**

**வயது 6**

சி.சிவவராகி (யா/ நெல்லியடி மெ.மி.த.க.பா), த.மாதங்கினி (வல்வெட்டித்துறை அ.மி.த.க.பா),ந.கீர்த்திகா (வட இந்து ஆரம்ப பாடசாலை)

**வயது 7**

பி.நதுஷா (யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), தி.அபிஷனா (யா/மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தி, இருவர் மூன்றாமிடம் செ.செந்துஜி (யா/ உடுப்பிட்டி ம.க), யோ.சௌமியா (யா/வல்வை அ.மி.த. க.பா)

**வயது 8**

ர.சானுகா ( யா/மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தி, க.கவிவர்ஷா (யா/நெல்லியடி மெ.மி.த.க.பா), இருவர் மூன்றாமிடம் ப.ஆரணி (யா/நெல்லியடி மெ.மி.த.க.பா), ச.கிருத்திகா (யா/ துன்னாலை வடக்கு மெ.மி.த.க.பா)

**வயது 9**

ந.நிவேதா (யா/ தும்பளை சிவப்பிரகாச ம.வி),இ.சகானா (யா/உடுப்பிட்டி ம.க), இருவர் மூன்றாமிடம் த.ராகவி (யா/ உடுப்பிட்டி ம.க), இ.சங்கரி (யா/கரணவாய் வேதாரணி யேஸ்வரா வித்தி

**வயது 10**

பா.செம்பூவினி- யா/நெல்லியடி மெ.மி.த.க.பா), இருவர் மூன்றாமிடம் மு.வைஷ்ணவி (யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி), அ.சம்பிகா (யா/உடுப் பிட்டி ம.க)

**வயது 11**

க.தனுஸ்கா(யா/நெல்லியடி ம.க), த.துவாரகா (யா/உடுப் பிட்டி ம.க), உ.ஹம்ஷா (யா/வடமராட்சி ம.ம.வி)

**வயது 12**

ஆ.தர்சினி (யா/வடமராட்சி ம.ம.வி), சு.தக்ஷா (யா/வடமராட்சி ம.ம.வி),க.விஷ்ணுஜி (யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

**வயது 13**

பீ.ஜோதினி (யா/மெதடிஸ்த பெ.உ.பா), இ.சாகித்தியா (யா/ மெதடிஸ்த பெ.உ.பா), இருவர் மூன்றாமிடம் வ.துஷாரகா (யா/மெதடிஸ்த பெ.உ.பா), கு.ரிசிரேகா (யா/தொண்டைமானாறு வீ.ம.வி)

**வயது 14**

சி.சுமித்தா (யா/உடுப்பிட்டி ம.க),ஏ.ஆதித்யா (யா/ மெதடிஸ்த பெ.உ.பா), இருவர் மூன்றாமிடம் எம்.விசாகினி (யா/ உடுப்பிட்டி ம.க),ஈ.ராஜினி (யா/மெதடிஸ்த பெ.உ.பா)

**வயது 15**

கு.டர்மி (யா/உடுப்பிட்டி ம.க), சி.சன்சிகா (யா/உடுப்பிட்டி ம.க), தி.தீபிகா (யா/உடுப்பிட்டி ம.க)

**ஆண்கள் பிரிவு**

**வயது 6**

த.சாயப்பிரியன் (யா/நெல்லியடி மெ.மி.த.க.பா), சு.சுகந்தன் (யா/உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தி, இருவர் மூன்றாமிடம் ஜெ.லக்ஸிகன் (யா/உடுப்பிட்டி அ.மி.க), மு.பாரிதியன் (யா/வல்வெட்டித்துறை அ.மி. த.க.பா)

**வயது 7**

யூ.பிரதீதகன (யா/மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தி, பி.பகலவன் (யா/மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தி, பா.ரஜீவன் (யா/துன்னாலை காசிநாதர் வித்தி

**வயது 8**

சே.அபிமன்யு (யா/உடுப் பிட்டி அ.மி.க), ஜெ.ஆற்றலன் (யா/நெல்லியடி மெ.மி.த.க.பா), இருவர் மூன்றாமிடம் தி.சந் தோஷ் (யா/நெல்லியடி மெ. மி. த.க.பா),செ.அபிஷேக் (யா/ நெல்லியடி மெ.மி.த. க.பா)

**வயது 9**

அ.சாகின்ஞ்சை (யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பா), சி.பிரணவன் (யா/கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க.பா), ச.சுரேன் (யா/துன்னாலை காசிநாதர் வித்தி

**வயது 10**

தி.அபிஷேக் (யா/நெல்லியடி மெ.மி.த.க.பா), அ.கவின்ஞ்ஜை (யா/ தம்பசிட்டி மெ.மி. த.க.பா) இருவர் மூன்றா மிடம் மு.அனுதர்சன் (யா/நெல்லியடி மெ.மி.த.பா ), செ.நிவேரகன் (யா/உடுப் பிட்டி அ.மி.க)

**வயது 11**

மு.சந்தோஷ் (யா/ஹாட்லிக் கல்லூரி), சு.சுபாஸ்கர் (யா/ உடுப்பிட்டி அ.மி.க), வி.சாகித்தியன் (யா/ஹாட்லிக் கல் லூரி)

**வயது 12**

ஜெ.ரிஷிகோபன் (யா/ஹாட்லிக் கல்லூரி), ஜ.ஹரிஸ்மேனன் (யா/ஹாட்லிக் கல் லூரி), ஜெ.சயானந் (யா/ஹாட்லிக் கல்லூரி)

**வயது 13**

சுமன்(யா/உடுப்பிட்டிஅமிக), கே.வித்யாசேகர் (யா/ஹாட்லிக் கல்லூரி), வி.லம்போதரன் (யா/ஹாட்லிக் கல்லூரி)

**வயது 14**

த.அபினேஷ் (யா/ஹாட்லிக் கல்லூரி), க.கஜானன் (யா/ ஹாட்லிக் கல்லூரி), அ.சஞ்சைராம் (யா/நெல்லியடி ம.வி)

**வயது 15**

ஆர். உதயதர்சன் (யா/ ஹாட்லிக் கல்லூரி), எஸ்.கோபிதன் (யா/ ஹாட்லிக் கல் லூரி), பி.ஜோய்சன் (யா/ஹாட்லிக் கல்லூரி). (க-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா / இணுவில் இந்துக்கல்லூரி 150 வது ஆண்டில்...

## (1864 - 2014)

## இணுவில் இந்துக் கல்லூரி முதல்வர் திரு.மு.செல்வஸ்தான் அவர்களின் பொன்விழா (50) சிறப்பு மலர்

### வாழ்த்துரை



இணுவை மக்களும் மாணவர்களும் செய்த நற்றவத்தின் பயனாக எமது இந்துக் கல்லூரியின் அதிபராக திரு.முத்துத்தம்பி செல்வஸ்தான் அவர்கள் கடமையேற்றிருக்கிறார்கள்.

கடமை கண்ணியம் கட்டுப்பாடு ஒழுங்கு என்று எல்லாப் பண்புகளும் ஒன்று சேர அமைந்தவர். இவர்கடமையேற்றகாலத்திலிருந்து கல்லூரி ஓங்கி வளர்ந்திருக்கிறது.

மாணவர்கள் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருக்கிறார்கள். இவர் தனது ஐம்பாதாவது வயதைப் பூர்த்திசெய்திருக்கின்ற இவ்வேளையில் அனைவரும் அவரை வாழ்த்துவது மிகப் பெரிய கடமையாகும். எனவே எல்லாம் வல்ல ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையாரின் நல்லாசி கிடைக்க வேண்டி வாழ்த்துகிறோம்.

சிவஸ்ரீ
வை.சோமஸ்கந்தக் குருக்கள்
சிவஸ்ரீ
சோ.அரவிந்தக்குருக்கள்

### பொன் விழா நாயகரை வாழ்த்துவோர்

1. இணுவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்.
2. இணுவில் இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திக் குழு.
3. இணுவில் இந்துக் கல்லூரி அபிவிருத்தி நிதியம்.
4. சாயி நகைமாடம் 185 கே.கே.எஸ். வீதி, இணுவில்.
5. சாயிபிரிண்டர்ஸ் கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில்.
6. சக்திவேல் காட்வெயர் கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (இணுவில்)
7. கண்ணன் களஞ்சியம் பல் பொருள் அழகு சாதன பொருட்கள் மொத்த விற்பனை நிலையம் கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில்.
8. Unigue Video Complex & Photo Inuvil Sounth
9. A.T.C கல்வி நிலையம் இணுவில்.
10. K.T.C கல்வி நிலையம் கோண்டாவில்.
11. டயமன் ஸ்ரோட்ஸ் சுன்னாகம்.
12. இணுவில் பொது நூலகம்.
13. இணுவில் திருநெறிய தமிழ் மறைக் கழகம்
14. அறநெறிப் பாடசாலை இணுவில் பரராஜசேகர பிள்ளையார் கோவில்
15. CHILDREN ' S WORLD கோண்டாவில் மேற்கு.

### (12.09.2012) அதிபர் பொறுப்பேற்று இன்றுவரை சாதனை



**2013 பல்கலைக்கழக அனுமதி**

1. செல்வன் ம.பிரதீபன்
2. செல்வன் க.நிவாசன்
3. செல்வன் வ.வசீகரன்
4. செல்வி இ.பத்மினி
5. செல்வி ப.வித்திரா
6. செல்வி க.சுஜிதா
7. செல்வி ம.திசானி

**2013 தேசியமட்ட பரிசு பெற்ற மாணவர்கள்**

1. க.பொ.த (சா/த) சிறந்த பெறுபேறு வி.நர்த்தனன்
2. க.பொ.த (உ/த) சிறந்த பெறுபேறு வ.துவாரகன்

**2014 பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்கள்**

1. செல்வன் வரதராசா துவாரகன்
2. செல்வி சுஜிதா தர்மலிங்கம்

**2014 மாகாண மட்ட போட்டிகளில் பரிசு பெற்ற மாணவர்கள்**

1. வி.அராமி – சிங்களப் பேச்சுப்போட்டி மாகாணமட்டம் (2013) 3 ஆம் இடம்.
2. ற.மௌனிகா – சிங்களப் பேச்சுப்போட்டி மாகாணமட்டம் (2013) 3 ஆம் இடம்.
3. அ.ஷாகித்திய கருமாரி – மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டி (2014) தனி நடனப்பிரிவு IV 3–ம் இடம்.
4. ற.கீர்த்திகா – சிங்களப் பேச்சுப்போட்டி மாகாணமட்டம் (2014) 3 ஆம் இடம்.

**தேசிய மட்ட பரிசு பெறும் மாணவர்கள்**

1. செ.தருக்சன் – இலங்கையின் ஐக்கிய ஒருமைப்பாடு சித்திர போட்டி முதலாம் இடம்.
2. ற.லக்ஷியா – World blood donor Day 11th Global Celebration சித்திர போட்டி முதலாம் இடம்.
3. ப. மனோஜா – ஆறுதல் பரிசு
4. வி.லக்ஷாயினி – ஆறுதல் பரிசு
5. தரம் 5 புலமைப்பரிசில் சித்தி 2014 உயர் புள்ளி 166 செல்வன் தா.டிலக்ஷன்
6. க.பொ.த. சாதாரண சிறந்த பெறுபேறு செல்வி ர.தர்சிகா
7. க.பொ.த. உயர்தரம் சிறந்த பெறுபேறு செல்வன் நா.றபேசன்.

### இணுவில் இந்துவின் விடிவெள்ளி



யா/இணுவில் இந்துக்கல்லூரியின் அதிபர் திரு.எஸ். செல்வஸ்தான்அவர்கள் பொன்விழாக் காண்பதையிட்டு கல்லூரிச் சமூகம் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றது. அவர் கல்லூரியின் அதிபர் பதவியைப் பொறுப்பேற்றதிலிருந்து கல்லூரி அடைந்து வரும் வளர்ச்சியைக் கண்டு நாம் எல்லோரும் வியந்து நிற்கின்றோம்.

பௌதிகவள அபிவிருத்தியிலும் கல்வி வளர்ச்சியிலும் அவர் காட்டி வரும் அக்கறை இணுவில் இந்துக் கல்லூரியை மிக உயர் நிலைக்கு இட்டுச்செல்லும் என்பதில் ஐயமில்லை. அவரது அர்ப்பணிப்புடன் கூடிய சேவையினால் கல்லூரிச் சமூகமே அவர் பின்னால் திரண்டிருப்பதனைக் காணமுடிகின்றது.

மாணவர்களை அரவணைப்பதிலும் ஆசிரியர்களது ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்வதிலும் அவர் காட்டிவரும் ஆர்வம் போலவே பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திக் குழு, பாடசாலை கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் போன்ற அமைப்புக்களுடன் நெருங்கிய தொடர்பினைப் பேணிவருவது பேருவகை அளிக்கின்றது.

கல்லூரி மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் அடைந்து வரும் சாதனைகள் அவரின் வழிகாட்டலின் திறமையை வெளிப்படுத்துகின்றது.

அவர் எதிர் காலத்தில் பல சாதனைகளைப் படைக்க எல்லாம் வல்ல பரராஜசேகரப் பெருமானை இறைஞ்சு வதுடன் அவர் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் மகிழ்வாக வாழ வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் க.தேவராஜா
இணுவில் இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கப்போசகர்

### பொன்விழா நாயகனாயின்று மகுடந் தாங்கினாய் வாழி ! இணுவில் இந்துக்கல்லூரி அதிபரே வாழி !



ஆழிசூழ் இலங்கை மணித் திருநாட்டின் இலங்கிடும்
சுன்னாகப் பதிசிறக்க வென வந்தோய் !
ஊழி நாள்வரை ஆசிரியராய் உழைத்த முத்துத்தம்பி
தம்பதியர் தவத்தாற் பெற்ற செல்வஸ்தானே
வாழி ! பொன்விழா நாயகனாயின்று மகுடந்தாங்கினை வாழி !
நலங்கினர் இந்துக் கல்லூரி நல்லதிபரே வாழி !
ஊழி தோறூழி பேரும்புகழும் பெருவாழ்வும் பெற்று
கல்வி பணி செய்து மங்கலமாய் வாழி ! சிறந்து

தனங்களிற் சிறந்தது வித்தியாதானம் என்ற மூத்தோர்
சான்றோர் வாக்குப் பொய்காது வாழி !
பன்னலப் பணியால் சிறந்த மாணவரை உருவாக்கித்
தந்து கல்லூரி அன்னை மகிழ இணுவில் மகிழ வாழி !
தன்னலங் கருதாப் பணியில் கட்டடம், கல்வி, கவின்கலை
வளர வாழி ! மங்கல வாழ்வு செழித்து மனைவி மக்களுடன் வாழி !
உன் பணி கண்டு உவந்தே கந்தனும் கணபதியும் மனங்குளிர்ந்தார்
நன்றேசெய்து நலமுடன் நீடூழி வாழி ! வாழி !

ஆக்கம் : காலபூசணம் பண்டிதை
திருமதி.வை.கணேசபிள்ளை

### பழைய மாணவ சங்கச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி



இன்றுடன் அகவை ஐம்பதில் கால் பதிக்கும் எங்கள் கல்லூரி அதிபர் திரு.முத்துத்தம்பி செல்வஸ்தான் அவர்கள் எம் கல்லூரிக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். ஏன் எனில் அவர் தான் கால்பதித்த பாடசாலைகளில் கல்வி வளர்ச்சியிலும் இணை பாட விதானச் செயற்பாடுகளிலும் அவற்றின் பெருமைகளை நாடறிய உலகறியச் செய்தவர்.

அந்த வகையில் எம் பாடசாலையிலும் அவர் கால்பதித்த பின்பு ஏற்பட்ட முன்னேற்றம் அனைவரும் அறிந்ததே. எம் பாடசாலைத் தாயின் பெருமைகளை உலகறியச் செய்ய வைத்திருக்கும் எம் கல்லூரி அதிபர் திரு.மு.செல்வஸ்தான் அவர்கள் மேன்மேலும் பல சிறப்புகளைப் பெற்று வாழ்ந்திட வாழ்த்துவதோடு அவரின் சேவைக்கு உறுதுணையாக நிற்கும் அனைத்து ஆசிரியர்களை இந் நாளில் வாழ்த்துகின்றேன்.

ச.முகுந்தன் – செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
யா / இணுவில் இந்துக்கல்லூரி

### இணுவில் இந்துவின் காவலனே வாழி வாழி



இணுவில் இந்துவின்
இனிய காவலனாய்
இன்று 50வது அகவைகாணும்
இந்துவின் அதிபரான
செல்வமே ! கல்வியெனும்
செல்வஸ்தான் அதிபரான
சொல்வளம் மிக்க செம்மல்
செயல் வீரன்காண்பீரங்கே!
கடமையே கண்ணியமாய்
காலையில் எழுந்துவந்து
கதவுகள் திறந்து அங்கே
கல்வியை தொடக்கி
வைப்பாய்

அன்பாக ஆசிரியர் மேல்
அளவிலா கருணை காட்டி
பணிகளை செய்ய வைக்கும்
பக்குவம் உனக்கு உண்டு
பள்ளியில் கல்வி மேன்மை
பல பல சாதனைகள்
நல்லபெறுபேறு
நலமே கிடைக்கவைத்து
பள்ளியின் வடிவம் தன்னை
பல மாடிக்கட்டமாய்
துள்ளியே வளரவைத்தாய்
துடிப்புடன் செப்பச் செய்தாய்
பழைய மாணவரைபண்போடு
அரவணைத்தாய்
பண்பான பெற்றோரை பணிவோடு
போற்றி நின்றாய்
பலபேரை இணைய வைத்து
பல் நிதி பெருகச் செய்தாய்
இந்துவின் தலைவன் நீயே !



இந்து அன்னையை
வளர்ப்பாய்இனிமையாய்
வாழ்த்துகிறோம்
இன்புற்றே வாழி வாழி
இணுவில் இந்துவின் அதிபராக
பல்லாண்டு வாழி ! வாழி !

ஞான திருக்கேதீஸ்வரன்
தலைவர்
இ.இ.பழைய மாணவர் சங்கம்

இரா.அருட்செல்வம்
இணுவில் இந்து
பழையமாணவ சங்க
கல்வி அபிவிருத்திக் குழு
இணைப்பாளர்

### பொது நூலகத்தினரின் வாழ்த்துச் செய்தி

இன்று பொன்விழா காணும் இணுவில் இந்துக் கல்லூரியின் அதிபர் திரு.செல்வஸ்தான் அவர்கள் இணுவில் பொதுநூலக செயற்பாடுகளுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கும் உன்னதசெயற்பாட்டாளர்.

எமது நூலகத்தினுடைய விளையாட்டுக்கழகமாகிய லம்போதரா விளையாட்டுக்கழகத்தின் பயிற்சிக்காக கல்லூரியின் விளையாட்டு மைதானத்தை தந்துதவுவதில் இருந்து பாலர்பாடசாலை விளையாட்டு விழா, ஆண்டுவிழாவின் போதானவிளையாட்டுப்போட்டிகளுக்கும் மைதானத்தை தந்துதவுவார்.

அத்துடன் கல்லூரியின் 150–ம் ஆண்டுஅகவையைமிகவும் உன்னதமாக நடத்தும் பெருமையையும் பொன்விழா நாயகன் பெறுகின்றார். மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் இணுவில் இந்துக் கல்லூரியுடன் இணுவில் பொதுநூலகத்தினையும் திறம்பட இணைத்துச் செல்லும் அதிபருக்கு எமது நூலக நிர்வாகத்தினரும் அங்கத்தவர்களும் மனமார்ந்த பொன்விழா வாழ்த்துக்களை தெரிவிக்கின் றோம். அவர் கல்விச் சமூகத்தில் உயர் நிலையை அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ம.ஜெயகாந்தன் – செயலாளர்
இ.பொ.நூ

ச.சிவசங்கர் – தலைவர்
இ.பொ.நூலகம்,
சனசமூகநிலையம்.

### பொன்விழா காணும் நாயகனை வாழ்த்துவோம்



எமது பாடசாலையின் அதிபர் திரு.மு.செல்வஸ்தான் அவர்கள் இன்று 07.11.2014தனது50ஆவது பிறந்ததினபொன்விழாவை கொண்டாடுகின்றார். அவரது சேவை எமது பாடசாலைக்கு மேன் மேலும் தேவை. எனவே பல்லாண்டுவாழ மனமாரவாழ்த்துகின்றேன்.

க.பரமேஸ்வரன்
பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர்
(தொழில்நுட்ப உத்தியோகத்தர் வலி தெற்கு பிரதேசசபை)

### பொன்விழா வாழ்த்து

இணுவில் இந்துக் கல்லூரி நூற்றி ஐம்பதாவது நிறைவு விழாக் காணும் இவ்வாண்டில் 07.11.2014 ல் பொன்விழா நாயகனாக விளங்கும் அதிபர் திரு.முத்துத்தம்பி செல்வஸ்தான் அவர்களைவாழ்த்துவதில்பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.

இக் கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்றுக் குறுகிய காலத்தில் மாணவர்களின் கல்வி அபிவிருத்தியுடன் அவர்களது ஆற்றல், திறன், மனப்பாங்கு வெளிப்பாடுக்களை ஊக்குவிக்கும் வகையில் கவிதை, விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்ட வழி சமைத்துக் கொடுத்தமை பேற்றுதற்கு உரியது.

இச் செயற்றிட்டங்களுடன் 150 வது ஆண்டு விழாவும், அது சார்ந்த சிறப்பு மலரும் வெளிவர ஆசிரியர் கழகம், மற்றும் கல்லூரியுடன் இணைந்த அமைப்புக்களும் இணைந்து செயலாற்ற ஒரு உறவுப்பாலமாகத் தாங்கள் செயற்படுவதை கல்வியுலகம் வாழ்த்துகிறது.

மேலும் எமது கல்லூரி தங்கள் நீண்ட சேவையால் வளம் பெற்று முதன்மையான பாடசாலையாகத் திகழ வைப்பீர்கள் என நம்புகின்றோம்.

இந்த வகையில் 150 வது ஆண்டு விழா ஞாபகார்த்த மண்டபத்தினை உருவாக்கிக் கொண்டு இருக்கும், இணுவில் இந்துக் கல்வி அபிவிருத்திநம்பிக்கை நிதியத்தினரும், கட்டடக் குழுவினரும் மனப்பூர்வமாக வாழ்த்துவதோடு மேலும் பல்லாண்டு மங்கலமாய் நற்சுகப் பேற்றுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்க இந்துக் கல்லூரி அதிபர்!
வாழ்க பொன்விழா நாயகன்!

இணுவில் இந்துக் கல்வி
அபிவிருத்தி நம்பிக்கை
நிதியத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை...

பின் 14 (1) பிரிவின்படி உள்நாட்டுக்குள் பிரஜைகளுக்கு உள்ள நடமாடும் சுதந்திரத்தை உத்தரவாதப்படுத்துகின்றது,

அதேபோன்று, ஒருவர் இலங்கையின் பிரஜையாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், அவர்கள் மீது இலங்கை அரசாங்கம் எதேச்சாதிகாரமான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதை அரசியலமைப்பின் 12 (1) பிரிவு தடைசெய்கின்றது.

இலங்கை அரசாங்கம் நாடாளுமன்ற சட்டத்தையோ அல்லது அவசரகால சட்டத்தையோ அடிப்படையாகக் கொண்டே நாட்டில் பயணத் தடைகளை அறிவிக்க முடியும் என்று நீதிமன்றத் தீர்ப்புகள் ஏற்கெனவே தெளிவாகக் கூறியிருக்கின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதித்துறையின் சுதந்திரத்துக்காக குரல் கொடுத்து வரும் வழக்கறிஞர்களுக்கான கூட்டமைப்பு, சட்டவிதிகள் இல்லாத இடத்தில் நிர்வாக ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு உள்ளிட்ட எந்தவொரு அரசாங்க நிறுவனத்துக்கும் அதிகாரம் இல்லை என்றும் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போரினால் பாதிக்கப்பட்டு வெளிநாடுகளுக்குச் சென்ற இலங்கையர்கள் தங்களின் குடும்ப உறவினர்களை சந்திப்பதற்கான உரிமையை இலங்கை அரசாங்கம் மறுக்க முடியாது என்று இவ்வமைப்பின் ஏற்பாட்டாளர் லால் விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையால் பாதிக்கப்படுவர்கள் எவராவது தங்களின் உதவியைக் கோரினால், தாங்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அவர்களுக்கு உதவத் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

# சீன போர்க்...

பட்டுச் சென்றுள்ளதாக இலங்கை கடற்படையின் குரல்தரவல்ல அதிகாரி கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் பல்வேறு நாடுகளின் 238 போர்க் கப்பல்கள் இலங்கைக்குள் பிரவேசித்துள்ளன.

சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல் அல்லது போர்க்கப்பலின் இந்தப் பயணங்களால் பிராந்தியத்தின் பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படாது. எரிபொருள் நிரப்புவதற்காகவும், கப்பலின் மாலுமிகள் ஓய்வெடுப்பதற்காகவுமே சீனாவின் கப்பல்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

ஏந்த வெளிநாட்டுப் போர்க்கப்பல்களையும் வரவேற்பது இலங்கை கடற்படையின் வழக்கம். இது சர்வதேச பாதுகாப்புக்கு குந்தகத்தை ஏற்படுத்தாது என்று மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

# 13 மாவட்ட...

ஹெராயின் போதைப் பொருள் கடத்தியதாக கைது செய்யப்பட்டு இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

அவர்களுடன் இலங்கை மீனவர் மூவரும் பிடிபட்டனர். இந்த வழக்கில் எட்டுப் பேருக்கும் கொழும்பு மேல் நீதிமன்றம் கடந்த 30ம் திகதி மரண தண்டனை விதித்தது.

மேல் முறையீடு செய்ய வரும் 14ம் திகதி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இந்த தீர்ப்பு தமிழகம் முழுவதும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. தமிழக மீனவர்களுக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையை எதிர்த்து இந்திய மத்திய அரசு இலங்கை உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்யவுள்ளது.

இந்த வழக்கில் மீனவர்களுக்கு இந்திய அரசு ஆதரவு அளிக்கும் என்றும், மீனவர்களை விரைவில் விடுவித்து, இந்தியாவுக்கு அழைத்து வர அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும் ஏன்றும் மத்திய அரசு உறுதியளித்துள்ளது.

ஆனாலும் மேல்முறையீடு செய்ய கொடுக்கப்பட்ட கால அவகாசம் முடிய இன்னும் 9 நாட்களே உள்ளன. ஆனால் இதுவரை மேல்முறையீடு செய் யப்பட வில்லை. இது மீனவர்களுக்கு பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. மத்திய அரசு விரை ந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தியுத்தி மீனவர்கள் தமது உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். (செ-11)

# ‘கடற்படை...

குளம் பகுதி உள்ளது. இதனால் அப்பகுதியில் வசித்த தமிழ் மக்கள் தொடர்ந்து அகதி வாழ்வு வாழ்கின்றனர்.

2012ஆம் ஆண்டில் பாதுகாபபுச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் நாம் நடத்திய சந்திப்பின்போது இந்தப் பகுதியை கடற்படையினர் உடனடியாக விடுவிப்பர் என அவர் எமக்கு உறுதியளித்தார்.

ஆனால், அந்த வாக்குறுதி இரண்டு வருடங்களாகியும் நிறைவேறவில்லை. இந்நிலையில், நாம் மீண்டும் அவரை சந்தித்து கடற்படையினரை முள்ளிக்குளம் பகுதியில் இருந்து உடனடியாக விலக்கி அந்தப் பகுதியில் தமிழ் மக்களை மீள்குடி யேற்றுமாறு வலியுறுத்தியுள்ளோம் என்றார்.(செ-11)

# ஐ.நாவுக்கு...

மைகள் ஆணையாளர் பணியகத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்த விசாரணைகளை இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் நிராகரித்து வருகின்றமை தெரிந்ததே. (செ-11)


**American InnovageInternational (Pvt) Ltd**

**பதவி வெற்றிடம்**

American Innovage நிறுவனத்தின் புதிய கிளைகள் ஆரம்பமாக இருப்பதனால் அதற்கான பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

STORE KEEPER, ADMINISTATOR SUPERVISOR, ASS.MANAGER, MANAGER

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. O/L, A/L படித்து முடித்தவர்கள் உடனடியாக விண்ணப்பியுங்கள். (8248)

தொடர்புகளுக்கு:-0776219536, 0775127011

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

- மலேசியாவில் படிக்க பகுதிநேரமாக 60,000/- வரை உழைக்க O/L மட்டும் போதும்.
- சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, இத்தாலி, ஜேர்மனி உட்பட 26 நாடுகள் பறக்க 100% விசா உறுதிப்பாடு.
- அனைத்து நாடுகளிற்கும் Visit visa, மறுக்கப்பட்ட விசா, Student visa ஆலோசனை.
- ஆஸ்திரேலியா குடும்ப விசா ஆலோசனை.

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**



175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
(சி-8982)

**பொருளியல்**
**K.பிரதீபன்**

மாணவர்கவனத்திற்கு
எனது வகுப்புக்கள் பின்வரும் இடங்களில் மட்டும் நடைபெறுகின்றன.

BEACON-யாழ்நகர்
CCA-சுன்னாகம்
Accounting Collage கல்வியங்காடு
AAC-அரியாலை

A/L 2015 மாணவர்களுக்கு தேர்ச்சி 1-11 வரையான மாதிரி பரீட்சைகள் ஆரம்பம்.
வெளி மாணவரும் பங்கு பெறலாம்.
பதிவு இறுதி நாள்:-31.11.2014
வெலிங்டன் யாழ்நகர்

**BEACON - Tech-City**

தொழில்நுட்பப் பாடங்களிற்கு தனித்துவமான கல்வி நிறுவனம்.

- ✓ உரிய செயன்முறை வகுப்புக்கள்
- ✓ திறமையான மாணவர்களிற்கு விருதுகள்
- ✓ பெற்றோருடன் நேரடித் தொடர்பு
- ✓ நியாயமான கட்டணங்களுடன்

**உங்கள் பிள்ளைகளின் கல்விக்கு நாம் உத்தரவாதம்**

**பாட நெறிகள்**

✓Engineering Technology ✓Science and Technology ✓Bio Technology ✓Economics ✓Accounting ✓Business Studies ✓Media ✓Tamil Language ✓ICT ✓Geography other Choice Subjects

மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக மிக விரைவில் எமது இணையத்தளம் www.beacon-t-city.com சகல பாடங்களுக்குமான பயிற்சி வினாத்தாள்கள் மற்றும் பாடக்குறிப்புக்களை பார்வையிடலாம்.

தொடர்புகளுக்கு:-
0714547464 & 0778429817
வெலிங்டன் சந்தி. யாழ் நகர். (சி-8979)

THE FIRST TIME யாழ்ப்பாணத்தில் முதல் முதலாக

2880 DPI



Gongzheng Thunderjet Digital Printer
(World Color Digital Technology)

NEW Photo Quality Printing

Jana Digital 0770731654

Photo Quality 40/=
Normal Quality 35/=

- பந்தல் பிறிண்டிங்
- பனர் பிறிண்டிங்
- விளம்பரப் பதாகைகள்
- ஸ்ரிக்கர்கள்
- லைட் பதாகைகள்

Light Board - 1Side - 450/= 2 Side - 500/=
Name Board - 1Side - 160/= 2Side - 230/= 1Side - 210/= 2Side - 320/=
3 வருட உத்தரவாதம்

Sticker Print 70/=
Backlit Print 70/=

ஜனா டிஜிற்றல் பிறிண்டிங்
மானிப்பாய் வீதி, ஆறுகால் மடம்.
021 221 3233, 077 073 1654

**BCHS**

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

**After A/L What Next???**

இன்னும் சில நாட்களில் நீங்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், படித்துப் பட்டதாரியாக வேண்டும் அல்லது வேறு உயர் கற்கை நெறிகளைக் கற்க வேண்டும் அல்லது போட்டித் தொழிற்சந்தையிலே நல்ல வேலை வாய்ப்பை பெற வேண்டும், இவ்வாறான உங்களின் கனவுகள் நனவாக வேண்டுமெனில், நீங்கள் வாழ்க்கையில் வளர்ச்சிபெற வேண்டுமெனில் தற்போதைய காலகட்டத்தில் ஆங்கில அறிவு மிக மிக அவசியமானது

**Spoken English With Grammar - Quick Learning Course**

Duration: (1 1/2 Months)

- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம்.
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில்நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

**நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.**

**Diploma In English** Duration: (2 Months)

தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும் சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நானாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.

**B1 Exam** Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும். Duration: (2 Months)

**IELTS** Acadamic/General — We do Official Online Registration for Exam Candidates — Duration: (2 Months)

(International English Language Testing System)

Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

**We gurantee success rate 6.5 band and above**

**A1 Exam** Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது
நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
Duration: (2 Months)

08th Saturday 2014@8.00am
09th Sunday 2014@11.00am
10th Monday 2014@09.00am
12th Wednesday 2014@03.00pm

No.15, Sirambiyady Lane, Jaffna (Near Ariyakulam Junction & Sathosa). Tel :021 222 4550
No 3, 6th Lane, VairavarKovil Rd, Vairavapuliyankulam, Vavuniya. Tel:0243245287
Head Office. No.30 1/5, W.A. Silva Mawatha, Colombo -06. Tel 0112500207
Hot Lines : 0777585913, 0777222422, 0714299935


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org